மகாராணியின் அலுவலக வழி

மு. பழனியப்பன்



மகாராணியின் அலுவலக வழி

முனைவர் மு. பழனியப்பன்
இணைப்பேராசிரியர்,
மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி
புதுக்கோட்டை

NCBH

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை- 600 098.
போன் : 26359906, 26251968, 26258410

Language : Tamil

MAHARANIYIN ALUVALAKA VAZHI

Author : **Mu. Palaniyappan**

First Edition : June, 2010

Publisher
New Century Book House Pvt. Ltd.
41-B Sidco Industrial Estate, Ambattur, Chennai - 600 098.
Tamilnadu State
India.
Email : ncbhbook@yahoo.co.in

Branches

Chennai 044-2852 8351, 044-26359906, 044-24404873 Trichy 0431-2700885 Madurai 0452-2344106, 2350271 Tirunelveli 0462-2323990 Coimbatore 0422-2380554 Salem 0427-2450817 Vellore 0416-2234495 Tanjore 04362-231371 Pondicherry 0413-2357403 Dindigul 0451-2432172 Hosur 04344-245726 Ooty 0423-2441743.

ISBN No.978 - 81 - 234 - 1787 - X
Code No. A 2171
Rs. 60.00

அச்சிட்டோர் : எம்.கே. கிராபிக்ஸ்,
சென்னை-600 021.
தொலைபேசி: 9840828213

பதிப்புரை

தற்காலத்தில் பொதுவாக மகளிர் நிலைமை குறித்தும் கல்வி கற்றுப் பணிக்குச் செல்லும் மகளிர், இலக்கியம் படைக்கும் ஆற்றல் பெற்றுள்ள மகளிர்தம் படைப்புக்கள் குறித்தும் சமுதாயத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களின் நிலை ஏற்றம் அடையாமை குறித்தும் அறிஞர்களும் சமூகப்புரட்சியாளர்களும் எண்ணற்ற நூல்களைப் படைத்து வருகின்றனர். அவ்வகையில் பதுக்கோட்டை, மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி இணைப்பேராசிரியர் **முனைவர் மு. பழனியப்பன்** அவர்கள் **'மகாராணியின் அலுவலகவழி'** என்னும் தலைப்பில் மகளிர் நிலைமை அன்றும் இன்றும் என்பது குறித்து இருபது தலைப்புக்களில் ஓர் அரிய நூலைப் படைத்துள்ளார். பெண்ணியக் கண்ணோட்டத்துடன் இயற்றப்பெற்ற ஓர் ஆய்வு நூல் என்றே இதனைச் சுட்டலாம்.

பெண்ணியத் திறனாய்வின் அடிப்படையில் பெண்ணெழுத்துக்களின் திறனைப்போற்றியும், ஆண் படைப்புக்களில் பெண்களுக்கெதிரான கருத்துக்கள் வெளிப்படுத்தியுள்ளமைக்கும் ஆதாரமான கூற்றுக்கள் இந்நூலில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

அயல் நாடுகளில், குறிப்பாக அமெரிக்காவில் பல இனக்குழுக்கள் சேர்ந்த ஓர் அமைப்பே இளம் பெண்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்குப் பல வகையிலும் உதவிவருவதையும் தமிழகத்தில் பெண் குலத்தின் அவல நிலையையும் ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பத்துப்பாட்டு, கலித்தொகை போன்ற இலக்கியங்களில் பெண் புலவர்களின் பாடல்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமையையும், இறைவனால் அதிக நிகழ்வுகளில் ஆட்கொள்ளப்பட்ட அடியார்களின் திருமுறைகளுக்கு முன்னிடம் கொடுத்தும் காரைக்காலம்மையாரின் திருமுறை 11-ஆம் திருமுறையாகப் பின்தள்ளப்பட்டும் உள்ளமையைக் குறிப்பிட்டு ஆசிரியர் நம்மைச் சிந்திக்கவைக்கிறார்.

நீலாம்பிகையாரின் கட்டுரைகளில் பெண்ணியம் மிளிர்வதையும், பெண்களுக்கெதிரான சொல்லாடல் தவிர்க்கப்பட்டும் உள்ள பாங்கினை ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார்.

சமூகம், மொழி, உடல் ஆகிய முத்தளங்களின் பெண்ணியக் கவிதைகள் வளர்ந்துவருவதையும் இலக்கியங்களில் பெண்மை பற்றிய விழிப்புணர்வு மலரத் தொடங்கிவிட்டது என்பதையும் கவிஞர்களின்

படைப்புக்களின் வாயிலாக இந்நூலில் தெளிவாக அறியமுடிகின்றது.

பாரதியின் பெண் விடுதலைக் கூறுகளைப் பட்டியலிட்டு அவற்றில் பல இன்னமும் எட்டப்படாமை குறித்தும் நமக்கு நினைவுபடுத்தப்படுகிறது.

தற்காலத்தில் சில குறிப்பிட்ட துறைகளில் மகளிர் தாம் கற்ற கல்வியாலும் பல துறை ஆற்றலாலும் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். மேலும் இலக்கியத்துறையிலும் படைப்பாற்றல் பெற்று நூல்களை இயற்றிப் புகழுடன் திகழ்கின்றனர். இந்நிலை நாளுக்கு நாள் உயர வேண்டும் என்ற வேணவா மீக்கூர, இந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் நம்மையும் மகளிர் மேம்பாட்டுக்கு உதவுதலில் முன்னிற்கத் தூண்டுகிறது.

'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்' - என்ற பாரதியின் கூற்றை ஏற்கும் ஆசிரியர், தமிழ்நாட்டில் பண்டுதொட்டு இன்றுவரை மகளிர்தம் நிலைமையைத் தக்க ஆதாரங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ள இந்நூலை இருபாலாரும் படித்தால் மகளிரின் முன்னேற்றத்திற்குத் தம்மாலான தொண்டுகளை விரைந்து செய்ய முன் வருவர் என்பது நிச்சயம். இந்நூலுக்கு வாசகரிடையே அமோக வரவேற்பு இருக்கும் எனக்கருதி இந்நூலை வெளியிட வாய்ப்பளித்த ஆசிரியருக்கு நன்றி கூறி எமது பதிப்பகம் இந்நூலை வெளியிடுவதில் பெருமை கொள்கிறது.

- பதிப்பகத்தார்.

மனிதமொழி செம்மைநெறி அடுத்த தளம்

கவிஞர் இரா.மீனாட்சி,
உறுப்பினர், சாகித்ய அகாதமி தமிழ் ஆலோசனைக்குழு,
தமிழ் மரபு மையம், ஆரோவில், தமிழ்நாடு, 605101
மின்னஞ்சல்:

படைப்பாற்றல் எல்லாரிடமுமே குவிந்துள்ளது. எழுத்துவன்மை பலரிடம் மிகுதியாக உள்ளது. சென்ற காலங்களைவிட நிகழ்காலம் பலரது எழுத்துப் படைப்புக்களை நூல் வடிவில், கணினி வலைப் பூக்களில், குறுந்தகடுகளில் பதிவாக்க வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டே இருக்கிறது. ஊடகங்கள் எழுதுவோரை ஊக்கப்படுத்துகின்றன. மக்களிடம் நேராகப் படைப்பாளிகள் தங்களது ஆற்றல்களைப் பகிர்ந்து கொள்ள முடிகின்றது. ஒரு திரைப்படத்தில் ஒரு பாடல் ஒரு உரையாடல் ஒரு பொறி சரியாக அமைந்துவிட்டால்கூட இலட்சக்கணக்கான மக்களுடன் அப்படைப்பின் தாக்கம் ஒரு நொடியில் செம்புலம் பெய்த மழை நீர் போல இரண்டறக் கலந்து விடுகிறது. . . அடுத்ததொரு புதுப்பொழிவு வந்து சேரும்வரை பழைய சொல்லாட்சி நிற்கும். பிறகு காலவெளியில் காணாதும் போய்விடக் கூடும். மீண்டும் புதிது பிறக்கும்.

என்னுடைய வியப்பெல்லாம் எழுதாக் கிளவியாய் ஏட்டில் ஏறாத மொழிகளாய் வந்த வாய்மொழிச் செல்வங்கள் எப்படி இன்னமும் பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கின்றன என்பதுதான். ஆற்றில் விட்டெறிந்த பின்னும், நெருப்பிலிட்டுப் பொசுக்கிய பின்னும், இருட்டறைகளில் புழு பூச்சிகளுக்கு இரையாக்கிய பின்னும் பனையோலை ஏடுகளில், பானை ஓடுகளில் கல்பலகைகளில், தாமிரப்பட்டயங்களில் வாசிக்கப்பட்டு, பூசிக்கப்பட்டு, தமிழ்க் கவிதைகள் மக்களுடன் நெஞ்சத்து உறவுகளாக உதிரத்துடன் கலந்து தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு முப்பது நூற்றாண்டுகளுக்கும் மேலாக நமது செல்வக் களஞ்சியத்தை நிரப்பி வைத்திருக்கின்றன! செம்மொழித் தமிழுக்கு 'வாழும் கலை' உடன் பிறந்தது அல்லவா?

பிறவி உருவங்களுக்கு ஆண்பால், பெண்பால், மூன்றாம்பால், நான்காம்பால் என்று வாழ்க்கையின் தேவை கருதி பரிணாம வளர்ச்சி

உயிர்களை இட்டுச் செல்கிறது. ஏதுமற்ற 'செல்' தனியாய் ஒன்றாயிருந்து படைத்துக் கொண்டது. படைப்புத் தொழில் பயனுறத் தன்னை இரண்டாக விரிவாக்கிக் கொண்டது. படைப்புத் தொழில் இப்படியே உருமாற்றம் பெறத் தொடங்கியதும் உயிர்க்கலை விரைவுற்றது. இருவேறு கூறுகள் பெண்ணாகி ஆணாகி அடையாளப்படுத்திக் கொண்டன. புதிய, புதிய உயிர்களைப் படைத்துத் திரும்பிப் பார்க்கும்பொழுது பெருமிதம், ஆணவம், ஆசை மீதூர ஆணும் பெண்ணும் இன்பத்தில் தோய இன்பம் காமத்திற்கு அழைப்புதர, காம நுகர்ச்சியானது ஆண்டான் அடிமைத் தளத்திற்கு அடிக்கல் நாட்டிக் கொண்டது. அந்தப் பருவத்திலிருந்து மனித இனம் இன்னும் விழிப்புறவே இல்லை: நெடுங்காலம் ஆகிவிடலாம் சுயாட்சி பெற.

உயிர்களில் மனிதர்கள் சமூக மனிதர்களாக உருவாக்கம் பெற்ற பின்னர் அடுத்த தளத்திற்கு வழிநடத்த எத்தனையோ சொற்கள் எழுதப்பட்டுவிட்டன. நூல்கள் நிரப்பப்பட்டுவிட்டன. அவை சாத்திரங்களாகி வழிபாட்டுப் பொருள்களாகிப் போயின பிறகு, தீவிரவாதிகளின் ஆயுதங்களாகி இரத்தம் தோய்ந்த அசைவுகளில் பொழிப்புரை தரப்பட்டு மனிதத் தோற்றங்கள் அசுரர்களின் களைவிளை நிலங்களாகிவிட்டன. நரமாமிசப் பட்சிணிகளின் தேசத்தில் எழும் பாடல்களில் அடிநாதம் எதுவாயிருக்கும்? வன்முறைதானே தூக்கலாயிருக்கும்.

'விடுதலை, விடுதலை, விடுதலை' விடுதலை அன்றி வேறெதனைப்பற்றிப் பிறவிகள் குரலெடுத்துப் பாடமுடியும்?

காலந்தோறும் அடக்கு முறைக்கு எதிரான குரல்கள் தாழ்ந்து கிடப்போரின் சார்பில் எழுத்தாகிக் கொண்டிருக்கின்றன என்பதை வரலாறு உணர்த்துகிறது. "பிறப்பொக்கும் எல்லாஉயிர்க்கும் " என்ற குறளுக்கு இன்னமும் மிகச் சரியான உரையைத் தேடிக் கொண்டிருந்தாலும், செய்தி மனித சாதிக்கு அன்றே தெளிவாகத் திருவள்ளுவரால் தீட்டப்பட்டுவிட்டது. ஆணென்ன, பெண்ணென்ன பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும். இருப்பவர் என்ன இல்லாதவர் என்ன பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும். உலகத்தீர்! இக்கூற்றினை எடுத்துரைக்க அச்சமாயிருக்கிறதே... ஆளுகிறவர்களின் கைப்பொம்மைகளாக அல்லவா நாம் அண்டி வாழ வேண்டியுள்ளது? இருந்தும் தேவையான காலங்களில் 'யாமார்க்கும் குடியல்லோம், யமனை அஞ்சோம்' என்றும், 'அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமில்லை' என்றும் அச்சத்திலிருந்து விடுதலை தர ஞானப் பண்ணிசை பிறந்துகொண்டேயிருக்கிறது என்பதும் மெய்தான்.

மானுடப் பூச்சிகளைக் கண்டு அச்சப்படாதீர்கள் என்றொரு கவிஞையின் அபயக்குரல் கூடவே தொனிக்கிறது. பூமியில் கிடந்து நீரில் வாழ்ந்து, இரு நில வாழ்வியாகி, ஊர்ந்து, பறந்து, தவழ்ந்து, குனிந்து, நடந்து நிமிர ஆரம்பித்த மனித இனமா இது? இறைத்தன்மை நோக்கி முன்னேறும் திருவுரு மாற்றம் பெறுவதற்கான கூர்தலறம்- பரிணாமம் மலர்ந்த சூழ்நிலையில், தன்னைப் பாலினத்தால் வேறுபடுத்திக் கொண்டு மீண்டும் அதலபாதாளத்திலோ, புதைச் சேற்றுக் குழியிலோ வீழ்ந்து விடுமா என்ன?

நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை வந்ததுமே மனிதப் பிறவி முழுமையடைந்துவிடுகிறது. பிறகு நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள் வளர்கின்றன. திமிர்ந்த ஞானச் செருக்கு கிளர்ந்தெழுகின்றது. இந்தச் செம்மை இருபாலர்க்கும் பொது. உயர்ந்த அறவாழ்வின் பயன் அது.

இருந்தும் பெண்கள் இன்னமும் இரண்டாம் தரப் படிக்கட்டுகளிலேயே நின்றுவிட்டார்களோ என்ற ஆதங்கத்துடன் கரிசனமாக முனைவர் மு. பழனியப்பன் 'மகாராணியின் அலுவலக வழியாகப்' பெண்களுக்கான புதிய வாயிலைத் திறந்துவிட்டிருக்கிறார். இதுவரை தமிழ்ப்பெண்களின் படைப்பு இலக்கிய இயக்கம் கடந்து வந்த தூரம், நடந்து வந்த பாதை, எதிர்ப்பட்ட இடர்ப்பாடுகள், தளைகளைக் கட்டவிழப்பு முயற்சி, மேலை நாட்டுப் பெண்விடுதலை வெளிப்பாடுகளின் தாக்கம், இவை தாண்டி முன்னெடுத்து வைக்கும் தீர்மானங்கள் இவற்றுடன் தமிழ்ப் பெண்ணியத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்ற அனுமானமும், எப்படியிருந்தால் நன்மை விளையும் என்ற அக்கறையும் ஆய்வுக் கட்டுரைகளாக இந்நூலுள் அமைக்கப்பட்டுள்ளன.

"பெண்களுக்கான மொழி என்பது அடுத்த நிகழ்காலத்தின் இனிது ஊன்றப் பெற்றிருக்கும் சத்தான விதை ஆகும். நிகழ்காலப் போக்கில் தமிழில் பெண் மொழிக்கான உள்ளடக்கம் உருவாக்கப்பட்டுவிட்டது. ஆனால் பெண் எழுத்து, பெண்வார்த்தை, பெண் தொடர் உருவாகவில்லை" என்றொரு கருத்தினைத் தெரிவிக்கின்றார் சகோதரர் பழனியப்பன். மற்றொரு கட்டுரையில் தமிழின் தனித்தன்மை அது வாய்மொழி இலக்கியங்களையும், எழுத்து வழி இலக்கியங்களையும் ஒரு சேர வளர்த்து வருவதே ஆகும், எழுத்து வழி இலக்கியத் தாக்கத்தின் விளைவு வாய்மொழியிலும், வாய்மொழித் தாக்கத்தின் விளைவு எழுத்துவழி இலக்கியத்திலும் ஏற்பட்டு வருவது தமிழுக்குக் கிடைத்துள்ள கொடை என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். எதிர்காலத்தில் இக்கொடுக்கல், வாங்கல் நீடிக்குமா என்ற ஐயம் எழுகிறது என்பதற்கான காரண காரியங்களையும் இதனுடனே விளக்கிச் சொல்கிறார்.

பெண்களின் சீதனமாகவே விளங்கியது த்மிழின் வாய்மொழிச் செல்வங்களான தாலாட்டு, ஒப்பாரி, திருமண நிகழ்ச்சி வாழ்த்து, திருவிழா கும்மிப் பாடல்கள். வேளாண்பணி மற்றும் பிற தொழில்முறைப் பாடல்கள் பாண்டி, அம்மானை, கல்லாட்டம் போன்ற பொழுதுபோக்கு விளையாட்டுப்பாடல்கள், விடுகதைப் புதிர்கள், ப்ழமொழிகள், இவை போக வழிநடைப்பாடல்கள் போன்ற பலவகைக் குழு வெளிப்பாடுகளும், ஒப்பாரி போன்ற உணர்ச்சி மிகுந்த தனியன்களும் தமழில் உள்ளன. அகச்சாரும், புறச்சாரும் கொண்ட பெண்களின் ஆளுமை வெளிப்பட்ட வெளிகள் இவை. ஆங்காங்கே இன்னும் சில தீவுக் கிராமங்களில் மலை நாட்டுக் குடியிருப்புகளில், மீனவக் குப்பங்களில் உடல்உழைப்பினை நல்கும் கூட்டத்தினரின் மண் மேடுகளில், திண்ணையும் முற்றமும் மிச்சமிருக்கும் இரட்டை வீதிகளில், நிலாச் சோறுகளுடன் சொல் தேவதை கவிதையுலா வருகிறாள்தான். அவள் வானத்து நிலவை மணல் பரப்பில் நட்டுவைத்துக் கனி கொய்கிறாள். தலைமுறைப்பிள்ளைகளுக்கும் அனுபவப் பாலை ஊட்டிவிடுகிறாள்.

அண்மையில் கிராம மகளிர் அமைப்பொன்றின் அழைப்பேற்று குழுவிவாதம் நடத்த ஏரிப்பாசனம் உடைய பெண்களாலேயே நிலம், நீர்வளம் மேலாண்மை செய்யப்படும் விவசாய ஊருக்குப் போயிருந்தேன். “ஏதாவது பேசுங்களேன்” என்று அங்கு அமைதி காத்த பெண்களிடம் கேட்டுக் கொண்டேன். ஒரு மூத்த தாய் “வெடி போடவா” என்றார். வெடிபோடுதல் என்றால் விடுகதைப் புதிர் சொல்லுதலாகும். நாம் மறுமொழி தரவேண்டும். இது ஓர் அறிவான செறிவான சொல் விளையாட்டு ஆகும்.

“ஊம்ம்... வான்னா வரவா போறீங்க
ஊம்ம்... போன்னா போகவா போறீங்க
ஊம்ம்... இருன்னா இருக்கவா போறீங்க”

என்று இழுத்து இசைத்து நாணமுறுவலைக் காட்டிப் பேசியபோது ஓர் ஆணை முன்னிறுத்திக் கிறக்கத்துடன் பாடும் பாட்டைப்போல இது தெரிந்தது. அப்படி இருந்திருக்கவும் கூடும்! புதிரின் விடை தெரியவில்லை. என் போன்ற நகரவாசிகளுக்கு மட்டுமின்றிக் கிராம மகளிர்க்ள் கூட சில பேர் சிரித்துக்கொண்டே பதில் வெடிக்க ஆரம்பித்தார்கள். அவர்களில் பலருக்குக்கூட மூத்தவரின் கேள்விக்குப் பதில் தெரிந்திருக்கவில்லை. இச்சொலவடையின் விடை தூக்கமாம்! வா என்றால் வராது தூக்கமே போ என்றால் போகாது. அப்படியே இரு என்றாலும் இருக்காது என்பது உட்பொருள் என்றார் அந்தப் பெண்மணி.

"தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம் " என்று ஆன்மத்துயில், அறிதுயில் பற்றி எல்லாம் விரிவுரை செய்து வரும் அறிவு ஜீவிகளுக்கு உழைப்பாளியின் அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறையுள் இவற்றுடன் உடல் உறக்கமும் அதன் தொடர்புடன் கூடிய ஓய்வு, மன அமைதி, புத்துயிர்ப்புபற்றிய சிந்தனைகளுக்கு இவ்விடுகதை முன்னோர் பிடித்து உழுது சென்றது. எளிய மகளிர்க்கே உரித்தான இத்தகைய சிந்தனைச் செல்வத்தை அனுபவ உயில்களைப் பாதுகாக்க எடுத்து வரும் முயற்சிகள் போதாது என்பதை ஆசிரியரின் இரண்டு கட்டுரைகள் வலுவாக எடுத்துரைக்கின்றன. என் போன்ற சமூகவியலாளர்களும் அதனையே வழிமொழிகிறோம். அறிவியல் உலகத்தின் காலவோட்டத்தில் ஒப்பாரியும், தாலாட்டும் இனிமேல் சம்பிரதாயமாகப் பாடப் பெறப் போவதில்லை. கேரள நாட்டுப் பெண்கள் பூக்கோல மிட்டு கைகொட்டிக் கும்மி ஆடுவதைப் போலவோ, வடநாட்டில் பெண்கள் தாண்டியா கோலாட்டக் கழிதட்டிப் பாடி ஆடுவதைப் போலவோ, நமது தமிழ்ப் பெண்கள் கைதட்டி, கோல்தட்டி ஆடுவது அருகிப் போய்விட்ட நிலையில் எங்கேனும் மிச்சம் மீதி இருக்கும் இடங்களுக்குச் சென்று பதிவு செய்து கொள்ளலாம். ஆவணக் காப்பகங்களில் ஆய்வுக் கூடங்களில் குறுந்தகடுகளை அடுக்கி வைக்கலாம். வளர்ந்து வந்த மரபுப்பாதைகளின் தடங்களை வருங்கால சந்ததி அறிந்துகொள்ள இது உதவும்.

இன்றைய காலகட்டத்தில் மகளிரின் தனிமுத்திரைகளைத் தாங்கிவரும் புதினங்கள், படைப்புகள், சிறுகதைகள், நாடகங்கள் இவற்றிற்கெல்லாம் மேலாக ஓவியங்கள் இக்கூறுகளை எல்லாம் உள்ளடக்கி வீரியமாக வெளிப்படுகிறது கவிதை என்பது எம்மனோரின் கணிப்பு. தோழமையுடன் பழனியப்பன் பதிவு செய்துள்ளதுபோல சங்க காலத்திலிருந்து பக்திக்காலம் தாண்டி, இருண்டகாலம் பெண்ணொழித்த காலம் எல்லாமும் கடந்து விடுதலைக் காலம் ஏற்று நவீன காலத்தில் குரல் எழுப்பி ஆவேசமாய்ப் பேசத் தொடங்கியுள்ளது மெய்யான விடுதலை வேண்டுவோரின் கவிதைமொழி. இப்பொருள் பற்றி விரிவாகவே பேசப்பட்டாயிற்று இந்த ஆசிரியராலும் பிற பல ஆய்வாளர்களாலும்.

இனி அடுத்து என்ன? ஆண்கவிதை, பெண்கவிதை ஆண்மொழி, பெண்மொழி என்று கந்தகப் பரிசோதனைகள் செய்து கொண்டே இருக்கப் போகிறோமா அல்லது மனித ஒருமைமொழிக்கு வழியமைத்துத் தரப்போகிறோமா? அப்படி ஏற்கனவே தோன்றியிருந்தால் அவற்றைப் பட்டியலிடப் போகிறோமா? அதற்கும் அப்பால் எதிர்காலக் கவிதை எதை நோக்கி விரல் காட்டுகிறது என்று கண்டுரைப்போமா?

எழுதுகிறவருக்கத்தான் மொழி, உடல் பேதங்கள் எல்லாம். கவிதைக்கு அவை இல்லை. கவிதை எல்லாமுமாய் நிரம்பியிருக்கிறது. தானாக ஜனித்துக் கொள்ள விரும்பியிருக்கிறது. அறிவு, உணர்வுத் தளங்களைத் தாண்டிவிட்டால் இலக்கண எல்லைக்கும் உட்படாத, இதுவரை சொல்லப்பட்டிராத புதிய வடிவங்களைத் தாங்கி விசுவரூபம் எடுக்கக் கூடிய கவிதைகள் சொல் அரும்பு எடுக்கும்.... பெருகும்...... முந்தைய பசுமை ரசத்தில் உயிர்த்துக் கொண்டிருக்கின்றன. தேடல் நம்முடையது. கவிதைக்கு ஒருமை ஏற்புடையதாக இருந்தால் என் விரல் வழி குதித்தோடி வரக்கூடும்.

'நான்
கவிதை
நீ
எழுது'

என்று என்னை உரிமையாகக் கேட்கவும் செய்யும்.

ஒரு கவிதையை வாசிக்கும்போது இதை எழுதியவர் ஆணா, பெண்ணா, திருநங்கையா, திருமதி நம்பியா, எல்லாம் கடந்த சித்தரா, எல்லாமுமாய் விளங்கும் வித்தா என்பதற்கெல்லாம் அப்பால் ஜோதி தரிசனம் கிடைக்கும். அப்போது உட்செவி திறக்கும். வாணியின் அகக்குரல் கேட்கும். வாழும் பரவெளியெல்லாம் சொற்கள் அழகின் ஆட்சி பீடத்திலிருக்கும்.

இக்கருத்துக்களைப் பதிவு செய்ய இந்நூலின் வரப்புகள் என்னை உவந்தேற்றுள்ளன. உள்ளே பக்கங்களெல்லாம் அருமையான விளைச்சல். அறுவடைப் பயனை உழைத்து உவந்தளித்த ஆய்வாளர் பழனியப்பன் அனைவருடனும் பகிர்ந்து கொள்கிறார். படைப்புலக பெண்கள் சார்பில் நன்றிக் கோலங்களைச் செம்மண் இழைத்து இம்முன் வாசலில் வரைந்துள்ளேன்.

வாழ்த்துக்கள்
இரா.மீனாட்சி

ஆரோவில்
08.03.2010
(மகளிர் தினம்)

இன்னும் எழுத வேண்டி இருக்கிறது....

இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டிலிருந்து இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு வரையான பெண்ணியம் தொடர்பான என் சிந்தனைகள், திறனாய்வுக் கருத்துகள் இந்நூலில் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. அவ்வப்போது எழுத வேண்டிய சூழலில் தெறித்த மின்னல்களை இங்கு ஒரு கோர்வைக்குள் இழுத்து வந்து தைத்திருக்கிறேன். கட்டுரைகளைத் தனித்தனியாக எழுதிவிட்ட போதிலும் அவற்றை ஒருங்கிணைத்துப் பார்க்கின்ற போது அவை நடந்து வந்துள்ள பாதையில் தொடர்பு இருப்பதை என்னால் உணரமுடிகின்றது. இந்தத் தொடர்பு இழையாக இந்நூலுள் இருந்து அணிசெய்கிறது.

இலக்கிய வரலாற்றில் பெண்ணிற்குத் தரப் பெற்றுள்ள இடத்தின் தரத்தை இந்நூலில் உள்ள பல கட்டுரைகள் உரசிப்பார்க்கின்றன. பெண்ணுக்கான இடம் போற்றத்தக்கதாக இல்லை என்ற எண்ணத்தின் வெளிப்பாடே இக்கட்டுரைகள் உதயமாகக் காரணமாக அமைந்தன. நானும் எனக்குக் கீழ் பணியாற்றும் ஆய்வாளர்களும் பெண்ணியக் கண்ணோட்டத்துடனான ஆய்வுகளில் ஈடுபட்டிருப்பதற்கான பல சான்றுகள் இந்நூலுள் தேடக் கிடைக்கும்.

பெண்ணியக் கருத்தாடல்கள் கூறப்படுகின்றபோதும், எழுதப் படுகின்றபோதும், வெளிவருகின்றபோதும் பல நிலைகளில் விவாதத்திற்குரியனவாகவே கொள்ளப்படுவது வழக்கமாகும். இந்நூலுள் உள்ள கட்டுரைகளும் அவ்வப்போது படிக்கப்பட்டவை. இதழ்களில் வெளிவந்தவை. இந்த வெளியீட்டு நிலைகளில் இந்நூற்கட்டுரைகள் பல விவாதங்களைச் சந்தித்துள்ளன. நேரடியாகவும், மறுப்புக் கட்டுரைகளாகவும் இந்நூற்கட்டுரை ஆக்கங்களுக்கு விவாதக் கருத்துகள் வெளிவந்துள்ளன. இந்தச் சலனத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே இக்கட்டுரைகளின் நோக்கம். சலனமற்று எழுதியதையே திருப்பி எழுதிக் கொள்ளும் திறனாய்வுப் போக்கு கழியவேண்டும்.

நூலுள் தொகுக்கப்பட்டுள்ள இந்தக் கட்டுரைகள் தொடரும் அச்சிதழிலும், திண்ணை இணைய இதழிலும், ஆய்வுத் தொகுப்புகளிலும் வெளிவந்தவை. இக்காலத்தில் இக்கட்டுரைகளைப் படித்து என் கருத்துகளுக்குச் சலனத்தைத் தந்த முனைவர் அ. அறிவு நம்பி

(பாண்டிச்சேரி பல்கலைக்கழகம்), முனைவர் குணசேகரன் (கும்பகோணம் அரசு கலைக் கல்லூரி), தோழர் சந்திரகாந்தன் (சிங்கம்புணரி), முனைவர் சு. மாதவன் (மா. மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை) மற்றும் இணைய நண்பர்கள் அனைவருக்கும் என் நன்றிகள்.

இதனை நூல்வடிவமாக்கும் முயற்சியில் பெரிதும் தூண்டியவர் நண்பர் சேதுபதி (பாரதிதாசன் மகளிர் கல்லூரி. புதுச்சேரி). இயங்கிக் கொண்டே இருக்கும் அவரின் இனிய வழிகாட்டலால் இந்நூல் உருவாகியது. இதற்குத் தக்க முன்வாசல் வேண்டும் என்று எண்ணியபோது உடன் நினைவுக்கு வந்தவர் திருமிகு மீனாட்சி அக்கா அவர்கள். படைப்பாளியாக, தேர்ந்த சமுதாய நலம் விரும்பியாக விளங்கும் அவர்களின் முன்னுரை இந்நூலுக்கு மேலும் அணி சேர்க்கிறது. படைப்பாளிகள் தனியாகவும், திறனாய்வாளர்கள் தனியாகவும் இயங்கும் போக்கு மாறவேண்டும் என்ற அவாவின் வெற்றியாக மீனாட்சி அக்கா என்ற கவிஞரின் இனிய நல்லுரை இந்நூலுக்கு அமைந்துள்ளது. படைப்பாளியே திறனாய்வின் வன்மை, மென்மைகளை அளவிட இந்தக் களம் துணைபுரிந்தது. அவருக்கும் நன்றி.

மகாராணியின் அலுவலக வழியாக விளங்கும் இந்நூல் இரு வழிகளை உடையது. ஒரு வழி பெண் எழுத்துக்களில் உள்ள தனித்தன்மைகளைப் போற்றுவது. இதற்குப் பெண்ணியத் திறனாய்வின் அடிப்படையில் பெண்மையத்திறனாய்வு (கைனோ கிரிடிசிசம்) என்று பெயர். இதுவே முதல் வழி.

இரண்டாவது வழி ஆண்படைப்புக்களில் உள்ள பெண்ணுக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படுத்துவது. இதற்குப் பெண்ணிய வாசிப்புத் திறனாய்வு என்று பெயர்.

இந்த இருவழிப்பாதைகளும் பெண்ணியத்திறனாய்வின் இரண்டு கண்கள் போன்றவை. இந்த இரு கண்கள் வழியாகவும் என் பார்வைக்குப் பட்ட நிலையில் தமிழ் இலக்கியங்களைக் கண்டுள்ளேன். என் கண்காணிப்பு இனி உங்கள் கரங்களில்.

படிக்கவும், எழுதவும் நேரம் ஒதுக்கி என்னைத் தானாக இயங்க வைக்கும் என் மனைவி விஜயலட்சுமிக்கும், மகள்கள் அழகம்மை, வள்ளியம்மைக்கும் என்றும் நன்றிகள். என் தாயார் மு. அழகம்மையின் அறுபதாம் ஆண்டு பிறந்த நாள் விழாவின்போது இந்நூல் வெளிவருகிறது. அவருக்கும், என்னை வழிநடத்தி வரும் என் தந்தையார் பழ. முத்தப்பன்

(முதல்வர், செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி) அவர்களுக்கும் என்றும் நன்றிகள்.

தொடர்ந்து பெண்ணியச் சார்புடன் சிந்திப்பதில் மிக்க விழைவுடன் இருக்கும் என் கருத்துகளை ஏற்கவும், மறுக்கவும் உரிமை அனைவருக்கும் உண்டு. அத்தனை கருத்துகளுக்கும் மனம் திறந்து ஏற்கும் பக்குவத்துடன்

மு.பழனியப்பன்

96 லட்சுமி நகர், அரிமழம் சாலை,
புதுக்கோட்டை, 622003,
04322266163. 9442913985
Manidalblogspot.com
muppalam2006@gmail.com

உள்ளடக்கம்

1

பெண்ணியத்தின் மூன்று நிலைகள்

பெண்ணியம் அதன் துவக்க காலத்தில் இருந்து இற்றைக் காலம் வரை மூன்று முக்கிய நிலைகளைக் கடந்து வந்துள்ளது. அவற்றை முதல் அலை, இரண்டாம் அலை, மூன்றாம் அலை என்று வகைப்படுத்தி உரைக்கின்றனர் பெண்ணியவாதிகள்.

முதல் அலை

பெண்ணியத்தின் துவக்ககால நிலையை இம்முதல் அலை குறிப்பிடுகிறது. இவ்வலை பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் தோற்றம் கண்டது. இது பெண்களின் சமுதாய அமைப்பில் மற்றும் சட்டங்களில் காணப்படும் ஆண் பெண்ணுக்கான ஏற்றத் தாழ்வுகளை எடுத்துரைத்து அவற்றைச் சமப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் பெண்ணியவாதிகளால் கையாளப்பெற்றது.

நடுத்தரப் பெண்ணின் கல்வி, வேலைவாய்ப்பு, திருமணச் சட்டங்கள் போன்றவற்றில் காணப்பட்ட சமமற்ற தன்மையை எதிர்த்துப் போராடுவதாக இவ்வியக்கம் அக்காலத்தில் அமைந்திருந்தது. இது பணிக்குப் போகும் பெண்களின் இன்னல்கள் குறித்துக் கூட கருத்துத் தெரிவிக்க இயலாத தொடக்க காலப் பெண்நிலை வாத அடிப்படை வாய்ந்ததாக இருந்தது. மேலும் இது நவீனத்துவ அடிப்படையில் இவ்வியக்கத்தை நடத்திச் செல்லவில்லை. இத்தகைய பின்னடைவுகள் இருந்த போதும் இதுவும் ஓரளவிற்கு-தான் கொண்ட கொள்கைளில் வெற்றி கண்டது.

இதன் மூலம் பெண்கள் உயர்கல்வி கற்க இருந்த தடைகள் நீங்கின. பெண்களின் கல்வியில் பல மாற்றங்கள் உருவாக இம்முதல் அலை காரணமாக அமைந்தது. பெண்கள் ஆண்கள் பங்கேற்கும் அனைத்துத் தகுதித்தேர்வுகளிலும் பங்கேற்றுத் தேர்வு எழுதும் வாய்ப்புகளைப் பெற்றனர்.

இதன் காரணமாக இங்கிலாந்து நாட்டில் ஆயிரத்து எண்ணூற்று எழுபதாம் ஆண்டில் திருமணமான பெண்களின்

சொத்துரிமை குறித்த சட்டம் இயற்றப்பட்டது. மேலும் பெண்களுக்கு ஒட்டுரிமையைப் பெற்றுத்தந்தது. மணவிலக்கு, குழந்தை பராமரிப்பு போன்றவற்றில் ஓரளவிற்குப் பெண்களின் சமத்தன்மை எடுத்துரைக்க வழிகள் செய்யப்பெற்றது. முதல் உலகப்போரின் நிறைவு வரை பெண்ணியத்தின் முதல் அலை எனப்படும் இவ்வெழுச்சி மெல்ல எல்லா நாடுகள்தோறும் வீச ஆரம்பித்தது.

இரண்டாம் அலை

முதல் உலகப்போரின் நிறைவில் உலகஅளவில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இதன் காரணமாகப் பெண்களின் சமூக வாழ்விலும் பல முன்னேற்றங்கள் தோன்ற வேண்டும் என்ற சிந்தனை எழுந்தது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபது வாக்கில் பிரான்ஸ், ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பெண்ணியக் கூறுகள் அடங்கிய பல நிகழ்வுகள் நடக்கத் தொடங்கின. இரண்டாம் பாலினமாகத் தள்ளி வைக்கப் பெறும் பெண்கள் அதனின்று முன்னே வர திடமாகச் செயல்பட்டனர்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தெட்டாம் ஆண்டில் நடத்தப் பெற்ற மிஸ் அமெரிக்கா என்ற அழகிப்போட்டிக்கு எதிராக அமெரிக்காவில் மிகப் பெரிய மறுப்புக் கூட்டங்களும், பேரணிகளும் நடைபெற்றன. இது குறிக்கத் தக்க விழிப்புணர்வை பெண்களிடம் ஏற்பட்டிருப்பதை எடுத்துக்காட்டியது. இவ்வகையில் பல போராட்டங்களை உலக அளவில் பெண்கள் நடத்தி வந்தனர்.

இக்காலத்தில் பெண்ணியம் கறுப்புப் பெண்ணியம், ஓரினச்சேர்க்கைப் பெண்ணியம், சமூகப் பெண்ணியம் எனப் பலவகைகளில் பிரிவுபட்டு வளரத் தொடங்கியது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தெட்டில் பிரிட்டனில் ஃபோர்டு மகிழ்வுந்து தயாரிப்பதில் நிலவிய ஆண், பெண் ஊதிய ஏற்றத்தாழ்வைக் கருத்தில் கொண்டு பெண்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வென்றனர். இதுபோன்று உலகம் முழுவதும் பல நிலைகளில் பல போராட்டங்களைச் செய்ய இவ்வியக்கம் வளர்ந்தது. தனது என்பதே தன் அரசியல் என்ற முழக்கம் இவ்வியக்கத்தின் முக்கியமான முழக்கமாக இருந்தது. இவ்விரண்டாம் அலை பெண்களுக்கான சமூக வாய்ப்புக்களைப்

பெற்றுத் தருவதில் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டது. மேலும் இனப் பெருக்கம், விழைவு, கலாசாரக் கட்டு என்ற சுழல்வட்டத்தில் பெண்கள் தங்களுடைய சுய வாழ்வை இழந்து விடுகிறார்கள் என்பதையும் இவ்வலை எடுத்துக். காட்டியது. மேற்கத்திய நாடுகளில் இவ்வலை பெண்களின் நிலை குறித்த விழிப்புணர்வு எண்ணங்களை விதைத்தது. மற்றும் உலகு தழுவிய பெண் விடுதலை முழக்கங்களுக்கு இடமளித்தது. இவ்வகையில் பெண்ணியத்தின் இரண்டாம் அலை செயல்பட்டது.

மூன்றாம் அலை

பெண்ணியத்தின் மூன்றாம் அலை தோன்றக் காரணமாக இருந்த பெண் ரெபாக்கா வாக்கர் என்பவர் ஆவார். இவர் அலைஸ் வாக்கர் என்பவரின் மகள் ஆவார். மேலும் இவர் குளோரியா ஸ்டினிம் என்பவரால் அவரின் கொள்கைசார் பெண்ணாக வளர்த்தெடுக்கப்பட்டவர். இவர் எழுதிய "நானே மூன்றாம் அலை" என்ற தலைப்பிட்டு எழுதிய கட்டுரையே மூன்றாம் அலை தோன்றக் காரணமாக இருந்தது.

இந்தக் கட்டுரையின் மூலம் இளம் பெண்ணியவாதிகள் ஒருங்கு திரண்டனர். இதன் வழியே தங்களின் வயது, இனம், பால், பிறப்பிடம், பொருளாதார நிலை, விழைவு நிலை, கல்வி நிலை போன்றவற்றில் ஏற்பட்டுள்ள தடைகளை, சமமற்ற தன்மைகளை வெளிப்படுத்தி அவற்றில் தன்னிறைவை அடையச் செய்ய விரும்பும் மாற்றங்களை இவர்கள் தேட ஆரம்பித்தனர். சமூக இயக்கத்திற்கான வழியைத் தேடுவதாக இவ்வலை அமைந்தது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றாறில் தோற்றம் பெற்ற இந்தப் பெண்ணிய அலை பெண்ணியத்தின் முழுத் தோற்றத்தையே மாற்றி அமைத்தது. இளம் பெண்கள் புற உலகால் பாதிக்கப் பெறும் நிகழ்வுகளுக்கு எதிராக உலகு தழுவிய குரலாக இவ்வமைப்பின் குரல் ஒலிக்கத் தொடங்கியது. எங்கு இளம் பெண்களுக்கான முன்னேற்றச் செயல்கள் நடத்தப்பெறுகின்றனவோ அங்கெல்லாம் பொருளாதார அடிப்படையிலும் இவ்வமைப்பு உதவி செய்து வருகிறது.

இவ்வகையில் பெண்ணிய இயக்கம் மூன்று அலைகளாகக் கால நிலையில் பிரிந்து பெண்களை முன்னேற்றி வருகிறது.

2

பெண்ணியத்தின் மூன்றாம் அலை

பெண்கள், பெண் எழுத்தாளர்கள், பெண்ணியம், பெண்ணிய இலக்கியத் திறனாய்வு இவை போன்ற சொற்கள், இவை குறித்த விவாதங்கள் முதலியன தற்போது ஓய்ந்து போய்விட்டதுபோல ஒரு தோற்றம் தெரிகிறது. பெண் கவிஞர்கள், பெண் எழுத்தாளர்கள் எழுதிய புத்தகங்களை பூதக் கண்ணாடிகொண்டு பார்ப்பது, அவற்றில் பெண்களின் சொல்லாடல்களைக் கொண்டு தரம் பிரிப்பது இப்படிப் பல நிலைகளில் தோய்ந்து ஓய்ந்து போன திறனாய்வாளர்களும், படைத்த படைப்பாளர்களும் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

இந்தக் கேள்வி தமிழகத்தின் பெண்ணியவாதிகள், இந்தியப் பெண்ணியவாதிகள், உலகப் பெண்ணியவாதிகள் அனைவரிடமும் கேட்க வேண்டிய கேள்வியாகும். இந்தக் கேள்விக்குத் தமிழகத்தில், இந்தியாவில் பதில் இருக்கிறதா என்ற சந்தேகம்-இல்லை என்ற பதிலை உறுதி செய்யும். ஆனால் உலகப் பெண்ணியவாதிகள் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்பெண்ணியவாதிகள் மூன்றாம் அலையில் மூழ்கி முத்து எடுத்துக் கொண்டுள்ளார்கள் என்பது இப்பெண்கள் சூட்டிக் கொண்டுள்ள பெயரின் பின்னணியில் தெரியவருகிறது. "ஆக்டிவிஸ்டு பெண்ணியம்" என்பது இவர்களின் பெயர். செயல்பாடுகளை முன்வைத்து இயங்குவது இவர்களின் குறிக்கோள். வெறும் முழக்கம், வெறும் சங்கிலிப் போராட்டங்களைத் தாண்டி இப்பெண்கள் செயல்படத் தொடங்கி விட்டார்கள்.

பெண்ணியத்தின் மூத்த தலைமுறை தங்களின் பெண் குழந்தைகளைத் தங்களின் சிந்தனைக்கேற்ப வளர்த்துவிட எண்ணியபோது அதில் இருந்து மீறி இப்பெண்கள் தமக்கான தனித்த கவனத்தோடு வளரத் தொடங்கினார்கள்.

இன்றைய சூழலில் அதிகம் உலகால் பாதிக்கப்படுவது பதினைந்து வயது முதல் நாற்பது வயது வரையான பெண்களே

என்பதை உணர்ந்து இக்குறிப்பிட்ட வயதுசார் பெண்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய கட்டாயம் தற்போது எழுந்துள்ளது.

இவர்களின் முன்னேற்றப் பாதை மூன்றாம் அலைக்கென தனித்த வலைத்தளமாக உருவாகி, அவ்வலைத்தளத்தின் மூலமாக இளம் பெண்களின் சிக்கல்கள் பற்றித் தீர்வு காணப் பொருளாதாரம் மிக்க ஓர் அமைப்பை இவர்கள் உருவாக்கி விட்டார்கள். இவ்வலைத்தளத்தில் இணைந்துள்ள பெண்கள் வளர் இளம் பெண்கள் என்பது குறிக்கத்தக்கது. பெண்ணியத்தின் கிழட்டுத் தன்மைபோய் இளமைத் தன்மை வந்துசேர்ந்து இருக்கிறது.

1990 களில் ஆரம்பமான இவ்வலையின் தோற்றம் மிக்க சுவாரசியமானது. 'ரெபாக்கா வாக்கர் 'என்ற பெண்ணின் ஒரே ஒரு கட்டுரை தான் மூன்றாம் பெண்ணிய அலையின் தோற்றமாகக் கருதப்படுகிறது. இப்பெண்ணின் தாய் பெண்ணிய எழுத்தாளரான 'ஆலிஸ் வாக்கர்' ஆவார். ரெபாக்கா வாக்கர் எழுதிய பெண்ணியத்தின் மூன்றாம் அலையில் நான் இருக்கிறேன் என்ற தலைப்பிட்ட கட்டுரை அமெரிக்க இதழொன்றில் வெளிவந்தது. இத்னடிப்படையில் பல பெண்கள் இவரோடு கரம் கோக்க 1998 ஆம் ஆண்டில் மூன்றாம் அலை அமைப்பு "Third wave Foundation" உருவானது.

முதல்ஆண்டில் பதின்மூன்றாயிரம் அமெரிக்க டாலர்கள் இவ்வமைப்புக்குப் பணமாகச் சேர்ந்தது. அதைவிட மிக முக்கியமான செய்தி இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பல இனக் குழு சார்ந்த பெண்கள் இவ்வமைப்பின் வழியாக ஒருங்கிணைக்கப் பெற்றார்கள். மெல்ல வளர்ந்த இவ்வமைப்பு தனது ஐந்தாம் ஆண்டில் 3,50000 அமெரிக்க டாலர்களைத் தன் இன உலக அளவில் பெண் இன மேம்பாட்டிற்காகச் செலவழித்தது.

இளம் பெண்கள் அவரவர்களின் விருப்பத்திற்கேற்ப வாழ்க்கை முறைகளைத் தேர்ந்து கொள்ளுகிற உரிமை, குழந்தை பெற்று எடுக்கிற உரிமை, கருக்கலைப்பு உரிமை, கற்கிற உரிமை, இவர்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான வசதிகளைப் பெறுதல் போன்ற பல நிலைகளில் உலகு தழுவிய பெண்களுக்கு இவ்வமைப்பு கருத்து அடிப்படையிலும், பொருள் அடிப்படையிலும் உதவி வருகிறது. இதன் வழி காட்டுதல்

உலகம் முழுவதும் பரவி வருகிற சூழலில் தமிழகத்தின் பங்கு என்ன என்ற கேள்வி தேவையானதாகின்றது.

சாமியார்களின் சிஷ்யைகள், மனைவியை உயிருடன் எரித்தல், பெண்களைக் கட்டி வைத்து வதைத்தல், விமானம் போன்ற உயர் போக்குவரத்துச் சாதனங்களிலும், சாதாரண போக்குவரத்துச் சாதனங்களிலும் மிதிபடும் பெண்களின் மனது, உடல் வலிகள், பெற்ற குழந்தைகள் காணாமல் போதல் போன்ற சாதாரண நிகழ்வுகளில் கூட தனக்கான மதிப்புகளை இன்றைய பெண் குலம் இழந்து தவிக்கின்ற செய்திகளுக்கு எதிராக யார் குரல் கொடுப்பது எனத் தயக்கம் காட்டுவது ஏன்?

தமிழக வளரிளம் பெண்கள் ஒன்று கூட வேண்டிய கட்டாயத் தருணம் இது. இந்தியப் பெண்ணியம் என்ற நிலையில் ஒரு தமிழ்ப் பெண் கூட உலக அளவில் அறிந்து கொள்ள முடியாத நிலையில் உரிமை அற்று நிற்கிறது தமிழகம். பெண்களுக்கான தமிழக வலை இணைப்பை உருவாக்கப் போகிற ரெபாக்கா வாக்கர் யார்? உலக வலை இணைப்பில் தமிழக வளரிளம் பெண்கள் இணையப் போகிற நாள் நிமிடம் எது? அதுவே தமிழகப் பெண்ணியத்தின் மூன்றாம் அலை தோற்றுவிக்கப்படுகிற நாள் ஆகும்.

3

பெண் ஆண்மொழியில் படைப்பது இல்லை

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் பதிற்றுப்பத்து ஒரு குறிப்பிடத் தகுந்த நூல். இதனுள் அமைந்துள்ள ஆறாம் பத்து காக்கைப் பாடினி நச்செள்ளையாரால் பாடப் பெற்றது என்பது கருதி இத்தொகை நூலுக்கு மேலும் ஒரு பெருமை உண்டு. இத்தொகுப்பில் ஒன்பது ஆண்பால் புலவர்களின் வரிசையில் ஒரு பெண்பால் புலவர் இடம்பெற்றுள்ளார். இவர் பாடிய பத்துப்பாடல்களால் மகிழ்ந்த சேரன் இவரைத் தன் அவையில் அவைக்களப் புலவராக அமைத்துக் கொண்டான்.

மேலும் ஒன்பது கால் பொன்னும் பரிசாகத் தந்துள்ளான் என்ற குறிப்புகள் வழியாகப் பெண்பால் புலவர் ஒருவர் ஆண்பால் புலவர்களுக்கு ஈடான நிலையில் சங்க காலததில் அறிவாலும், ஆற்றலாலும், ஆளுமையாலும் சிறந்து விளங்கினார் என்பதற்குச் சரியான சான்று இவர் ஆவார்.

அறிவாலும், ஆற்றலாலும், ஆளுமையாலும் சிறந்தவள் பெண் என்பது ஆண்களுக்கு ஈடான நிலை தரும் என்றாலும் அவள் தன் படைப்பு மொழியை, முயற்சியை ஆண்களுக்குச் சமமாக அல்லது ஆண்களை அடியொற்றிச் செய்து கொள்ளவில்லை என்பது பெண்ணின் படைப்பினை ஆராயும் பொழுது தெரியவருகிறது.

அவள் ஆணால் உருவாக்கப் பெற்ற மொழியை அதன் அமைப்பைத் தனக்கு ஏற்ற வகையில் தன் நடையில் மாற்றி அமைத்துக்கொண்டு படைக்கத் தொடங்கினாள்.

மொழி என்னும் கட்டமைப்பிற்குள் தனக்குச் சாதகமான ஓர் இடத்தை அவள் பெற்றுக் கொண்டு அவள் செயல்பட்டாள். இதன்மூலம் அவள் தன்னையும் தனித்து வெளிப்படுத்திக் கொள்ள முடிந்தது. தன் ஒத்த பாலினரின் இயல்பையும் அவளால் படைக்க முடிந்தது. இந்த வேறுபாடு கருதி தன் பாலினருடன் அவள் ஒரு நெருக்கத்தை உண்டு பண்ணிக் கொள்ள முடிந்திருக்கிறது. இதன் காரணமாக அவளின்

படைப்பு மொழியில் பல நுண்மையான வேறுபாடுகள் எழுந்தன.

மேற்சொன்ன ஆறாம் பத்து இதற்குச் சிறந்த காட்டு. இதில் உள்ள பத்துப் பாடல்களிலும் காக்கைப் பாடினி நச்செள்ளை என்ற பெண் தன்கருத்தை தனக்குச் சாதகமான ஆண் வயப்படாத பெண் மொழியில் எடுத்துரைத்துள்ளார். அவரின் மொழி பயன்பாடு மற்ற ஏழு அல்லது கிடைக்காத பத்துக்கள் இரண்டையும் சேர்த்து ஒன்பது பத்துக்கள் பாடிய ஆண்பால் புலவர்களின் படைப்பு அமைதியில் இருந்து வேறுபட்டு அமைகிறது.

ஆயிரத்து ஐந்நூற்று எண்பத்து இரண்டாம் ஆண்டிலேயே பெண் மொழி ஆளுமை ஆணின் மொழியாளுமையில் இருந்து வேறுபட்டது என்புது உலக அளவில் கண்டறியப் பட்ட போதிலும் அதனை மெய்ப்பிக்கும் சான்றுகளுக்கான முயற்சி தொடங்கப் படவில்லை.

ஆனால் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபதாம் ஆண்டில் ராபின் லாக்ஆப், அன்னி பாடைன், ரூத் பெர்ன்டு, நான்சி கான்கிளின் (Robin Lakoff, Anne Bodine, Ruth Brend, and Nancy Conklin) என்போர் இம்முயற்சியில் தீவிரமாக இறங்கினர். அவர்கள் பெண்கள் பயன்படுத்திய அமெரிக்க ஆங்கிலப் பெண் மொழியில் உள்ள தனித்தன்மைகளை எடுத்துக் காட்டினர்.

அது மெல்ல வளர்ந்து உலக மொழிகளில் உள்ள பெண்தன்மைக் கூறுகளின் பொதுமையை ஆராயத் தொடங்கியது. “மொழியில் பால் வேறுபாடு என்பது உலகுதழுவிய ஒன்று” என்ற கொள்கை (“Sex differentiation in language is universal . . .”) இதன்வழி உருவானது. இதன் வளர்ச்சி நிலை பெண் மொழி என்பதற்கான வரையறையைத் தந்தது. மொழியில் பாலினக்கூறுகளை உள்ளடக்கிய ஒன்றாக இதன்பின் பெண் மொழி உணரப்பட்டது (“If, then, one uses the term loosely to cover those gender-preferred features, there is a “women’s language.”) இவ்வடிப்படையில் உணரத் தொடங்கப்பட்ட பெண்மொழி உலகின் அனைத்து மொழிகளிலும் உணரப்பட ஆய்வுகள் தொடங்கின.

அவ்வகையில் பெண்மொழி என்பது தமிழுலகிலும் உணரப் பட வேண்டிய ஒன்றே. பதிற்றுப் பத்து இவ்வகையில் ஆராயப் படத் தக்க ஒன்று. ஏனெனில் இத்தொகுப்பில் ஆண் படைப்பும் அமைந்துள்ளது. பெண்படைப்பும் அமைந்துள்ளது.

இவையிரண்டிற்கும் ஒரே பின்புலம்.

ஒரே கொள்கை. ஒரே எல்லை என்ற பல ஒற்றுமைக் கூறுகள் கிடைத்திருப்பது ஆண்மொழியையும் பெண் மொழியையும் உற்று நோக்கி ஆராய உதவுகிறது.

காக்கைப் பாடினியின் பெண்மொழிக் கூற்றிற்கு முதலில் சான்று காண்போம்.''இளந்துணைப் புதல்வர் நல்வளம் பயந்தவளங்கெழு குடைச் சூலடங்கிய கொள்கை ஆன்ற அறிவின் தோன்றிய நல்லிசைஒண்ணுதல் மகளிர் துனித்த கண்ணினும்– இரவலர் புன்கண் அஞ்சும்" (காக்கைப் பாடினி 2-ஆம் பத்து ஏழாம் பாடல் வரிகள் 1015)இப்பாடலடிகளில் கவனிக்கத் தக்கவை இருகூறுகள்.

மகளிர்

வளங்கெழு குடைச்சூல்மகளிர்

முதல் கூறு மகளிர்

பெண்கள் இளமையும் துணையாகும் தன்மையும் உடைய புதல்வரைப் பெற்று நல்வளம் பயந்தவர்கள். ஆன்ற அறிவினர். நல்ல புகழினர். ஒள்ளிய நெற்றியை உடையோர். புலவியின் காரணமாக கண்கள் கோபத்தை வெளிப்படுத்தும். இக்கருத்துகளில் புதல்வர் யாருக்கு நல்வளம் பயக்க இருக்கிறார்கள்? என்ற கருத்து சிநதிக்கத் தக்கது. "கணவன் உவப்பப் புதல்வர் பயந்து" (மதுரைக் காஞ்சி 600) என்பது மாங்குடி மருதனாரின் கூற்று.

கணவன் மகிழ்வு கொள்வதற்காக மகனைப் பெற்றாள் என்பது ஆணின் கூற்று. தனக்குத் துணையாகும் தன்மை உடைய மகனைப் பெற்றவள் என்பது பெண்மொழி. ஆண்மொழிக்கும் பெண் மொழிக்கும் உள்ள மிக முக்கியமான வேறுபாடு இதுதான். பெண் தன் சொற்களுக்குள் அன்பை வைக்கிறாள். ஆண் தன் சொற்களுக்குள் காமத்தை வைக்கிறான். கணவனின் உவப்பு எதற்காக? என்ற சிந்தனையை மேம்படுத்திப் பார்த்தால் இதன் உண்மை புரியும்.

இரண்டாம் கூறு வளங்கெழு குடைச் சூல்

இதற்கு உரையாசிரியர்கள் தருகிற விளக்கம் "வளமை பொருந்திய சிலம்பையும், அடக்கத்தால் உயர்ந்த ஒழுக்கத்தையும்

உடைய" (ஔவை துரைசாமிப்பிள்ளை உரை) என்பதாகும். வளங்கெழு குடைச் சூல் என்ற தொடரை ஏன் சிலம்பிற்குக் காட்டவேண்டும். உள்புறம் துளை வருமாறு கடையப் பட்ட சிலம்பை அணிந்த பெண் என்ற இந்த உரைக்குறிப்பு சிலம்பு கழி நோன்பை எல்லாம் கேள்விக்கு உள்ளாக்கி விடும்.

இதற்கு நேர்ப் பொருளை உரையாசிரியர் தந்திருக்கலாம்.

அதாவது வளமை மிகுந்த உள்புறம் குடைவு பெற்ற கருப்பையை உடைய அதன்வழியாக வளமை மிக்க மகனைப் பெற்றுத் தந்த மகளிர் என்ற பொருளில் பெண் படைத்துள்ளாள். இதனை உரையிட்ட ஆண்உலகம் செய்த மாற்றம் சிலம்பு என்பது.

பெண்ணின் வளமை கருப்பை கொண்டிருப்பது. அதனுள் மகவைத் தாங்குவது. அந்த மகவனுபவத்தை அவள் சொற்களில்தான் கூறமுடியும் என்பதற்கு மேற்காண் வரிகள் சான்று. இவளின் துனித்த கண் என்பது இதே பத்தின் இரண்டாம் பாடலில் ஆடல் மகளிர்பால் ஈடுபட்ட ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை அவனின் மனைவி ஊடல் கொண்டமையால் கூறப்பட்டதாகும். அந்த கண்களை விட இரவலர் நோயுடைய கண்ணிற்கு இவன் அஞ்சுவான். பெண் தனக்குரிய இடத்தை முன் கண்ணில் பெற்றாள். எனவே பின்கண் இயல்பாய் எவ்விதப் புனைவும் தேவையாகாமல் வந்தது.

இவ்வாறு வரிக்கு வரி பெண், பெண்மொழியில் பேசிக் கொண்டே இருக்கிறாள். அதை அக்கண் நோக்கினால் அன்றி கிட்டாது. ஆண் சொல்லிற்கும் பெண் சொல்லிற்கும் உள்ள ஒரு சிறு வேறுபாட்டை இப்பகுதி கொண்டே விளக்கலாம். விறலியை அழைக்க வேண்டும். அவளைப் பரிசு பெற ஆற்றுப் படுத்த வேண்டும். அவ்வகையில் காக்கைப் பாடினி " ஆடுக விறலியர் பாடுக பரிசிலர் " என்றழைக்கிறார்(6-ஆம் பத்து, எட்டாம் பாடல், அடி 1)

இதே சூழல் ஏற்பட்டபோது குமட்டூர் கண்ணனார் அழைக்கும் வகை பின்வருமாறு "உண்மின் கள்ளே, அடுமின் சோறே, எறிக திற்றி யேற்றுமின் புழுக்கே, வருநர்க்கு வரையாது பொலங்கலந் தெளர்ப்ப இருள் வணரொலிவரும் புரியவிழைம்பால் ஏந்துகோட் அல்குல் முகிழ்நகை மடவரல் கூந்தல் விறலியர் வழங்குக வடுப்பே" (2ம் பத்து எட்டாம் பாடல் 16)

விறலியின் இயல்பு ஆடுதல். என்வே அவளை ஆடுக விறலியர் என்று இயல்பாய் எவ்வித அதிகார தோரணையும் இல்லாமல் அழைக்கிறார் காக்கைப் பாடினி. ஆடும் அவளை தன் வீட்டு ஏவல்காரியாய்ப் பார்க்கிறது குமட்டூர் கண்ணனார் பாடல். சமையல் காரியாய் சமைத்துப் போட வைக்கிறது.

காக்கைப் பாடினியைப் பொறுத்தவரையில் அவளும் விறலி அல்லது பாடினி என்ற வகைப் பெண்களுடன் ஒருத்திதான்.

குமட்டூராருக்கு அவள் ஒரு கற்பனைப் பாத்திரம். அவள் உணர்வோடு உயிரோடு அவர் ஒன்றுதல் இயலாது. எனவே அக் கற்பனைப் பாத்திரத்தை எதையும் செய்யக் கூறலாம். மாடு கன்று மேய்க்கச் சொல்லலாம். வீடு கூட்டச் சொல்லலாம். இவ்வகையில் சிந்தித்துக்கொண்டே போக நல்லகளம் பதிற்றுப்பத்து. இக்கட்டுரை வழி சில மட்டுமே காட்டப் பெற்றன. பல உள்ளன.

4

சங்க இலக்கியப் படைப்பாக்கத்தில் திட்டமிட்ட புறக்கணிப்பு

சங்க இலக்கியங்கள் தமிழின் ஒரு குறிப்பிடத்தகுந்த நிலைக்கலன்கள். இதனில் இருந்தே தமிழ் இனத்தின் மூத்த பண்பாடு, வாழ்க்கை முறை முதலானவை தொடக்கம் பெறுகின்றன். இதன் படைப்பாக்கம் மற்ற இந்திய மொழிகளில் இருந்து வேறுபட்டமைவது. நெடிய பாக்களாகத் தொடங்கும் முறைமை இல்லாமல் சிறு அடிகளில் தொடங்கிப் பெரு அடிகளாக வளர்வது. இதிகாசங்களில் தொடங்காமல் இயல்பான வாழ்க்கை முறையில் இன்பம் கூட்டுவது. ஆண் / பெண் கவிஞர்கள் இந்தப் படைப்பாக்கத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பது கூடுதல் சிறப்பு.

இருந்தாலும் சங்க இலக்கியங்களில் ஆண் கவிஞர்களின் அளவு, அவர்கள் படைத்த பாக்களின் அளவு இவற்றைக் கணக்கில்' கொண்டு பார்த்தால் பெண்கவிஞர்களின் பங்களிப்பு என்பது பத்து விழுக்காட்டிற்கும் குறைவான அளவே ஆகும்.

நூல்களின் அடிப்படையில் பார்த்தால் எட்டுத்தொகை நூல்களில் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய ஐந்து நூல்களில் பெண்களின் படைப்புகள் கிடைக்கப் பெறுகின்றன. ஐங்குறுநூறு, கலித்தொகை, பரிபாடல் இவற்றில் பெண்களின் படைப்புகள் முற்றிலும் இல்லை என்பது கவனத்திற்குரியது.

பத்துப்பாட்டு நூல்களில் முடத்தாமக்கண்ணியார் என்ற ஒரு பெண்புலவர் தென்படுகிறார்.

இந்த அடிப்படையில் பெண்புலவர்களின் பங்களிப்பு குறைவுபட்டதற்குப் பல காரணங்கள் உண்டு. அவை சமூகப் புறக்கணிப்பு, கல்வியின்மை, ஆளுமை இன்மை எனப் பல நிலைகளில் உணரப்படலாம். இவற்றை ஒரு பக்கம் வைத்துவிட்டு, மறுபக்கம் சிந்தனை செய்து பார்க்க வேண்டி இருக்கிறது. எட்டுத்தொகை நூல்களில் மூன்று நூல்களில் பெண்களின்

படைப்புகளே இல்லாமல் புறக்கணிப்பு செய்யப் பெற்றுள்ளன. இந்நிலை ஏன்?

ஐங்குறுநூறு என்ற நூல் ஐந்து புலவர்களால் ஐந்து திணைகளை அடிப்படையாக வைத்துப் பாடப்பட்டது. மூன்று அடிகள் முதல் ஆறடிகள் வரை பாடப்பெற்ற பாடல்கள் கொண்டு தொகுக்கப் பெற்ற நூல் இது. குறிஞ்சித் திணையில் நூறு பாடல்களைக் கபிலரும், அதுபோல முல்லையைப் பேயனாரும், மருதத்தை ஓரம்போகியாரும், நெய்தலை அம்மூவனாரும், பாலை ஓதலாந்தையாரும் கருப்பொருளாகக் கொண்டு நூறு பாடல்கள் வீதம் ஐந்நூறு பாடல்கள் பாடியுள்ளனர். இந்நூலைத் தொகுத்தவர் கூடலூர் கிழார். தொகுக்கப் பொருளுதவி மற்றும் பிற உதவிகளைச் செய்த அரசன் யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை.

கலித்தொகை என்ற நூலிலும் இதே போல ஐந்து திணைகள் பாடப்படுகின்றன. ஐந்துபுலவர்கள் என்ற திட்டமிடப்பட்ட படைப்பாக்க நிலை இங்குப் பின்பற்றப்பட்டுள்ளது. இந்நூல் மொத்தம் நூற்றைம்பது பாடல்களை உடையது. பாலையில் உள்ள முப்பத்தைந்து பாடல்களைப் பெருங்கடுங்கோ பாடியுள்ளார். குறிஞ்சித்திணைக்கான இருபத்தொன்பது பாடல்களைக் கபிலர் பாடியுள்ளார். மருதத்திற்கான முப்பத்தைந்து பாடல்களை மருதன் இளநாகனார் பாடியுள்ளார். முல்லைக்கான பதினேழு பாடல்களை சோழன் நல்லுருத்திரன் பாடியுள்ளார். நெய்தலுக்கான முப்பத்து மூன்று பாடல்களை நல்லந்துவனார் பாடியுள்ளார். இவ்வகையில் பாடப்பட்ட இந்தத் தொகுப்பில் பெண் கவிஞர்க்கு இடமில்லை என்பது தெளிவு.

பரிபாடல். எழுபது பாடல்கள் இருப்பதாகக் கருதப்படும் இந்நூலில் தற்போது இருபத்திஇரண்டு பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. இவற்றில் ஒரு பெண்கவிஞரின் கவிதை கூட இல்லை என்பது நோக்கத்தக்கது. எழுதவில்லையா? அல்லது கிடைக்கப் பெறவில்லையா? அல்லது கிடைக்கப் பெற்றும் தொகுக்கப் படவில்லையா? என்பது கேள்வி. ஏனெனில் சங்கப்பாக்கள் தொகுக்கப்படுதல் என்பது அனைத்து தொகுதிகளிலும் ஆணாலேயே செய்யப்பட்டுள்ளது. பதிப்பிக்கப்படுதல் என்று இன்று வழங்குகிற சொல்லாக்கம்

முழுதும் ஆணால் ஆண் அதிகார வர்க்கத்தால் இன்று வரை கையகப்படுத்தப் பெற்று வருகிறது. இந்நிலை சங்கத்திலும் இருந்தது என்பதற்குச் சங்க நூல் தொகுப்புகள் சான்று.

மேலே காட்டிய மூன்று நூல்களை மட்டும் தெளிவுபடக் காண்போம். ஐங்குறுநூறு, கலித்தொகை என்ற இரண்டும் திட்டமிடப்பட்டு வரையப் பட்ட தொகுப்பு என்பது அதன் படைப்பாக்கத்தின் மூலம் உறுதியாகின்றது. இந்தப் படைப்பாக்கத்தில் ஏன் ஒரு பெண் கூட இடம் பெறவில்லை?

ஐந்து திணைகளில் பாடும் மிகச்சிறந்த வல்லமை ஆண்களிடமே இருந்தது. இதற்குக் கபிலர் சான்று. ஏனெனில் இரண்டு தொகுப்புகளிலுமே கபிலர் குறிஞ்சியைப் பாடியுள்ளார். இந்தக் கருத்தின் அடிப்படையில் தொகுப்பைத் திட்டமிட்டவர்கள் செயல்பட்டிருக்கலாமோ என்ற ஐயத்தினோடு அதற்குப் பதில் காண முயல்வோம்.

அள்ளூர் நன்முல்லையார் என்ற பெண்பால்புலவர் சங்க இலக்கியங்களில் மொத்தம் பதினோரு பாடல்களைப் பாடியுள்ளார். இவர் பாடிய பாடல்களில் ஐந்து பாடல்கள் குறிஞ்சித் திணை சார்ந்தது. மீதம் உள்ளவை மற்ற திணைகள் சார்ந்தவை. இந்நிலையில் குறிஞ்சிப் பாக்கள் பாடுவதில் குறைவு பட்டவர்கள் என்று பெண்களைத் தள்ளி இருக்க இயலாது. அவர்களிடம் பணி தரப்பெற்றிருந்தால் செய்யப் பெற்றிருக்கும்.

அடுத்து ஒக்கூர் மாசத்தியார் மொத்தம் எட்டுப் பாடல்களைப் பாடியுள்ளார். இவர் பாடிய பாடல்களில் ஆறு பாடல்கள் முல்லைத்திணை சார்ந்தவை.

ஔவையார் பாடிய ஐம்பத்தொன்பது பாடல்களில் பாலைத்திணை பெரும்பங்கு வகிக்கின்றது. அதாவது ஒன்பது பாடல்களை இவர் பாலைத்திணையில் பாடியுள்ளார். இவர் மேற்கண்ட இரண்டு தொகுப்புகளிலும் புறக்கணிக்கப் பட்டுள்ளார். இவர் தம் பெருமை அப்போதே பரவி இருந்தது என்றாலும் இவர் இத்தொகுப்புகளில் இடம்பெறாமை ஏன் என்று எண்ண வேண்டியுள்ளது.

அதுபோல நெய்தல் பாடச் சிறந்தவர் கச்சிப் பேட்டு நன்னாகையார். நெடும் பல்லியத்தை மருதத்தில் இரண்டு

பாடல்கள் மட்டுமே பாடியுள்ளார். இவர்களை மேற்கண்ட தொகுப்புகளில் இடம் பெறச் செய்திருக்க முடியும். இடம் பெறச் செய்யாமல் போனது ஏன்? திட்டமிடப்பட்ட ஒரு படைப்பாக்கத்தில் திட்டமிடப்பட்டு பெண்படைப்பாளர்கள் மறைக்கப் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான கால இடைவெளி அதிகம் என்ற கருத்தை முன்வைத்தால் அனைவரும் குறுந்தொகை, நற்றிணை போன்ற படைப்பாக்கங்களில் இணைந்து செயல்பட்டுள்ளனர் என்ற பதிலை முன் வைக்க இயலும்.

மேலும் பதிற்றுப்பத்தில் ஆறாம் பத்து காக்கைப் பாடினியாரால் பாடப்பெற்றுள்ளது. இதுவும் திட்டமிடப்பட்ட படைப்பாக்கத்தை உடையது. ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு புலவர் என்ற நிலையில் தொகுக்கப்பட்டது. ஆடுகோட்பாட்டுச் சேரலாதனோடு மிகச்சிறந்த நட்பை இக்கவிஞர் பெற்றிருந்தமையால் இவர் அங்கு ஏற்கப்பட்டுள்ளார்.

அகநானூறும் மிகச் சிறந்த கட்டுக்கோப்பை உடையது. நானூறு பாடல்களில் ஒற்றைப் படை எண்கள் அனைத்தும் பாலைத்திணை பற்றியன. நான்கு என்ற அடிப்படையின முல்லைத்திணையின. இவ்வகையில் பெருமை பெற்ற இந்நூல் படைப்பில் மொத்தம் பதின்மூன்று பெண்கள் ஈடுபட்டு இருபத்து மூன்று பாடல்களைத் தந்துள்ளனர்.

இப்படைப்புப் பின்புலத்தில் இருந்து நோக்கும்போது பெண்கள் ஒரு எல்லைக்குள் நிறுத்தி வைக்கப்பட்டு அதிலிருந்து முன்னேறிவிடாமல் தடுத்துவிட்ட செயல்பாட்டில் மிகக் குறிப்பிடத்தக்க பங்கு ஆண்படைப்பு உலகத்திற்கு, வெளியீட்டு உலகத்திற்கு இருந்துள்ளது .

5

பெண்கள் படைத்த இலக்கணநூல்களின் அழிப்பும் தொடர்வாசிப்புத்தள மறுப்பும்

தமிழ் இலக்கண வளமும் இலக்கிய நிறைவும் கொண்ட மொழி என்பதைச் சொல்லிச் சொல்லிப் பெருமை பூத்துக் கொண்டு இருக்கிறோம். அது ஒருவகையில் உண்மையே. எனினும் யார் படைத்த இலக்கியங்கள்/ இலக்கணங்கள் மீண்டும் மீண்டும் படிக்கப்படுகின்றன. திருவள்ளுவர், பாரதியார், கம்பர், இளங்கோ என்ற ஆண்களின் படைப்புகள் மட்டுமே படிக்கப்படுகின்றன. அதிகம் பதிப்பிக்கப்படுகின்றன. காலம் கடந்து பனையோலை வாசிப்புத் தளத்தில் தன் தனிப் பெருமையை நிலைநாட்டி வந்த ஆண்களின் பனுவல்கள் தொடர்ந்து தமிழ் மக்களின் வாசிப்பிற்குக் கிடைத்துவருகின்றன. பதிப்புகள் பல கண்டுள்ளன. இதன் எதிர்மறையாய்ச் சிந்திக்கத் தலைப்பட்டால் பதிப்புகள் காணாமல், வாசிப்போர்க்கு உரிய நிலையில் வாசிப்புக்கு உரிய நூலாக ஆக்கப் பெறாமல் பல நூல்கள் அழிக்கப் பெற்றுள்ளன.

குறிப்பாக பெண்கள் படைத்த நூல்கள் அனைத்திற்கும் இந்த நிலை பொருந்தும். தமிழின் நீண்ட பழமையில் ஒரு படைப்பு நீண்ட வாசிப்புத் தளத்தைப் பெற்றால் மட்டுமே நிலைத்து நிற்க இயலும். இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை செல்லரித்துவிட்ட பனையோலைகளைத் திருப்பித் திருப்பி எழுத அதனைப் பலமுறை வாசித்து மனனம் செய்த ஒருவராலேயே அப்பனுவல் அடுத்த ஆண்டுகளுக்குக் காப்பாற்றப் பெற இயலும். இத்தகைய அரும்பாடுபட்டு காப்பற்றப்படும் பனுவல் தேவைக்குரிய பனுவலாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தேவையில்லாப் பனுவல்கள் தூக்கி எறியப்படாமலே கேட்பார் இன்றிப் படிப்போர் இன்றி அழிந்து போகும். அதன் அழிவு இரங்கத்தக்கது. இவ்வகையில் பெண்கள் படைத்த இலக்கணங்கள் காக்கைப் பாடினியம், சிறு காக்கைப் பாடினியம் என்ற இரண்டும் ஆகும். சில உரையாசிரியர்களின் மேற்கோள்களால் மட்டுமே இவை தற்போது இருந்ததற்கான அடையாளங்கள் கிடைத்துள்ளன.

முழுமையாகக் கிடைக்கப் பெறாத இந்நூல்கள் யாப்பு இலக்கணம் சார்ந்தவை என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். மேலும் இந்நூல்கள் தொல்காப்பிய செய்யுளியலுக்குப் பின்னால் யாப்பு இலக்கணமரபை உயர்த்திப் பிடித்தன என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இது தவிர யாப்பியல் என்ற புதுத் துறையை இவ்விலக்கண நூல்களே முதலில் கொண்டுவந்தன. அதன்பின் வந்த யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலம் முதலியன இதனின்று கிளைத்தவை. ஆனால் மேற் சொன்னவற்றை வாசிப்புத் தளத்தில் இருந்து அகற்றியவை. இந்த இருநூல்களும் பாடினி என்ற புலவரின் அடைமொழியோடு எண்ணி இணைத்துப் பார்க்கும்போது இன்னும் சில விளக்கங்களைப் பெறலாம். பாடினி என்பது பாடும் தொழிலை உடைய பெண்ணைக் குறிக்கப் பயன்படும் சொல் ஆகும். பாடும் தொழிலை உடைய பெண்ணால் மட்டுமே பாட்டுக் கட்டும் இலக்கண முறைமையை அறிவிக்க முடியும் என்பது அடிப்படைக் கருத்து. இந்த அடிப்படைக் கருத்தின் அடிப்படையில் யாப்பியல் என்ற தமிழ் இலக்கணத்தின் புது நெறியை இப்பெண்பாற் புலவர்களே உண்டாக்கியுள்ளனர் என்பது மாற்ற இயலா உண்மையாகும்.

இவற்றின் காலம் குறித்து ஆய்கையில் பின்வரும் ச. வே. சுப்பிரமணியம் கருத்து கருதத்தக்கது. காக்கைப்பாடினியார் - இவருடைய காலம் கி. பி. ஆறம் நூற்றாண்டாகக் கருதலாம் (தமிழ் இலக்கண நூல்கள் ப. 106) சிறு காக்கைப் பாடினியம் காக்கைப்பாடினியத்திற்கு முன்னது என்ற கருத்தும், பின்னது என்ற கருத்தும் நிலவுகிறது. பேராசிரியர் இவரை காக்கைப் பாடினியாருக்கு இளையரான சிறுகாக்கைப் பாடினியார் என்பார். (மேலது மேற்கோள் ப. 114) ; சிறு காக்கைப் பாடினியார் தளை என்பதோர் உறுப்பைக் கொண்டிலர் என்பதும் குமரியாறு கடல் கொள்ளப் பட்ட காலத்தில் இருந்தவர் என்றும் கூறுகிறார் பேராசிரியர் (மேலது மேற்கோள் ப. 114)

இவ்வகையில் மூத்த இலக்கணநூல்கள் இவை என்பதில் ஐயமில்லை. ஏனெனில் இவை யாப்பருங்கலம் (கி. பி. பத்தாம் நூற்றாண்டு) யாப்பருங்கலக்காரிகை (கி. பி பத்தாம் நூற்றாண்டு) (இவை இரண்டும் ஒரே புலவரால் இயற்றப் பெற்றவை-அமிர்தசாகரர்) என்பன பத்தாம் நூற்றாண்டளவில் எழுந்தன. இவை எழும் முன் வரை யாப்பியலின் இலக்கண

நூல்களாகக் காக்கைப் பாடினியமும், சிறுகாக்கைப் பாடினியமும் இருந்தன என்பதில் ஐயமில்லை. ஏனெனில் பல உரையாசிரியர்கள் இவற்றின் கருத்துகளை ஒப்பு நோக்கியுள்ளனர், அஃதேல் நேர்பசை நிரைபசை எனக் காக்கைப் பாடினியார் முதலாகிய ஒரு சாராசிரியர் கொண்டிலாரெனின்... என்பது இளம்பூரணர் உரையாகும். தொல்காப்பிய முழுமைக்கும் உரையெழுதிய இளம்பூரணர் காலத்தில் இவர்களின் நூல்கள் பயன் பாட்டில் இருந்தன என்பது கருதத் தக்கது.

மேலும் யாப்பருங்கலத்தை விருத்திஉரையாகத் தந்தவரும் காக்கைப் பாடினியத்தைச் சுட்டிப் பெருமைப்படுத்தியுள்ளார். நல்யாப்புக் கற்றார் மதிக்கும் கலை காக்கைப் பாடினியார் (மேலது ப. 105) என்ற நிலையில் சீரும் சிறப்பும் பெற்ற காக்கைப் பாடினியம் எவ்வாறு முழுவதும் அழிக்கப் பெற்றது என்று சிந்திக்க வேண்டியுள்ளது,

தற்போது காக்கைப்பாடினியம் வெறும் 89 நூற்பாக்கள் மட்டுமே கிடைக்கும் அளவினதாக உள்ளது. சிறு காக்கைப் பாடினியத்தில் வெறும் 31 நூற்பாக்கள் மட்டுமே கிடைத்துள்ளன. ஒருகாலத்தில் புகழ்ப்பெற்ற யாப்பு இலக்கணப் பெண் நூல்கள் பத்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு குறிப்பாக யாப்பருங்கல நூல்கள் வந்த பிறகு படிக்க ஆளில்லாமல் போயின. வாசகத் தளம் குறைந்துபோன காரணத்தாலும் யாப்பு பற்றி வளர் செய்திகளை அறிந்துகொள்ள யாப்பருங்கல நூல்கள் வந்துவிட்ட காரணத்தாலும் இவற்றின் செல்வாக்கு குறையத் தொடங்கியது.

பெண்களின் யாப்புப் பனுவலை அதாவது இலக்கணத்தை அமைத்துக் கொள்ளத் தகுதி பெற்றிருந்தும் அதனை வாசிக்கும் ஆண்கூட்டம் வாசிக்க முடியாது வெறுப்பு அல்லது புறக்கணிப்பு தருகிறபோது அவை வாழ்விழந்து போவது என்பது தவிர்க்க முடியாததாக ஆகிவிடுகின்றன. இவ்வகையில் பத்தாம் நூற்றாண்டுவரை களத்தில் இருந்த இந்த நூல்கள் அடுத்த பத்து நூற்றாண்டுகளில் தூக்கி எறியப்பட்டதன் பின்னணி என்ன என்பதை உணரல் அவசியம்.

தற்போது தமிழ் படிக்கும் மாணவர்க்கு யாப்பருங்கலக்காரிகை யாப்பிலக்கணத்திற்காக வைக்கப்படுகிறது. இந்த நூலுக்கு ஏன் காரிகை என்ற பெயர் ஏற்பட்டது என்றால் காரிகையை

அதாவது பெண்ணை விளித்து இந்நூல் யாப்பிலக்கணத்தைக் கற்பிக்கிறது. காரிகை - பெண் - பாடினி இவளுக்கு உரியது யாப்பு இலக்கணம் என்பது மேற்கண்ட இரண்டு பெண் இலக்கண ஆசிரியர்களின் வழியாகக் கிடைக்கும் தெளிவான முடிவு. அவர்களின் நூல்களைப் பின்தள்ள வேண்டும் அதே நேரத்தில் ஆண்களைக் கவரவேண்டும் என்ற நோக்கில் செய்யப்பெற்றது யாப்பருங்கலக்காரிகை எனப் புரிந்துகொள்வதன் மூலம் இதனுள் செயல்படுத்தப் பெற்றுள்ள ஆணாதிக்க அரசியலை உணர்ந்து கொள்ளஇயலும். அதாவது

1. பெண் படைப்பாளர் கண்டறிந்த துறை யாப்புத்துறை
2. அதனை அவர்கள் நன்முறையில் ஆக்கிப் பத்தாம் நூற்றாண்டுவரை செழிக்கச் செய்தனர்.
3. அதன்பின் இந்நூலைத் தொடர்ந்து எழுத முற்பட்ட ஆண் ஒருவர் இந்த இல்க்கண நூல்களில் பாடுவோர் என்ற நிலையில் இருந்த பெண்களைக் கேட்போர் என்ற நிலைக்கு மாற்றியுள்ளார்.
4. இதுவரை கேட்போராக இருந்த ஆண்கள் இங்குப் படைப்போராக ஆக்கப்பட்டனர். இப்புறக்கணிப்பின் மூலம் மிகச் சாதுர்யமாக இங்கு ஆணாதிக்க வாசிப்பு தள அரசியல் மாற்றம் செய்யப் பெற்றுள்ளது.
5. இனி பெண் கேட்பவளாவே இருக்க வைக்கப்படுவாள். ஆண் படைப்பவனாக வைக்கப்படுவான்.
6. பெண்ணுக்கான தனித்த யாப்பிலக்கண உரிமை இதன்மூலம் தட்டிப் பறிக்கப்பட்டுவிட்டது.
7. மேலும் காரிகையை முன்னிறுத்தி இலக்கணம் செய்வதன் மூலம் ஆண்வாசகர்களைத் திருப்திப் படுத்தவும் முடியும் என்பது சொல்லாமலே பெறப்பெறும் செய்தி.

இவ்வகையில் இலக்கணம் இழந்து பெண்இலக்கணவாதிகள் புறம் தள்ளப் பெற்றுள்ளனர். இவ்விலக்கண நூல்களை அரிதின் முயன்று ஓரளவு தந்தவர்களுக்கு நன்றி கூறவேண்டும். தொடர்ந்து பெண் இலக்கியங்கள் இலக்கணங்கள் வாசிப்புத்தளத்தில் இருந்து கொண்டிருக்க வேண்டுமானால் அவை விவாதிக்கப் பெறவேண்டும். படிக்கப் பெற வேண்டும். வாசகத் தளத்தைப் பெறவேண்டும். பதிப்பிக்கப்பட வேண்டும்.

6

காரைக்கால் அம்மையார் பின்தள்ளப் பெற்றதன் சூழலும் அதில் உள்ள ஆணாதிக்க அரசியலும்

தமிழில் பக்தி இலக்கியங்கள் வாசிக்கப் பயன்படுவதைவிட அதிகம் பூசிக்கப்படுகின்றன. அவற்றுக்கென ஒரு வைப்புமுறை தற்போது ஏற்கப் பெற்றுள்ளது. இந்த வைப்புமுறையை ஏற்படுத்தியவராக ஏற்கப் பெறுபவர் நம்பியாண்டார் நம்பி ஆவார்.

இதனை உறுதிப்படுத்துவது திருமுறை கண்ட புராணம் ஆகும். இதனை இயற்றியவர் உமாபதிசிவம் ஆவார். இவரது கருத்துப்படி நம்பியாண்டார் நம்பியே பின்வருமாறு திருமுறைகளை வரிசைப்படுத்தினார் என்பது உறுதியாகின்றது. சம்பந்தர்(1,2,3), அப்பர்(4,5,6), சுந்தரர்(7), மாணிக்கவாசகர்(8), ஒன்பதின்மர்(9), திருமூலர் (10), பன்னிருவர் (11) என்பது நம்பியாண்டார் நம்பி வைத்த வைப்புமுறை ஆகும். இதன்பின் பெரியபுராணம் 12-ஆம் திருமுறையாக வைக்கப்பெற்றது.

மன்னுத்தமிழ்விரகரெங்கள் காழிவேந்தர்வகுத்தருளால்
அமைத்ததிருமுறை ஓர்மூன்றும்
அன்னவகை வாகீசர் முறை ஓர்மூன்றும்ஆரூரர்உரைத்த
திருமுறையதொன்றும்
துன்னவகை ஏழாகத் தொகுத்துச் செய்தான்தூயமனு
எழுகோடி என்பதுன்னி
தன்னிகரில் திருவருளால்மன்னன்
தானுந்தரணியோர்வீடுபெறுந் தன்மைசூழ்ந்தே
(திருமுறை கண்டபுராணம் 24)

ஆகவளர் திருமுறைஏழ் அருட்டிருவா சகமொன்று
மோகமெறி திருவிசைப்பா மாலை முறைஒன்று சிவ'
போகமிகு மந்திரமாம் முறையொன்று புகழ் பெறவே
பாகமிகு திருமுறைகள் பத்தாக வைத்தார்கள்
(திருமுறை கண்டபுராணம் 26)

மந்திரங்கள் எழுகோடி ஆதலினால் மன்னுமவர்
இந்தவகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்துப்
பந்தமுறு மந்திரங்கள் பதினொன்றும் ஆதலினால்
அந்தமுறை நான்கினொடு முறைபதினொன்றாக்கினார்
(திருமுறைகண்டபுராணம்28)

இம்மூன்று பாடல்களும் திருமுறை வைப்புமுறை குறித்தமைந்தனவாகும். சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரைவிடக் காலத்தால் முந்தியவராகக் கருதத் தக்கவர் காரைக்கால் அம்மையார் ஆவார். எனினும் அவரது பனுவல் பதினொன்றாம் திருமுறையுள் வைக்கப் பெற்றுள்ளது. பதிகம் என்ற முறைமையை திருமுறைகளுக்கு உரியதாக்கிய பெருமைக்கு உரியவர் என்பது அனைவராலும் கருதத்தக்கது. அது போல திருமுறையுள் அதிகமாகப் பயன்படுத்தப் பெற்றுள்ள நட்டபாடையை முதன்முதலில் கையாண்டவரும் இவரே. அதனால் இவர் திராவிட இசையின் தாயாகக் கருதப் பெறுகிறார்.

இவ்வளவு பெருமை வாய்ந்த காரைக்காலம்மையார் பாடல்கள் பதினோராம் திருமுறையில் அடக்கப் பெற்றதன் நோக்கம் என்ன எனச் சிந்திக்க வேண்டியுள்ளது.

நம்பியாண்டார் இத்திருமுறைகளை வரிசைப்படுத்தினார் என்பதற்கு அவரது பாடல்களில் தெளிவான அகச்சான்றுகள் இல்லை. சில மறைமுகமான குறிப்புகள் உள்ளன. அவர் ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் குறித்த பல பனுவல்களைப் பாடியுள்ளார்.அவற்றுள் இக்குறிப்புகள் கிடைக்கப் பெறுகின்றன.

அவை பின்வருமாறு

1. நம்பியாண்டார் நம்பியின் பாடல்கள் அவரால் தொகுக்கப் பெற்றதாகக் கருதப்படும் பதினோராம் திருமுறையின் நிறைவில் அமைக்கப் பெற்றுள்ளன.

2.நகரம் கெடப்பண்டு திண்சேர் மிசை நின்று நான்மறைகள்
பகர்அம் கழலவ னைப்பதினாறாயிரம் பதிகம்
மகரம் கிளர்கடல் வையந் துயர்கெட மொழிந்த
நிகரங் கிலகலிக் காழிப் பிரான் என்பர் நீள்நிலத்தே
(ஆளுடைய பிள்ளையார் அந்தாதி 15)

இப்பாடலில் சம்பந்தர் பதினாயிரம் பதிகங்கள் பாடியுள்ளதாக இவர் குறிப்பிடுகிறார். இக்குறிப்பு அவர்க்கு முன்னதாகவே சம்பந்தர் பாடல்கள் தொகுக்கப்பெற்று வழக்கில் இருந்தது என்பதை உணர்த்துகிறது. இதன் வழியே அத்தொகுப்பை அப்படியே இவர் ஏற்றுச் சம்பந்தருக்கு முதலிடம் தந்து முறைப்படுத்தியிருக்கமுடியும் என்று எண்ண முடிகின்றது.

3. பதிகமே எழுநூறு பகருமா கவியோகி
பரசு நாவரசான பரமாகரணவீசன்

(திருநாவுக்கரசர் திரு ஏகாதசமாலை 8)

இவ்வடிகள் நாவுக்கரசரின் பதிக எண்ணிக்கையைக் குறிப்பன. இதன்வழியாக நம்பியாண்டார் நம்பி காலத்தில் அப்பர், சம்பந்தர் பதிகங்கள் வழக்கில் இருந்தமை தெரியவருகிறது.

4, சுந்தரரின் திருத்தொண்டத் தொகை இவரால் பின்பற்றப் பெற்று திருத்தொண்டர் திருவந்தாதியாக வளர்க்கப் பெற்றது.

தேவார மூவரை வணங்கிவரும் வழக்கம் இவர்காலத்தில் இருந்தமைக்கு இவை சான்றுகளாகும்.

இக்குறிப்புகள் வழியாகத் திருமுறை மூவர் என்ற நிலை பெருவழக்காக நம்பி காலத்தில் இருந்தமையை உணரமுடிகின்றது.

இந்த வழக்கின்படி இம்மூவரை முன்னதாக நம்பி வைத்ததற்கு இம்மரபு காரணமாகும். இதன்பின் திருவாசகம், ஒன்பதாந் திருமுறை, திருமந்திரம் ஆகியன ஏதோ ஒரு தொடர்பு கருதி தொடர்ந்துள்ளன. இருப்பினும் பதினொன்றாம் திருமுறை சற்று வேறுபாடானது. பல காலங்களில் எழுந்த பனுவல்கள் இங்குத் தொகுத்தளிக்கப் பெற்றுள்ளன. சங்க நூலாகக் கருதப்படும் திருமுருகாற்றுப்படையும், நம்பியாண்டார் நம்பி பாடிய பனுவல்களும் இங்குத் தொகுக்கப்பெற்றுள்ளன.

சித்தி தரும் இறை மொழிந்த திருமுகபா சுரமுதலாம்
உய்த்தபதி கங்களையும் ஒருமுறையாச் செய்க எனப்
பத்தி தருதிருமுறைகள் பதினொன்றாப் பண்ணினார்

(திருமுறை கண்டபுராணம் 27)

என்பது இத்திருமுறை தொகுக்கப் பெற்றதன் காரணம் ஆகும். எனவே பதினொன்றாம் திருமுறை பல காலகட்டங்களில் எழுந்த திருப்பாடல்களின் தொகுப்பு என்பது அறியத்தக்கது.

இது சிவபெருமான் தந்த திருமுகப்பாசுரம் என்ற பகுதியை முன்னதாக வைத்துத் தொகுக்கப் பெற்றுள்ளது. முருகன் குறித்த பாடல்களும் இதில் இணைவு பெற்றுள்ளமை இதன் நெகிழ் தன்மையைக் காட்டுவதாக உள்ளது.

திருமுகப்பாசுரத்தின் அடுத்து அமைவது காரைக்கால் அம்மையாரின் பாடல்கள். இவர் சுந்தரரால் திருத்தொண்டத் தொகையுள் அப்பருக்கும் சம்பந்தருக்கும் முன்பே .காட்டப் பெற்றிருப்பவர் என்பது இங்குக் கருதத்தக்கது. இவரது பாடல்கள் மூத்த திருப்பதிகம் என்றழைக்கப்பெறும் பெருமையின. இவ்வாறு இருக்கையில் இவர் பின்தள்ளப் பெற்றிருப்பதன் காரணம் என்ன என்று ஆராய வேண்டியுள்ளது.

திருமுறை வைப்புமுறையில் பின்பற்றப் பெற்றுள்ள சில பொது முறைமைகள் இறைவனைப் பற்றி அதிகம் பாடினோர்க்கு முன்னிடம் தரப் பெற்றுள்ளது என்பது முழுக்க உண்மையாகும். பொதுத் தத்துவம் பாடிய மந்திரம் இதனால் பின்தள்ளப் பெற்றிருக்கலாம்.

இறைவனால் அதிக நிகழ்வுகளில் ஆட்கொள்ளப் பெற்றவர்களுக்கு முன்னிடம் தரப்பெற்றுள்ளது.

ஆண்களுக்கு முன்னிடம் தரப் பெற்றுள்ளது. பதினோராம் திருமுறையில் திருமுகப் பாசுரம் என்ற இறைவன் பாடிய பகுதி இதன்வழி காரைக்காலம்மையாரின் பதிகங்களுக்கு முன் இடம்பெற்றுள்மை இங்குக் கவனிக்கத் தக்கது. பஞ்சபுராணம் பாடும் மரபு சைவக் கோயில்களில் உண்டு. அவற்றில் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருப்பல்லாண்டு (9-ஆம் திருமுறை) ஆகியன மட்டுமே இன்று வரை பாடப் பெற்றுவருகின்றன். இம்மரபில் காரைக்காலம்மையார் பாடல் இடம்பெறாதது கவனிக்கத்தக்கது.

நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியில் காரைக்காலம்மையாரின் பாடல்கள் பற்றி எவ்விதக் குறிப்பும் இல்லாமல் இருப்பதும் இங்குக் கவனிக்கத் தக்கது. திருவந்தாதி எழுதும்வரையான அளவில் கூட நம்பியாண்டார் நம்பிக்கு காரைக்கால் அம்மையார் பாடிய பாடல்கள் கிடைத்தில என்றுகூட முடியலாம். பின் வந்த சேக்கிழார் அம்மையார் பனுவல்கள் குறித்த செய்திகளைக் குறிக்க நல்ல வேளையாகப் பதினோராம் திருமுறையில் அவை தொகுக்கப் பெற்றுவிட்டன.

முன்னவர், இசை வல்லுநர், தெய்வச்சிறப்பினர் என எல்லாம் இருந்தும் பத்தோடு பதினொன்றாக அம்மையாரின் பாடல்கள் கருதப்பட்டிருப்பதன் நோக்கம் என்ன என்பதை மிகத் தீவிரமாக ஆராய வேண்டியுள்ளது.

வெண்பா யாப்பில் அமைந்தவை அற்புதத் திருவந்தாதி. சங்க காலத்திற்குப் பின் நீதி இலக்கிய காலத்தில் அதிக ஆதிக்கம் செலுத்தியது வெண்பாதான். வெண்பா எழுதுவது கடினம் என்ற சூழலில் அந்தாதி நிலையில் இவர் செய்துள்ள இப்படைப்பு மூத்தது, புதுமையானது என்றால் அது மிகையாகாது.

இறைவனால் ஆட்கொள்ளப் பெறுதல், பாடல் புனைதல், கயிலாயம் வரை யாத்திரை மேற்கொள்ளல் என்ற பல நிலைகளில் மற்ற திருமுறை ஆசிரியர்களிடம் காணலாகும் அனைத்துப் பண்புகளையும் பெற்றுள்ள இவர் அனைவருக்கும் முன்னதாக இடம் பெற வேண்டியவர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இவ்வளவில் முன்னிடம் பெறவேண்டிய இவரைப் பின்தள்ளியிருப்பதன் ஒரே நோக்கம் அவர் மக்களின் இயல்பான வாழ்க்கைக்கு முரண்பட்டவர் என்ற ஒன்றே அன்றி வேறில்லை. இவரின் வாழ்வு தரும் செய்தி பெண்கள் தனித்து வாழஇயலும் என்பதைக் காட்டுவது. இதன்மூலம் ஒவ்வொரு பெண்ணும் இவரை முன்மாதிரியாகக் கொண்டால் அதன்மூலம் தமக்கான முன்வாய்ப்புகளை ஆண் உலகம் இழக்க வேண்டி வரலாம் என்ற தயக்கமே இவரின் பின்தள்ளலுக்குக் காரணம். இது கருதியே இவரின் பாடல்கள் பஞ்சபுராணப் பாடல்மரபில் இணைக்கப்படுவது இல்லை.

7

பெண் மொழி X ஆண் மொழி

எழுதும் எழுத்துகளில் உருவ வேறுபாடு இல்லை. ஆனால் எழுத்துகள் கூடி உருவாகும் படைப்பில் பால்வேறுபாடு காண இயலும். ஆண்கள் எழுதும் படைப்புகளில் அவர்களின் தனித்த மேலாதிக்க நிலையையும், பெண்கள் எழுதும் படைப்புகளில் பெண்களின் சொந்த உணர்வு வெளிப்பாட்டு நிலையையும் இனம் காண முடியும். இனம் காணப்படும் பெண் எழுத்துகளின் சிறப்புக் கூறுகள் பெண் மொழியின் அடிப்படைகளாக அமைந்து அவை மேலும் வளர்த்தெடுக்கப்படும் சூழலில் தனித்த மொழியாக ஆண் உட்புகமுடியாத மொழியாக ஆண் சார்பற்ற மொழியாக பரிணமிக்க இயலும். இந்தப் பரிமாணத்தின் மூலம் பன்னெடுங்காலமாக இருந்து வந்த ஒரு தலைப்பக்க இலக்கியப் படைப்பு, திறனாய்வு முயற்சி உடைமையும். பெண்ணுக்கான கட்டற்ற மொழி உருவாகும்.

இவ்வகையில் உலகஅளவில் பெண் மொழி இருந்ததற்கான ஒரு காட்டு இருக்கிறது. சீனா நாட்டின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள விவசாய நிலப்பரப்பு ஜியாங்காங் என்பதாகும். இங்கு பெண்கள் மட்டுமே பேசும் ஒரு மொழி உண்டு. அதற்குப் பெயர் நுஷு (NUSHU) என்பதாகும். பெண்மொழி அல்லது பெண்பிரதி என்பது இதன் பொருள். இது பெண்கள் தமக்குள்ளே ரகசியமாகப் பேசிக் கொள்ளும் மொழியாகும். ஆண்கள் இதனை அறிந்துகொள்ள முடியாது. படிக்க முடியாது. பயில முடியாது. சீன மொழியோடு தொடர்புடைய ஆனால் அதிலிருந்து மாறுபட்ட ஒரு மொழி இம்மொழி. இது தோன்றுவதற்கு அங்கு நிலவிய சூழல் காரணமாக இருந்தது. இம்மொழி காலம் காலமாகப் பெண்களிடம் ஒரு தலைமுறையினரால் மறு தலைமுறைக்குப் பரவியது. இந்த மொழி பற்றிய ஆராய்ச்சி 1982 ஆம் ஆண்டில் கோங்ஜிமிங் என்ற சீன மொழி ஆசிரியரால் வெளியுலகிற்குத் தெரிய ஆரம்பித்தது. ஆனால் இந்தக் காலத்திலேயே இம்மொழி அழியும் நிலையை எட்டிவிட்டது. இருபதாம் நூற்றாண்டின் கல்விப் பரவல் இந்த ரகசிய மொழியைத் தடைசெய்து பொதுமொழிக்குப் பெண்களை அழைத்துச் சென்றுவிட்டது.

இந்தப் பெண்மொழிச் சோக வரலாற்றைக் கேட்கையில் தமிழ் மொழி குறித்தும் பலவகையில் எண்ணத் தோன்றுகிறது. தமிழ் மொழியில் உள்ள தடைப்பட்ட பெண் இலக்கிய மரபு தனக்குள் சொல்ல வேண்டிய பெண்செய்திகள் பலவற்றை மறைத்து வைத்துக்கொண்டிருக்கிறது என்பது மட்டும் உறுதி. சங்ககாலம், அதனைத் தொடர்ந்து பக்தி காலம் அதனைத் தொடர்ந்து நவீன இலக்கிய காலம் என்று வளர்ந்த சில பெண் படைப்புக்கள் மிளிரல்களில் காணலாகும் பெண்மொழிக் கூறுகள், அவை மறைவாகத் தத்தமக்குள் சொல்லிக் கொள்ளும் பொருள்கள் இவற்றை இனம் காணவேண்டிய ஆராய்ச்சி இக்காலததில் தேவை என்பதை மேற்காணும் பெண்மொழிச் சான்று தமிழ் பெண் மொழி ஆய்வாளர்களுக்கு உணர்த்துகிறது.

சீனா மொழியின் அடிப்படையிலேயே இருந்துகொண்டு அதிலிருந்து வேறுபட்டுச் செய்யப் பட்ட நுஷ மொழி போலவே தமிழ் மொழியில் இருந்து வேறுபடும் பெண்மொழி இயல்பு அடிப்படைகளை இனம் காணும் போக்கிற்குத் தற்போதைய பெண்ணியத் திறனாய்வுகள் வளரவேண்டும். இந்த ஆய்வால் தலைமுறை தலைமுறையாகத் தடைப்பட்டாலும் அழியாமல் வளர்ந்து வந்த பெண் இலக்கிய மரபை, பெண் மொழி இயல்பைக் காண இயலும்.

இவ்வகையில் பெண் மொழி இயல்பைச் சற்றே உரசிப் பார்ப்பதாக இக்கட்டுரை அமைகிறது. பாவைப் பாடல்கள் என்ற இலக்கிய வகைமை பெண்கள் மட்டுமே பாடிக் கொள்ளக் கூடிய இலக்கிய வகைமை ஆகும். பெண்கள் மட்டுமே கலந்து கொள்ளக் கூடிய ஒரு வாழ்க்கை முறையும் ஆகும். மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளை முன்வைத்து எடுக்கப்பட்ட இந்நோன்புமுறை பெண்கள் தமக்குள் இணைந்து கொள்ளக் கூடிய நன்முறையை உடையது. ஆண்டாளால் படைக்கப் பெற்ற திருப்பாவை இவ்வகைமையுள் தலையாயது.

மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவை இவ்வகைப்பட்டது என்றாலும் பாடியவர், பாடிய பாடல்களின் எண்ணிக்கை இவற்றால் இது முற்றிலும் மாறுபட்டது. இப்பிரதியில் பெண்ணுக்குரிய வகைமையை ஓர் ஆண் தன் கையகப்படுத்திக் கொள்கிறார். திங்கள் முழுவதும் பாடப்படவேண்டிய முப்பது பாடல்களுக்குப் பதிலாக இருபதை இவர் படைத்துக் குறைத்துக்

கொண்டுள்ளார். திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களைத் தற்போது இந்தப் பத்து நாட்களுக்கும் பாடும் முறைமை உள்ளது.

பொதுவாக இலக்கிய வரலாறுகள் கருதும் காலமுறைப்படி ஆண்டாள் முன்னவராகவும், மாணிக்கவாசகர் பின்னவராகவும் கொள்ளப்படுகின்றனர். இதன்வழி ஆண்டாளை நோக்கி மாணிக்கவாசகர் பாவைப் பாடல்களைப் புனைந்திருக்கலாம். ஆண்டாளின் வாழ்க்கை முறை அதாவது கடவுளை அடைந்த முறை இவரைப் பெரிதும் கவர்ந்ததின் மூலம் அதே வாழ்க்கை முறையை இவரும் கைக்கொள்ளக் கருதி இறைவனை நாயக நாயகி பாவத்தில் காணும் போக்கில் இவர் பெண்ணாய் தன்னை உருவகப்படுத்திக்கொண்டு படைப்புகளை புனைந்திருக்கவேண்டும் என்ற கருத்து மாணிக்கவாசகர் படைப்புகளைக் காணுகையில் ஏற்படும் பொதுக் கருத்தாக உள்ளது. இவ்வகையில் பெண் பாடிய திருப்பாவை, ஆண் பாடிய திருவெம்பாவை என்ற இரண்டையும் இணைத்து ஆய்வு மேற்கொண்டால் இருவர் பாடிய செய்யுள் மொழியில் வேறுபாட்டைக் காண முடியும். இந்த வேறுபாடு பால்வேறுபாடாக அமைந்து பெண்மொழிக் கூறுகளை வெளிப்படுத்தும்.

இதனடிப்படையில் இரண்டு பிரதிகளில் இருந்தும் ஒவ்வொரு பாடல் மட்டும் இக்கட்டுரையில் ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

சிற்றம் சிறு காலே வந்து உன்னைச் சேவித்து உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்று ஏவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்

(திருப்பாவை.29)

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்குஅப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம் கேள்
எம்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க

எம்கை உனக்குஅல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்குஇப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்.

(திருவெம்பாவை.19)

இவ்விரண்டு பாடல்களும் ஏறக்குறைய ஒரு பொருளின. பாவை நோன்பின் முடிவில் அருள் வேண்டும் திறத்தன. இவற்றை ஒப்புநோக்கிக் காணும்போது சில பால் வேறுபாட்டு எழுத்துகள் இருப்பதை உணரமுடியும்.

1. தன்னைக் காத்துக் கொள்கிற தொடர்கள், 2, அடக்கத் தொடர்கள், 3. தொடர் கேள்விகள், 4. சாய்வுக் கூற்று முறை (நேர்க்கூற்றாகக் கூறாமை), 5.செயற்கைப் பெயரடை, 6. தூய்மையான இலக்கணம் பிறழாத சொல்லாட்சி, 7. நகைப்பண்பு இல்லாமல் இயல்பாய்க் கூறும் முறை, 8. சிறப்பான தனித்த சொல்லாட்சிகள், தொடர்கள் முதலான பண்புகள் பெண்படைப்புகளுக்கு உரிய பண்புகள் என்று ஓர் ஆய்வாளர்[1] காட்டுகிறார்.

சிறப்பான சொல்லாட்சிகள் என்ற பண்பு பெண்மொழிக்குரிய பண்பாகும். மற்றையவை ஆண்களில் இருந்து பெண் படைப்பை வேறுபடுத்துவன என்றாலும் அவை பெண்ணை அவளின் படைப்பை ஒரு வரையறைக்குள் அடக்கத் தக்கன. இவ்வாறு அடக்கமான மொழியைப் பெண்கள் படைப்பு மொழியாகக் கையாளுவதற்கு அவர்கள் வாழ்ந்துவரும் சூழல் மிக முக்கிய காரணமாகும்.

எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம் என்ற ஆணின் உரிமைக் குரலைப் பெண் எழுத்தில் காண இயலாது. சிற்றம் சிறு காலே வந்து உன்னை சேவித்து உன் பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய் என்று அடக்கியே வாசிக்க வேண்டிய கட்டாயம் பெண் வாழ் சூழலாக இருந்ததால் அவள் உரிமையோடு கடவுளைக் கேட்க முடியவில்லை. போற்றும் காரணம், போற்றிப் பெறப்போகும் வரம் என்றெல்லாம் கேட்காமல் பொருள் எனக் கூறியிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

சேரற்க, செய்யற்க, காணற்க என்ற வாழ்க்கைக் கட்டளைகளை ஒரு பெண் நேரடியாக அறிவிக்க இயலாது. இங்கு

மாணிக்கவாசகர் பெண் உருவில் வந்த ஆண் என்பதால் அவரால் கட்டளையிட்டுத் தன் வாழ்வை அமைத்துக் கொள்ள முடிகிறது. சூரியன் எததிசையில் உதித்தால் என்ன இவை நல்கினால் போதும் என்ற அளவில் இயற்கையைக் கூட அவரால் எடுத்தெறிந்து பேசிவிட முடிகிறது. எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம் என்று தயவான முறையில் இறைவன் ஏற்றாலும் ஏற்கா விட்டாலும் பணி செய்வது தம் கடமை என ஆண்டாள் பாடியுள்ளார்.

பெண் படைப்பின் அடையாளமாகக் காட்டப் பெற்ற மற்ற இயல்புகளும் ஆண்டாளின் பாடலில் காணப்படுகின்றன. என்றாலும் பெண்பாலுக்குரிய தனித்த சொல்லாட்சிகள் தொடர்கள் சிலவும் உள்ளன. மற்றை நம் காமங்கள் என்ற தொடராட்சி அவ்வகையில் சிறந்தது. காமம் என்ற சொல்லுக்கு கழகத் தமிழ் அகராதி தரும் பொருள்கள் பின்வருமாறு[2] அன்பு, ஆசை, புணர்ச்சி இன்பம், சிற்றின்ப ஆசை, விருப்பம், ஆசைப் படும் பொருள், குடி, கிராமம் போன்ற பல. இவையனைத்தையும் தாங்கி நிற்கிறது இந்தச் சொல். இதில் எந்தப் பொருள் கொண்டு இங்கு ஆளப்பட்டுள்ளது என்பதை ஆராய வேண்டியுள்ளது. இதற்கு உரையாசிரியர்கள் விருப்பங்கள் என்ற மேலோட்டப் பொருளைச் சொல்லிவிடுவார்கள். உரையாசிரியர்கள், அகராதியாளர்கள் சொல்லும் எல்லாப் பொருளையும் தாண்டி ஆண்டாள் கொண்ட பொருள் வேறானது.

காமம் என்பதற்காகன காமங்கள் என்ற பன்மைமுடிவு தமிழ் மரபில் புதியது. மற்றை நம் காமங்கள் என்ற குறிப்பும் இங்கு எண்ணத்தக்கது. பன்மைகள் என்பது பெண் எழுத்தில் காணப்படும் பொதுப்பண்பாகும்.[3] காமம் என்ற சொல்லை ஒரு ஆண் சொல்லத் தயங்குவதில்லை. ஆனால் பெண் சொல்லத் தயங்குவாள். அப்படிப்பட்ட நிலையில் தனக்கான காமங்கள் என்பதைவிட நம்எல்லார்க்குமான காமங்கள் என்ற சொல்லாட்சியை ஆண்டாள் பயன்படுத்தியிருப்பது மிகவும் வேறுபட்ட ஒன்றாகும். உனக்கு நாங்கள் ஆளாவோம். அடிமைத் தொழில் செய்வோம் என்ற தொடரின் முடிவாய் இதனோடு உன்னைக் கணவனாகப் பெற்று உன்னோடு நாங்கள் வாழும் வாழ்க்கை அனைத்தையும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மையில்

உரைப்பதாக இத்தொடர் உள்ளது. இத்தொடரின் இச்சிறப்பு கருதி இது பெண் மொழியின் சிறப்புக்கூறாகக் கொள்ளலாம்.

முடிவாக திருப்பாவை, திருவெம்பாவை இவையிரண்டும் பெண் மொழி ஆண்மொழி என்பதற்கான ஒப்பீட்டுக் களமாக விளங்குகிறது என்பது தெளிவு. மேலும் திருப்பாவை பெண்இலக்கியம் என்றநிலையிலும், வகையாலும், வடிவாலும் முழுமையும் நிறைவும் பெற்று பெண்மொழிக்கூறுகள் அடங்கியதாகவும் உள்ளது. ஆண்மொழி பெண்மொழி இவையிரண்டும் சமமானவை அல்ல. ஒன்றுக்கு ஒன்று வேறுபட்டவை.

குறிப்புகள்

1] The following ten features have been identified as "Women's Language" (based on: Lakoff 1975): Hedges, polite forms, Tag questions, Speaking in italics, Empty adjectives, Hypercorrect grammar and pronunciation, Lack of a sense of humour, irect quotations, Special vocabulary, Question intonation in declarative contexts

[2]கழகத்தமிழ்அகராதி.ப323

[3] Key, Mary. "Linguistic Behavior of Male and Female." In Readings in Applied Linguistics , 3rd ed., ed. Harold B. Allen and Michael Linn. New York : Alfred A. Knopf, 1982. 284.Mary Key cites Roger Shuy's finding that women are less likely to use syntactic features which are "indicators of lower status: multiple negation, pronominal apposition, plurals, non-standard third person singular verb inflections, and possessives" ("Behavior" 284).

8

பெண்ணியக் கட்டுரையாளர் நீலாம்பிகை அம்மையார்.

தமிழ் இலக்கியப் பரப்பில் கதை, கவிதை போன்ற வகைகளில் பெண்களின் பங்களிப்பு குறிப்பிட்டுச் சொல்லுகிற அளவிற்கு உள்ளது. பெண் கட்டுரையாளர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். உரைநடைத் தமிழில் முகிழ்த்த காலம் தொட்டே இவ்வெண்ணிக்கை குறைவாக இருந்துள்ளது. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். கட்டுரைகளை எழுதுவதற்கு என்று ஒரு தகுதி இருக்கவேண்டும் என்ற எண்ணம்; கட்டுரைகளை விரும்பிப்படிக்கும் வாசகர்கள் குறைவு, கட்டுரையின் கருப்பொருள் தேர்வில் ஏற்படும் சிக்கல்கள் என்று பல தடைகள் காரணமாக இவ்வெண்ணிக்கைக் குறைவு நிகழ்ந்திருக்கலாம், தொடர்ந்து வரலாம்.

தமிழில் மூத்த பெண் கட்டுரையாளர் என்று நீலாம்பிகை என்ற அம்மையாரைக் குறிப்பிடலாம். இவர் மறைமலை அடிகளாரின் மகளாகவும், மாணவியாகவும் விளங்கியர். இவர் “முப்பெண்மணிகளின் வரலாறு(1928), பட்டினத்தார் போற்றிய மூவர்(1934), தனித்தமிழ்க்கட்டுரைகள், வடசொல் தமிழ் அகரவரிசை(சிற்றகராதி), ஆராய்ந்தெடுத்த அறுநூறு பழமொழிகளும் அவற்றிற்கேற்ற ஆங்கிலப் பழமொழிகளும் (1952) “ ஆகிய நூல்களைப் படைத்தவராக அறியப் பெறுகிறார். அகராதித் துறையில் நுழைந்த பெண் இவர் என்றும் பெருமை கொள்ள முடிகின்றது.

இவரின் கட்டுரை நூல்கள் அனைத்தும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் சார்பில் ஆசிரியையின் வெளியீடாக வெளியிடப் பெற்றுள்ளன. இவரின் சில நூல்கள் மறுபதிப்புகள் பெற்றுள்ளன.

குறிப்பாக இவரின் படைப்புகளில் “முப்பெண்மணிகளின் வரலாறு” என்ற கட்டுரை நூல் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதுகளில் வாழ்ந்த பெண்களின் நிலையைத் தன் கட்டுரைக் கருப்பொருளோடு உடன் கூட்டி உரைப்பதாக உள்ளது.

'நந்தமிழ் நாட்டவர் தம் பெண்மக்கள் கல்வியில் உயர்ந்து மேன்மக்களாக வேண்டுமென்று கருதுகின்றார்களில்லை. இவர்கள் தமக்குப் பெண்மக்கள் பிறந்தவுடனே வருந்துவது மட்டுமின்றி அப்போதே அவர் தமக்குக் கணவர் யார் அமைவார்களென்னுங் கவலை கொள்கின்றனர். இன்னும் "தீவினை செய்தவர்களே பெண்மக்களாய்ப் பிறக்கின்றனர். இவர்கள் வீட்டு வேலைகளை ஒழுங்காகக் கற்றுக் கொண்டாற் போதும். இவர்கட்குக் கல்வி எதற்கு?, இவர்கள் கல்வி கற்று ஆண்மக்களைப் போல் பொருள் தேடுவார்களா? இவர்கள் அங்ஙனம் கற்றுப் பேரறிவாளர்களானாலும் ஊரார்க்குப் பயன்படுகின்றவர்களேயல்லாமல் நமக்குச் சிறிதும் பயன்படார்" என்று பலவாறாகக் கூறிப் பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதில் சிறுதும் கருத்தில்லாதவர்களாக இருக்கின்றார்கள்.' என்ற இந்த நூலின் முன்னுரைப் பகுதி ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு முன்னதான சிந்தனை ஆகும். ஆனாலும் இந்தச் சிந்தனையின் ஒரு சொல்லைக்கூட விலக்கமுடியாத நிலைதான் இன்னமும் இந்நாளிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை எண்ணுகையில் பெண் விடுதலையின் வெற்றி பெறா நிலை புரியவரும்.

இக்காலப் பெண்கள் அதிகமாகக் கற்கிறார்கள். அதிகமாகச் சம்பாதிக்கிறார்கள். அவர்களின் கல்வி ஆங்கில வழிக் கல்வியாகச் செழிக்கிறது. இதனையும் நீலாம்பிகை அம்மையார் கணக்கில் கொண்டு அது குறித்தும் தம் கருத்தை இம்முன்னுரைப் பகுதியில் எடுத்துரைக்கின்றார்.

"சிலர் மட்டுமே தம் பெண்மக்களுக்குக் கல்வி கற்பிக்க முன் வருகின்றார்கள். ஆனால் இவர்கள் முயற்சியும் சிறந்த முயற்சியின்பாற் பட்டதன்று. இவர்கள் தம் பெண்மக்களை உயர்தரக் கல்லூரிகட்கு அனுப்பி ஆங்கிலக் கல்வி மட்டுங் கற்றுப் பெரும் பட்டங்கள் பெறும்படி செய்கின்றார்களே ஒழிய அவர்கள் தம் தாய்மொழிக் கல்வியிலும் பெரும் புலமை அடையுமாறு ஊக்குவிக்கின்றார்களில்லை. இவர்கள் தம் பெண்மக்கள் ஆங்கிலக் கல்வியில் உயர உயரத் தம் தாய்மொழியினிடத்தில் சிறிதும் பற்றில்லாமல் நம் நாட்டுப் பழக்க வழக்கங்களையும் அறவே மறந்து மேனாட்டவர்களைப் போல் நடக்கத் தொடங்குகின்றனர்... தமிழிலும் ஆங்கிலத்திலும் அறிவு நூற்கல்வி இல்லாத பெண்மக்கள் அறிவுடையராதல் முடியாது" என்று இம்முன்னுரைப் பகுதி மேலும் தொடர்கிறது.

இதனுள் இவ்வம்மையார் உணர்த்த வரும் கருத்தின் ஆழம் இற்றைக் காலத்திற்கு மிகவும் பொருந்துவது. தாய்மொழியைப் பற்றிய அறிவு,தாய்மொழி இலக்கியங்கள் பற்றிய அறிவு என்பது பண்பாடு, பழக்க வழக்கங்கள் உடன் கொண்டு வளரும் அறிவு என்பதை இவ்வம்மையார் வலியுறுத்துகின்றார்.

இக்கட்டுரையை இவ்வம்மையார் எழுதியபோது மேனாட்டவர்கள் நம் நாட்டிலேயே ஆட்சி செலுத்தி வந்தனர். தற்போது அவர்கள் சென்றுவிட்டபோதும் மேனாட்டாரைப் போல் நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ளும் முறைமையிலேயே பெண்கள் கற்பது, பழகுவது போன்றன இருப்பதை எண்ணுகையில் இவ்வம்மையாரின் கருத்து நடைமுறையாக்கப்பட வேண்டும் என்ற பெருநோக்கத்தின் தேவை தெரியவருகின்றது.

இப்பழக்க வழக்கங்களை, மரபுகளை உண்டாக்குவதற்காகவே தான் கட்டுரைகளை, நூல்களை எழுதுவதாக இவ்வம்மையார் குறிப்பிடுகின்றார். இவர் ராயபுரம் பகுதியில் இருந்த நார்த்விக் பெண்கள் கல்லூரியின் தலைமைத் தமிழாசிரியராக விளங்கிவர் என்ற நிலையும் இங்கு எண்ணத்தக்கது. பெண்கள் கல்லூரி என்ற கட்டமைப்பு முழுக்க முழுக்கப் பெண்கள் நலம் சார்ந்தது என்பது கொண்டு இவ்வகையில் அவரால் சிந்திக்க முடிந்துள்ளது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது.

காரைக்காலம்மையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார் ஆகிய மூன்று பெண்மணிகளின் வரலாறுகளை மேற்காட்டிய கட்டுரை நூலில் தனித்தனியாக முதலில் காட்டுகின்றார். அதன்பின் இப்பெண்கள், இவர்களின் வாழ்வு, இவர்களின் செயல்கள் குறித்த தன் ஆய்வுக் கருத்துக்களை இத்தனித்தனிக் கட்டுரைகளின் பின்பகுதியில் எடுத்துரைக்கின்றார். இதே முறை பட்டினத்தார் பாராட்டிய மூவர் என்ற நூலிலும் கடைப்பிடிக்கப் பெற்றுள்ளது. அதாவது எடுத்துக்கொண்ட பொருளின் அடிப்படைக் கருத்துகளை முதலில் அறிவித்துவிட்டு அதன்பின் ஆராய்ச்சி செய்திகளை அளிப்பது என்ற முறைமை இவரிடம் காணப்படுகிறது.

இவ்வாராய்ச்சிப் பகுதிகளில் பெண்கள் கடைப்பிடிக்கவேண்டிய நெறிகள், தற்கால முரண்பாடுகள் போன்றன குறித்து ஆங்காங்கே எடுத்துரைக்கின்றார். இக்கருத்துகள் தேர்ந்த பெண்ணியவாதியின் கருத்துக்களாக இருக்கின்றன.

பெண்களுக்கு உரிய குணங்களுள் ஒன்று பேதைமை ஆகும். இப்பேதைமை என்பதை மேலோட்டமாகப் பொருள்கொள்வதானால் "அறிவின்மை" என்று பொருள் கொண்டுவிடமுடியும். மேலும் "பேதை" என்ற சொல் பொதுவாக அறிவற்றவர்களைக் குறிப்பதாக இருப்பினும், பெரும்பாலும் பெண்களுக்கே உரிய சொல்லாக இது நடைமுறையில் விளங்குகிறது. பெண்கள் அறிவில்லாதவர்கள் என்பதால் அவர்களைக் குறிக்கும் சிறப்புப் பெயராகவே "பேதை" என்ற பொதுப் பெயர் மாறிவிட்டது. இவ்வம்மையார் இதற்குத் தரும் விளக்கம் புதுமையாய்ப் பொலிகிறது.

"பேதைமை என்பது "கொளுத்தக் கொண்டு, கொண்டது விடாமை" என்றார் ஆசிரியர் நக்கீரனார். இதன் பொருள் பேதைமையென்று சொல்லப்படுவது அறிவுடையோரால் அறிவுறுத்தப்பட்டவைகளை ஏற்றுக்கொண்டு அவைகளை எளிதிலே வெளியிடாது தக்ககாலம் வாய்த்த பொழுது பிறர்க்கு அறிவித்து வெளிவிடுதலாம். அறிவுடைய பெண்மக்கள் எதனையும் ஆராய்ந்தறிந்து நேரமறிந்து சொல்லுவர். ஊழுழிக்காலந் தவமுயலும் தவமுடையாரும் பெறற்கரியதாம் இறைவனது பேரருட்டிறத்தைத் தாம் பெற்றதனை அம்மையார் தம் கணவருக்கு உடனே சொல்லாது மயங்கினார். (ப. 18)"

என்ற இப்பகுதி காரைக்காலம்மையார் முதலிலேயே ஆண்டவன் அருளால் பழம் கிடைத்தமையை, அதாவது தனக்கு உள்ள அருள் திறத்தைக் கணவனிடம் தெரிவிக்காமல் விட்டதற்கான காரணத்தைக் காட்டுவதாகும். பேதை, பேதைமை என்ற சொல்லின் இழிபொருளை(திரிக்கப் பெற்ற பொருளை)க் களைய இப்பாடு பட வேண்டி இருக்கிறது பெண்களும் ஆய்ந்தறியும் குணம் உடையவர்கள் என்பதைச் காட்ட இத்துணைத் துயரப்படவேண்டி இருக்கிறது.

காரைக்காலம்மையார் பேயுருவம் பெற்றரர். இது எதனால் பெறப்பெற்றது என்பதற்கு இவ்வாசிரியர் கூறும் காரணப் புதுமையும் வளமையும், தற்காலச் சூழலும் சார்ந்தது.

" அம்மையார் தாம் எழில் மிக்க உடம்போடிருந்தால் வெளியே நினைத்த இடங்கட்கெல்லாம் போய்ச் சிவ பெருமானை வணங்குவதற்கு இடையூறாகுமென்றும், உலகத்தார் தொடர்பை அறவே நீக்கவேண்டுமென்றும் பேய்வடிவ பெற்றனர்." (ப. 23)

இப்பகுதியில் பெண்களின் உடல் அழகு அவர்களுக்குத் தரும் இடைஞ்சலை வெளிப்படுத்துவதாக உள்ளது. பெண்களை ஆண்கள் அழகின் பொருட்டாகவே அணுகும் முறைமையைச் சாடுகிறது. பெண்கள் நினைத்த இடத்திற்குச் செல்ல இயலா நிலையை எடுத்துக்காட்டுவது.

திலகவதியார்பற்றிய ஆய்வுப் பகுதியிலும் அவரின் வரலாற்றில் உள்ள பெண் மையப் பகுதிகளை இவர் பெண்ணியத் திறனாய்வு அடிப்படையில் திறனாய்வு செய்கின்றார். திலகவதியார் தனக்கு முன்னரே நிச்சயிக்கப்பட்ட ஆண்மகன் (கலிப்பகை) இறந்தபின் தனக்கு மணவாழ்வு வேண்டாம் என்று விலக்கி தன் தம்பி வாழ்வு உளதாகவேண்டும் என்ற எண்ணத்தோடு வாழ்ந்தார்.

இவரின் இம்முடிவு குறித்து இக்காலச்சிந்தனையோடு இவர் சில கருத்துக்களைத் தருகின்றார். " அறிவுள்ள தாய் தந்தையரை வாய்க்கப் பெற்ற பெண்மக்கள் தம் பெற்றோர் தஞ்சொற் கிணங்கி அவர் குறித்த ஆடவரை மணஞ் செய்து கொள்வது குற்றமாகாது. அங்ஙனமாயினும் தம் மக்களுக்கு மாறான கணவன்மாரை அவர்களொடு பிணைத்துவிட்டு அதனால் அவர் துன்புறுதலைப் பெற்றோர் காணப் பொறுப்பரோ என வினவின் எத்தனையோ தாய் தந்தையர் பொருள் மிகுதியாயுள்ள கிழவர்க்கும் முன்னரே மனைவியுள்ள ஆடவர்க்கும், செல்வமுடைய தீயவர்க்குந் தம் மக்களை மணஞ் செய்து கொடுத்துப் பின்னர் அதனை ஊழ்வினைப் பயன் என்கின்றனர். பிறகு தம் மக்கள் செல்வம் இழந்தோ அல்லது தம் கணவன்மார் கொடுஞ் செயலுக்கு ஆளாகியோ வருந்தும் போது கூட ஊழ்வினை யெனக்கூறுவாரே ஒழியத் தாம் செய்தது பிழை என்று உணரார்: " (ப. 49)

இப்பகுதியில் பெண்களை மணம் செய்விக்கின்றபோது ஏற்படும் முறைமாற்றங்களை, அவதிகளை இவ்வம்மையார் தெளிவாக எடுத்துரைக்கின்றார். திலகவதியார் தாய், தந்தை தனக்குக் காட்டிய ஆண்மகனே தன் கணவன் என்று கொள்ளுவதற்கு அவரின் தாய் தந்தையர் நல்ல தேர்வைச் செய்திருந்தனர். ஆனால் தற்காலத்தில் அத்தேர்வு முறையற்றதாக இருக்கிறது என்ற செய்தி இங்குப் பதியவைக்கப் பெற்றுள்ளது.

இதுபோலவே மங்கையர்க்கரசியார் பற்றிய கட்டுரையிலும் இவரின் பெண்மை தெறிக்கும் கருத்துக்களைக் காணமுடிகின்றது.

சேக்கிழார் காட்டும் மங்கையர்க்கரசியார் பற்றிய பாடல்கள் குறைந்த அளவினவே. இக்குறைவை எடுத்துக்காட்டாது இக்கட்டுரையை மிக விரிவாக இவ்வாசிரியர் எழுதியுள்ளார். இவ்வாராய்ச்சிப்பகுதியில் மங்கையர்க்கரசியாரின் வாழ்க்கை சிறப்பிக்கப்படுகிறது. அதனுடன் முன்னர் சுட்டியதுபோலவே பல தற்காலக் கருத்துக்களும் எடுத்தாளப் பெறுகின்றன.

'தையல்சொல் கேளேல்" என்ற ஔவையின் வாக்கு இங்கு ஆய்வுப் பொருளாகின்றது."தையல் என்னும் சொல்லுக்குப் பெண் என்று பொதுப்படப் பொருள் கொண்டாலும் பெண்ணிலும் அறிவுடையாரும், அறிவில்லாதவரும், தீயோரும் என மூவகையினர் இருத்தலால் ஔவையார் கூறிய தையல் சொல் கேளேல் என்னும் இச்சொற்றொடரிலுள்ள தையல் என்னும் சொல்லுக்குத் தீய தன்மையுடைய பெண் என்றே பொருள் கொள்ளல் வேண்டும். ஒழுக்கமில்லாக் கொடிய பெண் மக்களை நம்பி அவர் சொற் கேட்டு எத்தனையோ ஆண் மக்கள் தம் அருமை மனைவி மக்களை ஊணுக்கும் உடைக்கும் காற்றாய்ப் பறக்கவிட்டுத் தம் பெரும் பிறவியைப் பாழாக்குவது கண்டே அறிவிற் பெரிய ஔவையார் அவர்களை நோக்கிக் கொடிய பெண்களது சொற்கேட்டு வீணாகாதே என்று கூறினார். " (ப.103)

பெண் கூறிய பழமொழியின் உண்மையை உணர்த்த இத்தனை பாடு படவேண்டி உள்ளது.

இவ்வாறு நீலாம்பிகை அம்மையார் தேர்ந்த பெண்ணியச் சிந்தனை உள்ளவராக இருந்து கட்டுரைகளைப் படைத்துள்ளார். பெண்கல்லூரியில் பணிபுரிதல் என்ற நிலையில் பெண்களை, பெண் உலகை எப்போதும் கண்டுகொண்டிருக்கிற இவரின் சிந்தனையில் பெண்ணியம் மிளிர்வது என்பது கொள்ளத்தக்கது. குறிப்பாக பெண்களுக்கு எதிரான சொல்லாடல்களைத் தகர்ப்பது என்ற நோக்கில் இவரின் எழுத்துகள் அமைந்துள்ளன என்பது இவருக்கு மேலும் சிறப்பு சேர்க்கின்ற செய்தியாகும்.

9

பெண்ணின் இடம்

பெண்களுக்கான இடம் எது? என்ற இந்தக் கேள்வியை அரசியல், ஆட்சியியல், சமூகவியல் இலக்கியவியல் என எல்லா மட்டங்களிலும் எழுப்பிக் கொள்ளலாம். இதற்கான விடை பெண்களுக்கான இடம் எங்கும் இல்லை என்பதுதான். அரசியலில் பெண்களுக்கு முப்பத்து மூன்று விழுக்காட்டிற்கே ஒப்புதல் கிடைக்கவில்லை. ஆட்சியியலில் பெண்களுக்குக் குறிப்பிட்ட அளவு ஒதுக்கீட்டிற்கு மேல் இல்லை. அந்த ஒதுக்கீட்டிற்குள்ளும் ஆண்சார்பு இல்லாமல் இயங்க இயலாது. சமூகத்தில் பெண்களுக்கு இரண்டாம் இடம். அலுவலகம், வீடு போன்ற சமூக நிறுவனங்களில் பெண்களுக்கு ஏனோ தானோ என்ற அளவில் மட்டுமே இடம் உண்டு. அறிவில் பணித்திறனில் எள்ளளவும் குறையாத பெண்ணினததிற்கு ஏன் இந்த இடமில்லா நிலை.

இந்தக் கேள்வியின் தேவை தற்போது பெண்களுக்குள்ளேயே எழுப்பப்பட்டு வருகிறது. பெண்களுக்கான இடம், வெளி, தளம், இருப்பு எங்கும் இல்லை என்பதைப் பெண்கள் உணர்ந்தும் உணர்த்தியும் வருகிறார்கள். இவர்களது பேச்சில் எழுத்தில் இந்த இடம் பற்றிய கேள்விகள் தொடங்கப்பட்டுவிட்டன. இந்தத் தொடக்கம் பெண்களுக்கரன முழு சுதந்திரமான இடத்தைப் பெற்றுத்தரும் போராட்டமாக வளர்ந்து வேர்விடும். அந்த முழு சுதந்திரமான இடத்தைப் பெண்கள் பெற்று மேலும் செல்வார்கள் என்பதற்கான திருப்புமுனை இந்த இருபத்தோராம் நூற்றாண்டு என்பதில் ஐயமில்லை.

பறத்தல் அதன் சுதநதிரம் ஏன்ற தலைப்பில் (கிருஷாங்கினி (தொ. ஆ) ,காவ்யா, சென்னை, 2001) வெளிவந்துள்ள ஐம்பத்து இரண்டு பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு இவ்வழிப்பட்ட ஒரு கவிதைத் தொர்குப்பாகும். இதில் இடம் பெற்றுள்ள பல கவிதைகளில் பெண்கள் தங்களுக்கான இடம் எங்கும் இல்லை என்பதைக் கவிதையின் பாடுபொருளாகவும், உருவகமாகவும், படிமமாகவும், கோஷமாகவும் வெளிப்படுததியுள்ளனர்.

எனது டைரி எனக்கானதாய் இல்லை
எனது டைரி முகவரிகளை விழுங்கியபடி நெளிகிறது
எனது டைரிக்குள் உபதேசங்கள் அநேகம்
யாருக்கும் தொந்தரவற்றதாய் சின்னதாய்
ஒரு புலம்பல்
மனித துயரங்களின் தடாகத்திற்குள்
எனது துயரம் வந்துவிழ நான் என்ன செய்வது?
எனக்கான முகவரியை எனது டைரியில் காணோம்

(எனது டைரி, சுகந்தி சுப்பிரமணியன், ப,104)

என்ற கவிதை தனிப்பட்ட அந்தரங்க விஷயங்களைக் கொண்டிருக்க வேண்டிய ஒரு பெண்ணின் நாட்குறிப்பில் (டைரி) அவளின் முகவரியே இல்லாமல்போன இடமற்ற நிலையைச் சுட்டிக்காட்டுகிறது.

யாராவது மீட்டுத் தாருங்கள்
மீட்டுத்தாருங்கள் என் வெள்ளைத் தாட்களை
. . .
மையிருந்தால் கோலின்றி கோலிருந்தால்
வெளிச்சமின்றி
இறைத்துப் பறக்க விட்ட
என் வெள்ளைத் தாட்களை

(யௌவனம், மாலதி, ப. 165)

என்ற கவிதையில் தாளின்றி, மையின்றி, கோலின்றி, வெளிச்சமின்றி ஒன்றிருந்தால் ஒன்றின்றித் தவிக்கும் பெண்களின் படைப்பனுபவத்தை உணரமுடிகின்றது. இந்தக் கவிதையின் பின்பகுதி

மையுண்டு ஒளியுண்டு
படைத்துவிட இதயமுண்டு
எனக்கு என் தாள்கள் வேண்டும்

என்று முடிகிறது. தற்போது எல்லாம் இருந்தபோதும் எழுதுவதற்கான தாள் (இடம்) பறந்து போய்விட்டதை இந்தக் கவிதை ஏமாற்றத்துடன் தெரிவிக்கிறது.

பாலம் என்ற படிமத்தை மற்றொரு பெண்கவிஞர் சுட்டுகிறார்.

என் நேற்றைய கனவில்
அந்தப் பாலம் தகர்ந்தது

வெகுநாள் வருந்தி
வியர்வை சிந்தி
கல்லுடைத்து
வெய்யிலில் வெந்து
பரிர்ந்து கொள்ள எவருமற்ற நிலையில்
தனியே ஏங்கி அழுது
சிறுகச் சிறுக நான் கட்டி முடித்திருந்த
அந்தப் பாலம்
. . .
மீண்டும் அதைக் கட்ட
எனக்குக் காலம் இல்லை
காலம் இல்லை என்றால் கனவேது?
கனவு இல்லை என்றால் ஆக்கமேது?

(நேற்றைய கனவு, திரிசடை, ப. 124)

என்ற இந்தக் கவிதை கூறும் பாலம் எது என்று தேடினால் அது அனுபவததிற்கும் படைப்புக்குமான பாலம் என்பது தெரியவரும். அந்தப் பாலம் நிஜத்தில்கூட இடியவில்லை. கனவில் தகர்ந்துபோனது. கனவில் அழியும் பாலம் எவ்வகையில் கட்டப்பட்டு இருக்கும் என்பதைக் கவனித்தால் கனவு நனவு எதிலும் பெண்களுக்கான இடம் இல்லை என்பது புலனாகும். கனவுப்பாலத்தைக் கட்டக்கூட காலம் கடந்து போய் விட்ட சூழலில் பெண்ணின் இடம் பறிபோய்விட்டதை இந்தக் கவிதை தெளிவாக உரைக்கிறது.

படைப்பு என்ற கனவில் இடம் இல்லை என்பது ஒருபுறம், வீடு என்ற சமூக இருப்பிலும்கூட பெண்களுக்கு இடமில்லை என்பது இன்னும் பெரிய வருத்தம் இதனைச் சில கவிதைகள் வருத்தத்தோடு பதிவு செய்துள்ளன.

உம் வீடுகள்தாம் இங்கே
சிறைக் கூடங்கள் அறிவீர்
உங்கள் பத்தினிகள் எல்லாம் அங்கே
சுதந்திர அடிமைகள்

(சுதந்திர அடிமைகள், வித்யா, ப. 194)

நடக்கும் திசையெலாம்
முட்ட நேர்கிற சுவர்கள்
சிலை போலென்னை

இறுக்குகிற சுவர்கள்
நானொரு சமாதியுள்
நிறுத்தி வைக்கப்பட்டு **(வீடு, பிருந்தா , ப. 154)**

இந்தக் கவிதைகளில் வீடு சிறைக் கூடமாகவும், சமாதியாகவும் குறிப்பிடப் பட்டுள்ளதைக் காணுகையில் பெண்கள் வீடு என்னும் சமூக அமைப்பில் பெற்றுள்ள இடம் தெரிய வருகிறது. பெண்கள் சுய உணர்வின்றி விடுதலையின்றி சவமாய்க் கிடப்பதற்கான இடம் வீடு என்பது பெண்கள் தரும் கருத்து.

இருந்தாலும் பெண்களுக்கு பழைய வீடு இனிமை தருவதாய் இருநதிருக்கின்றது. அது தாய்வீடு. அந்த வீட்டின் அழகு, விடுதலை, வாசம் என்றைக்கும் பெண்களின் நினைவில் வாழ்கிறது.

முற்றிலுமாக
தன் அடையாளமிழந்து
நொறுங்கிக் கிடக்கிறது
முன்பு நானிருந்த
என் பூர்வீக வீடு
இன்று
நானங்கு இல்லையெனினும்
அது என்னோடு தானிருந்தது
. . .
முதல் தீட்டில் பயந்திருந்த
என்னோடிருந்த சுவரும் கூட
சரிந்து கிடக்கிறது
ஏனைய தன் ரகசியங்களோடு

(என் பூர்வீக வீடு, சல்மா, ப. 91)

சல்மாவின் கவிதையில் பூர்வீக வீட்டில் இன்னும் ரகசியங்கள் மிச்சம் இருப்பதை உணரமுடிகிறது. அந்த வீட்டின் அழிவில் இருக்கும் இனிமை கலந்த சோகம் தற்போது வாழும் வீட்டின் இருப்பில் இல்லை என்பதும் தெரிய வரும் கூடுதல் செய்தி.

நகரத்தில் கைவிடப்பட்ட எனது வீட்டுக்குப்
பல ஆண்டுகளுக்குப் பிறகு திரும்புகிறேன்
வழியெல்லாம் மறந்து போக
காலத்தின் நிறங்களை இழந்த
நத்தை ஒடு ஒன்று

என் நினைவின் குறுக்கே
அடைத்துக் கொண்டு கிடக்கிறது

(பச்சை நகரம், மாலதி மைத்ரி, ப.162)

என்ற இந்தக் கவிதையில் நத்தை ஓடு பெண்ணின் பழைய வீட்டின் குறியீடாக உள்ளது. நத்தையின் ஓடு நத்தைக்கான தனித்த விடுதலையான வீடு. அது குறித்து அந்தக் குறிப்பிட்ட நத்தை மட்டுமே முடிவெடுக்க முடியும். இந்த நத்தை ஓட்டைப்போலத் தான் பெற்றிருந்த பழைய வீட்டின் ஞாபகத்தை இந்தக் கவிஞர் இந்தக் கவிதையில் பதிய வைத்துள்ளார்.

கருவறை வாசனை என்பதாகத் தாயின் மனத்தை கனிமொழி கருணாநிதி கவிதையில் வரைகிறார்.

அவளின் கருவறை மணத்தை
அள்ளி அள்ளி என்
வீடெங்கும் தெளித்து
சுருண்டு படுத்துத் தூங்கிப்போகவேண்டும்

(கருவறை வாசனை, கனிமொழி ப. 75)

இந்தக் கவிதையில் கருவறை மணம் உள்ள வீடு பழைய வீடு, அதனைத் தெளிக்க வேண்டிய வீடு வேறொரு வீடு என்பதை நினைவில் கொள்ள வேண்டும்..

இவ்வகையில் பழைய தாய் வீடு தனக்கான இடம் என்பதாகப் பெண்கள் உணர்ந்துள்ளார்கள். அந்த வீட்டைப் பெண்கள் இழந்து விட்டார்கள். பெண்களுக்கான இடம் அப்போதே தொலையத் தொடங்கிவிட்டது என்பது உறுதியாகிறது. அதை மீட்டெடுக்கும் முயற்சிகள் தொடருகின்றன.

தமிழ்ச் சூழலில் அல்லது இந்தியச் சூழலில் உள்ள பிறந்த வீடு, புகுந்த வீடு என்ற பெண்களுக்கான சமூக இரட்டை இருப்புநிலை இந்த ஏக்கததின் முதற்காரணம் என்பது தெளிவு. தாய் என்பவளைத் தன் இனமாக நோக்கும் மகளின் பிணைப்பு, கட்டாயமாகப் பிரிக்கப்படும்போது மகளின் மனதுள் ஏற்படும் இழப்பு பெரிய பாதிப்பை அவளின் படைப்பு மனத்தில் ஏற்படுத்துகிறது. அந்த ஏக்கம் அந்த ஏமாற்றம் பெண்களின் படைப்பு மனத்தில் கனன்றுகொண்டுள்ளது என்பதற்கு மேற்சொன்ன கவிதைகள் சான்றாகின்றன. இந்தப் படைப்பு மன இடமின்மை அவளுக்கான இடமின்மையாக எல்லாத் துறையிலும் நீடிக்கிறது.

10

சொற்களின் இடைவெளி தமிழ்ப் பெண்கவிதையின் அடையாளம்

பெண்ணெழுத்துக்களுக்குத் தனித்த அடையாளம் உண்டு. பெண் பெண்ணாகவே படித்து, சிந்தித்து, எழுதுபவளாக இருந்தால் அந்தப் பெண்ணெழுத்தில் நூற்றுக்கு எழுபது சதவிகிதம் தனித்தன்மையை இற்றைக் காலத்தில் உணரமுடியும். அவ்வகையில் தனித்த முத்திரை உடையது மீனாட்சி கவிதைகள்.

கவிதை, அதன் உட்பொருள், வெளிக் கட்டமைப்பு, அதன் பாத்திரப் பேச்சு என எல்லாவற்றிலும் முழுக்க முழுவதுமாய் ஒரு பெண்ணாய் நிறைந்திருக்கிறார் மீனாட்சி. "நானே பாரதி, என் காலத்தின் கவிச் சக்ரவர்த்தினி" (ப.109) என்ற கவித்தொடரில் பாரதியைத் தரிசிப்பதை விட "பா + ரதி = பாரதி" என்பதாகவே கவிச்சக்ரவர்த்தினி மீனாட்சியை அடையாளம் காணவேண்டும். கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டத்திற்குத் தக்கவர் யார் என்ற காலகாலப் போட்டியில் கவிச்சக்ரவர்த்தினியைக் காணவேண்டிய காட்ட வேண்டிய போட்டியைத் துவக்கி வைக்கிறார் மீனாட்சி. கவிச்சக்ரவர்த்தினி என்ற சொல்லாட்சிக்குள் ஒளிந்திருக்கும் ஏக்கம்/ உயர்ச்சி ஆண்களின் நோக்கத்தில் ஆணவமாக உயர்வு நவிற்சியாகத் தோன்றலாம். பல எழுதிய ஒளவை, தன்னை எழுதிய ஆண்டாள், சிவனை எழுதிய காரைக்காலம்மை இவர்களுக்குக் கிட்டாத கவிச்சக்ரவர்ததினி பெருமை இனிமேல் யாருக்கு? என்ற போக்கில் பின்தள்ளப்படும் பெண்படைப்புகள்-தன்னைத் தன் குலத்துத்தோன்றிய படைப்பாளர்களை வைத்தே காலை வாரிவிடும் மேம்போக்கு இவற்றுக்கெல்லாம் சவால் விடுகிறது இந்த ஒற்றைத் தொடர்.

"ஒரு விதை முளைக்கு முன்னே
கவிதைபோல்
கருப்பையில் தூங்குகிறது" (ப,118)

"நானொன்றும் கூமுட்டையில்லை
ஜீவரசத்தைக் குடித்து
ரசனையுள்ள கருவைத் தாங்கியிருக்கிறேன் "

(பட்டுப்பூச்சி ராசி, ப, 26)

"மண்ணின் அடிவயிற்றில்
அண்டத்தின் துளியாக ஆலவிதை
தாய்க்குருதி உணவாக" **மறுபயணம் 181)**

என எல்லாக் கவிதைகளிலும் தாய்மை, கருப்பை, கரு இவற்றின் சாயலைக் கருவாக வளர்க்கிறார் மீனாட்சி. இவற்றுக்கு என்ன காரணம். " பெண்மொழி முழுக்கவும் தாயன்பு, சக்தி நிலை தொடர்புடையது. வீரியமாக, நளினமாக, நாணம் கலந்து அத்தனை வலிகளுடன் அவள் சொல்வதைப் போல ஓர் ஆணால் சொல்ல முடியாது" (நான் ஏன் எழுதுகிறேன் பேட்டி ப,208) என்ற அவரின் கருத்துதான் காரணம். பிறப்பித்தல் என்ற ஒன்று, கருப்பை என்ற ஒன்று பெண்ணின் தனித்துவம். அதன் அழகு, அமைப்பு, அனுபவம் இதை வெளிப்படுத்த வேண்டிய படைப்பு வெளி பெண்ணினது. அந்தப் படைப்பு வெளிக்கு வேலி போட்டுத் தனக்கான சொத்தாய் பெண் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும் என்ற படைப்பு நோக்கம் மீனாட்சியினுடையது. அந்த நோக்கம் அவரின் கவிதைகளில் வெளிப்பட்டு வெற்றி பெற்றுள்ளது.

சொற்களின் இடைவெளி

கவிதைகளுக்குள் வாசகன் புகுந்து தேடினால் உண்மைக் கருப்பொருள் புலப்படுகிறது. விரிவு கொள்கிறது. ஆனால் கவிதையின் ஒவ்வொரு சொல்லுக்குள்ளும் இடைவெளி வைத்து அதனுள் வாசகனைப் புகச் செய்தால் ஒரு கவிதையைப் புரிந்து கொள்ளவே ஒரு நாளாகும். பல நாள் கருவைச் சேமித்து எழுதும் படைப்பாளியின் படைப்பைச் சற்று நேரத்தில் வாசித்துவிட்டுத் தூக்கிப் போட்டுவிடலாமா? அதனை அணுஅணுவாய் ரசித்து ருசித்து உள் நுழைந்து உண்மைப் பொருளை அறிந்துகொள்ள வாசகனைத் தூண்டும் ஒரு கருவியாக மீனாட்சி தன் கவிதைகளைத் தரப்படுத்தியுள்ளார். இது அவரின் பலம்.

அதே நேரததில் இந்த சொல் இடைவெளிகள் பொருள் தொடர்பற்றுச் சொல் தொடர்பற்றுத் தோன்றுகின்றன. இந்த

மாயத்தோற்றததின் பின்னணி என்ன என்று சிந்தனை தொடர்ந்தால் அதற்கு ஒரு காரணம் புலப்படும். சாதாரணமாகப் பலர் முன்னிலையில் பெண்கள் சொல்லவரும் கருத்தில் அவர்கள் நடையில் அவ்வப்போது தடை ஏற்படும். அந்தத் தடை தொடர்பற்ற பொருள்களை, சொற்களைத் தோற்றுவிக்கும். இந்தப் பெண்ணியல்பு மீனாட்சி கவிதைகளில் காணக்கிடக்கிறது. இந்தத் தடைப்பேச்சுக்கு இங்கு இருக்கும் சமூக அழுத்தம் காரணம். அதன் காரணமாகப் பெண் தன் கருத்துகளைத் தொடர்பற்றுத் தெரிவிக்க வேண்டியவளாகிறாள்.

"அவள்தான் வெளியேற
அவளே தடையாகி
அவலத் துடிப்பு

மென்குரலில் வெளியழைப்பு
அவளுக்கோ அவலத்துடிப்பு
கழுத்து முடிச்சு பற்றுக்கோடா" (ப. 18)

எழினி என்ற தலைப்பில் இடம் பெறுகிறது இக்கவிதை. சொற்களை மேலோட்டமாகப் படித்துப் பார்த்தால் ஒன்றுக்கொன்று இணையாது. பொருள் தொடராது. திரைச்சீலை காற்றில் படபடக்கிறது. இதனைப் பெண்ணின் வீட்டுச்சிறையோடு கவிஞர் ஒப்பிடுகிறார். அவள் + தான் + வெளியேற என்ற தொடரமைப்பில் "தான் " என்ற சொல்லை இடைவெளி கொடுத்துப் படித்துப் பாருங்கள். இடைவெளி தராமல் உச்சரித்துப் பாருங்கள். இரண்டுக்கும் பெருத்த பொருள் வேற்றுமை உண்டாகும். சொல்லுக்குச் சொல் இடைவெளி என்ற புதிய போக்கு மீனாட்சியிலிருந்து தொடங்குகிறது. அடுத்த வரிகளைச் சற்றுச் சிந்திப்போம். அவலத்துடிப்பு யாருக்கு திரைச்சீலைக்கா, அல்லது ....? வெளியழைப்பு-யார் அழைப்பது-யார் தடுப்பது-ஆணா-பெண்ணா....... கழுத்து முடிச்சு இந்தச் சொல்லில் இருந்து கவிதை புரிபட ஆரம்பமாகிறது. திரைச்சீலையின் பெண்ணின் குறியீடு. வெளியில் வர விடாமல் சன்னல் கம்பிகள் தடுக்கின்றன. வெளிவரச்சொல்லி காற்று அழைக்கிறது. திரைச்சீரை பறக்காமல் இருக்க அதன் அகலத்தைக் குறைத்து முடிச்சிடப் பட்டுள்ளது. அந்த திரைச்சீரை வெளியில் வரமுடியாது. அதுபோலப் பெண்ணும். அவள் வர எண்ணினாலும் அவளால் வர இயலாது. கழுத்து முடிச்சு கடைசி வரை அவளுக்குப் பற்றுக்கோடாகுமா. இவ்வாறு கவிதையின் சொல் இடைவெளிக்குள் புகுந்து உலாவ இடம் தருகிறது மீனாட்சி கவிதைகள்.

திரைச்சீலையை ஏன் அவள் என்று உருவகப் படுத்தவேண்டும். எழுதுவது பெண். அதனால் அவள் எழுதும் அனைத்திலும் அவளே நிறைந்திருப்பாள்,

"என்ன பிண்டமோ?
என்னவாம் சுகக்குறைவு?
தயங்காமல் போ
விண்ணில் எகிறாமல்
நீரில் மிதக்காமல்
மண்ணின் இருட்சுரங்க ஆழத்தில்
புதையுண்டால் மௌனம் பேசலாம்" (மண்ணே சுகம் 12)

பிண்டம், சுகக் குறைவு (சுகப்பிரசவம் இதற்கு மட்டுமே சுக என்ற சொல்லைத் தற்போது தமிழ் மக்கள் பயன்படுத்துகின்றனர்) இவையெல்லாம் பெண்ணடிப்படை வாய்ந்த சொல்லாடல்கள்.

இந்தக் கவிதையின் முதல் மூன்று வரிகளுக்குள் நிறைய இடைவெளி உண்டு. இதனுள் புகுந்து பல காத தூரம் பயணிக்க முடியும். மண்ணில் புதைந்து போய் அழியும் மரண வாழ்வில் மௌனம் பேச இந்தக் கவிதை அழைக்கிறது. யாரோடு புதைந்தவள் மௌனம் பேசப்போகிறாள். யார் அவளைத் தன் உள் இருத்திக் கொள்வது என்ற இந்தக் கேள்விகளுக்கு இந்தக் கவிதையின் பின்பகுதி விளக்கம் அளிக்கிறது.

"உன்னை நீயே தின்னலாம்
சுயம்புவாகலாம்
கன்னிமையைத் தாய்க்கே கொடுத்திடலாம்" (மேலது)

கன்னிமை என்ற இந்தச் சொல்லாட்சி தரும் விளக்கம் என்ன? ஓர் பிண்டம் அழிவதன் மூலம் அதாவது அது ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ பிறக்காமல் கருவிலேயே பிண்டமாக இயற்கையாக (செயற்கையாக அழிக்கப்படுவதன் மூலம்) அழிவதன் மூலம் தாய் தாய்மை என்னும் சுமையை அடையாமல் அவள் கன்னித் தன்மை பாதுகாக்கப் பட்டுவிடலாம். கன்னிமை அதற்கு எதிரானதா தாய்மை? தாய்மை சுகமா? அல்லது பெண்ணின் இழப்பா? அல்லது ஆணின் ஆக்கிரமிப்பா? எது சரி? கன்னிமைதான் பெண்ணின் உண்மை அடையாளமா? இத்தனை கேள்விகளுக்கு இந்தக் கவிவரிகள் இடம் தருகின்றன. சொல்களின் இடைவெளி தமிழ்ப் பெண் கவிதையின் உண்மை அடையாளம். சமூகக் காரணங்களால் பாதிக்கப்படும் தமிழ்ப்

பெண் தன்கவிதைகளில் இடைவெளிகளை அதிகம் விட்டுச் செல்கிறாள். அவை நிறையப் பேசும் வலிமையின.

அக்னி சாட்சியாய் முதன் முறை ஒரு பெண்ணை மணந்தவன் அதனை மறைத்து மற்றொரு திருமணத்தை ஏற்கிறான். அவனது திருமணத்திற்கும் அக்னி சாட்சியாகிறது. சாட்சியாகும் அக்னியைக் கேலி செய்கிறது பின்வரும் கவிதை. அதன் சொல் இடைவெளிகள் உணரத்தக்கன.

"இன்றைய அவளின் அவனோ
வேற்றோர் ஊரில்
மாற்றான் பெண்ணை

அக்னிசாட்சியாய் மறுமுறை தொட்டு
என்ன அக்னி?
காலால் மிதிபடும்
மொட்டினைத் தூவும்
சிகரெட் துண்டு
எச்சில் பட்டு
எறிபடும் குப்பை" **(ஒரு தலை அக்கினி ப,121)**

கவிதையின் தலைப்பே இடைவெளி மிக்கது. ஒரு தலைப் பட்சமானதா அக்னி. அல்லது அது பிரிவுகள் அற்று ஒரே ஜுவாலை உடையதா... காலால் மிதிபடும், மொட்டினைத் தூவும், சிகரெட் துண்டு, எச்சில்பட்டு எறிபடும் குப்பை இந்த வரிகள் பொருள் தொடர்பை உடைய வரிகள் அதாவது சிகரெட் நெருப்பை வர்ணிக்கும் வரிகள் என்றாலும் அவை ஒன்றுக் கொன்று இடைவெளி தரப்பட்டே அமைக்கப்பட்டுள்ளன.

எனவே பெண்கவிதைகளுக்கு இடைவெளிகளே வலிமை என்பது தெளிவாகின்றது.

பெண்கள் பாத்திரங்களாக

மீனாட்சியின் கவிதைகளில் பெண்கள் பாத்திரங்களாக அடர்த்தியாகக் கையாளப் பெற்றுள்ளனர். இது பெண்ணெழுத்தின் தன்மை.

பேருநதில் பயணிக்கும் அன்றாடம் கூலித்தொழில் செய்து பிழைக்கும் பெண்களின் அவலம்

"பார்வைகளையே கைகளாக்கி
கைகளே கொடுக்குகளாய்ச்

சகபிரயாணிகள் சுமந்திருப்பதை
காலங்கடந்தே
நாங்கள் பார்த்தோம்"
(நாங்கள் நகரத்துக்குப்போகும் சின்னப் பெண்கள், ப.102)

என்ற கவிதையில் வெளிப்படுகிறது. இதில் பேருந்து நெரிசலில் பெண்களைத் தொட்டுத் தடவும் ஆண்களைக் காலங்கடந்தே பெண்கள் உணர்ந்துகொண்ட அவலம் உணர்த்தப்படுகிறது. இந்த அனுபவம் ஏற்பட்ட பின்னரே பெண்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ளவேண்டி இருக்கிறது. இது குறித்து ஒரு பெண்ணுக்கு எந்தவித முன்னறிவிப்பை எவரும் தருவதில்லை. பட்ட பின்னர் பாதுகாப்பு என்ற இந்தச் சூழலை ஒவ்வொரு பெண்ணும் கடந்தே வருகிறாள் என்ற சோகம் இந்தக் கவிதைக்குள் கிடக்கிறது.

இரு சகோதரிகள். அவர்களின் வாழ்வைப் படம் பிடிக்கிறது ஒருகவிதை.

"அம்மையின்
சுகப்பிரசவத்தில்
வெளிவந்த நானோ பஞ்சு
ஆயுதம் மோதப்
பிறந்தவளோ இரும்பு" **(உடன் பிறந்தவள் ப, 16)**

முதல்பிரசவம் சுகப்பிரசவம். இரண்டாவது சிசேரியன். இந்த நிகழ்வில் ஏற்பட்ட வலி, வேதனை, தாயின் உணர்வு , இரண்டும் பெண்ணாய்ப் போனதில் சமூகத்தின் கண்ணோட்டம் இவையெல்லாம் இந்தக் கவிதையின் பின்புலங்கள். பிறந்தவர்கள் கவிதையில் வளர்கிறார்கள். ஒருத்தி மணம் முடித்து நோய்வாய்ப் படுகிறாள். மற்றொருத்தி கைம்பெண்ணாகித் தவிக்கிறாள். இதனைக் கவிதையின் நிறைவுக் காட்சி பின்வருமாறு கூறுகிறது,

எனக்கு மங்கலக் குறுவாழ்வு
அவளுக்கோ
அமங்கலப் பேராயுள்
தியாக முனைக் குத்தல்
தந்த பரிசில் **(மேலது)**

இந்தக் கவிதையிலும் இடைவெளிகள் அதிகம் உண்டு. அதைவிட இதில் பாத்திரப்படைப்பு அதி முக்கியமானது. தாய், மூத்தவள், இளையவள் இவர்களைப் படைக்கும் பெண்

படைப்பாளி என்ற வட்டம் ஒன்றுக்குள் ஒன்றாகத் தனக்குள் தானாகப் பிரிக்கமுடியாததாக விளங்கி மேன்மை பெறுகிறது. படிப்பவரையும் பெண் உலகமாக்கிக் கொள்கிறது.

மற்றொரு கவிதையில் ஆண் பாததிரப்படைப்பு வருகிறது. அதிலும் மறைமுகமாகப் பெண் இடம்பெறுகிறாள் என்றாலும் ஆணின் படைப்பு விமர்சிக்கப்படுகிறது. அது பின்வருமாறு.

அவன் காதல்
நாயில் ஆரம்பித்து
நாயில் முடிந்தது.
கொஞ்சல்
கடி
வெறி
மாமிசம்
தெருப் பொறுக்கல்
ஊர் சுற்றல்
கழுத்துப்பட்டை
காசுவில்லை
பதிவு எண்
ஊசிகள் குட்டிகள்
குரைப்பு
அப்புறமென்ன
காதலாவது
கத்தரிக்காயாவது? **(சத்தான காதல் ப. 129)**

இந்தக் கவிதையில் காதல்திருமணததின் அவலம் அதன் கவர்ச்சி விமர்சிக்கப் படுகிறது. பதிவு எண், ஊசிகள், குட்டிகள் இந்த வரிகளில் பெண்ணின் பாத்திரப்படைப்பு மறைமுகமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மருத்துவமனையில் பிள்ளைகள் பெற்றெடுக்கும் எந்திரமாகப் பெண் கருதப்படுவதைத் தெளிவாக்கியிருக்கிறது இந்தக் கவிதை.

மொத்தத்தில் மீனாட்சியின் கவிதைகள் கவிச்சக்ரவர்த்தினிக் கவிதைகள்தான். இது கவிதைகளின் அளவால் கணக்கிடப் பட்டதல்ல. தரத்தால் அளந்தறியப்பட்டதல்ல. தமிழ்ப் பெண் கவிதைப் பரம்பரையினை இடையீடு படாமல் காத்துவருவதாலும், அளவாலும், தரத்தாலும் தான்.

11

அ.வெண்ணிலாவின் கவிதைகளில் பெண்களின் அதிகார மறுப்புப்பதிவுகள்.

பெண்களின் படைப்புக்களில், அவர்களின் வாழ்வில் ஏற்பட்ட பலவகை அனுபவங்கள் மறைமுகமாகவும், நேரடியாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன. குறிப்பாகப் பெண்களின் கவிதைகளில் சுட்டப்படும் நிகழ்வுகள், மற்ற படைப்புக்களில் வெளிப்படுத்தப்படும் நிகழ்வுகளில் இருந்து வேறுபட்டு முற்றிலும் சுயத்தன்மை உடையனவாக, உண்மைத்தன்மை உடையனவாக விளங்குகின்றன. தற்காலத்தில் இப்பண்புடைய பல பெண்கவிஞர்கள் தங்கள் படைப்புக்களை வெளியிட்டுவருவது வரவேற்கத்தக்கது.

அ. வெண்ணிலாவின் (முகவரி: 36,தோப்புத்தெரு, அம்மையப்பட்டு, வந்தவாசி, 604408) 'நீரில் அலையும் முகம் '(வெளியீடு: தமிழினி பதிப்பகம், 342. டி.டி.சாலை., சென்னை 14.) (1991) தற்காலத்தில் வந்துள்ள பெண்கவிதையாக்கங்களுள் குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். இக்கவிதைத்தொகுப்பு கன்னிப்பெண், மணப்பெண், குடும்பப் பெண், தாய்ப்பெண் ஆகியோரின் மனப்போராட்டங்களைச் சித்திரித்துச் செல்கின்றது. இத்தொகுப்பில் கவிதைகளுக்குத் தலைப்பில்லாமல் இருப்பது கவனிக்கத்தக்கது.

இக்கவிதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள கவிதைகளின் தன்மை குறித்துப் பின்வருமாறு இக்கவிஞை எழுதுகின்றார். "பெண் என்ற அச்சமும் சேர்ந்து கொள்கிறது எழுத்தில். வாழ்க்கை ஒவ்வொரு கணமும் அந்த உணர்வை உண்டாக்குகையில் எழுத்தில் வருவதில் .தவறொன்றுமில்லை என்றே நினைக்கிறேன்" என்ற கவிஞையின் கூற்று அவரது கவிதைகளில் பெண்ணியல்பு இடம்பெற்றிருப்பதை உறுதிசெய்கின்றது.

இக்கவிதைத் தொகுதியுள் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் பெண்படும் வதைகளை உணரமுடிகின்றது. கவிஞையின்

ஐந்தாண்டு கால வாழ்க்கையில் ஏற்படுத்திக்கொண்ட (அ) அடைந்துவிட்ட மாற்றங்களின் கலவையாக இத்தொகுப்பு அமைகின்றது. வயதுவந்த பெண்ணின் ஐந்தாண்டுகால வாழ்க்கை அவளைப் பலபடி நிலைகளுக்கு இழுத்துச் செல்கின்ற உண்மை, அதில் ஈடுபடும் பெண்ணின் உடல், மனம் ஆகியவற்றின் செயல்பாட்டுத்தன்மை இவற்றின் ஒரு விளக்கப்படமாக இக்கவிதைத் தொகுதி அமைந்துள்ளது.

லே ஆப் என்ற பெண்ணியவாதி, "பெண்களின் வரையறுக்கப் பட்ட எல்லைகள், அதிகாரமின்மை ஆகியன அவர்களின் படைப்புக்களில் அவர்களைப் பேசவைக்கின்றன" என்று பெண்களின் படைப்பாக்கத்தன்மையைக் காட்டுகின்றார். அவரின் கூற்றுப்படி வெண்ணிலாவின் கவிதைகளில் வரையறுக்கப்பட்ட மரபு எல்லையும், அதிகாரமின்மையும் அவரது பெண் தன்மை படைப்புணர்வைக்காட்டிலும் அதிகமாகவெளிப்பட்டுள்ளமையைப் படித்துப்பார்க்கையில் உணரமுடிகின்றது.

படிக்கும் பெண், வயதிற்குவந்து, ஆசிரியையாகி, திருமணமாகி, தாயாகி மாறுகையில், ஒவ்வொரு படிநிலையிலும், ஒவ்வொரு எல்லைக்கோட்டில் அடங்கிப்போய் விடுகின்ற மரபு சார்ந்த கட்டுப்பாடுகளுக்குக் கீழ்ப்பணியும், அதேநேரத்தில் அதிலிருந்து தன்னை, தன்போன்ற மற்றவர்களை விடுதலையாக்கத் தூண்டும் கவிஞையாக வெண்ணிலா இத்தொகுப்பு வழியாக அறியப்படுகின்றார்.

கன்னிப்பெண்ணுக்கான எல்லை
"பிறப்பின் வாசம்
உடலெங்கும் பரவி நிற்க
ரத்தம் தோய்ந்த ஆடைகளோடும்
நடுங்கும் கால்களோடும்
சாய்ந்து கொள்ளத் துழாவுகிறோம்
தொடாதே தள்ளி நில்
என்கிறாள் அம்மாவும்" (ப. 18)

என்ற இக்கவிதை கன்னிப் பெண்கள்படும் மாதவிலக்கு சிக்கலை கண்முன் நிறுத்துகிறது. அம்மாவின் அரவணைப்பினை வேண்டும் அந்தப் பொழுதில் அம்மாவும் 'தொடாதே! தீட்டு' எனச் சொல்லும் சோகம்/ அம்மா அப்பண்பைப் பெறாதவளா?/ பெற்றிருந்தவள் என்றாலும், அந்தச் சிக்கலை எண்ணி ஏன்

ஒதுக்(ங்)கவேண்டும்? / பெற்றவள் கூடத் தள்ளி நிற்கும் அளவிற்கான இவ்வரையறையை யார் ஏற்படுத்தியது? என்ற எண்ணங்களை மேற்கண்டவரிகள் எழுப்புகின்றன.

மேலும் இக்கவிதை பின்வருமாறு முடிகின்றது. "எறும்புக்கும், நாய்க்கும்/ எப்படியோ இந்த அவஸ்தை" என்ற முடிப்புவரிகள், உலக உயிர்களின், குறிப்பாக பெண் உயிர்களின் உடல் வருத்தத்தை வெளியிடுவதாகவும், அதே நேரத்தில் பெண் எறும்பையும், பெண் நாயையும் தள்ளி வைத்துவிடாத சூழலில் மனிதர்கள் மட்டும் தள்ளிவைக்கும் நாகரிகம் கொண்டது ஏனோ? என்ற கேள்வியை முன் வைப்பதாகவும் உள்ளன.

தலைவாரி வகிடு எடுப்பதை மற்றொரு கவிதை கேலிசெய்கிறது. "சட்டென்று பிரியுமாம் / புத்தி தெளிவானவர்களுக்கு / அனுபவம் கூறினாள் தோழி " (ப. 12) எனவரும் கவிதைவரிகளில் தலைவாரி பூச்சூட முனையும் செய்கையில் கூடப் பெண்களுக்கென வைக்கப்பட்டுள்ள அனுபவ வரையறை சொல்லப் பெற்றுள்ளது. ஆனால் முடிப்புவரிகளில்,

"சரிதானென்று தோன்றியது
பாதையாய்ப் பிரிந்து கிடக்கும்
குரங்கின் வகிடு பார்த்து"

எனக் குறித்திருப்பது குரங்கைக் கேலி செய்கிறாரா?/ அல்லது பெண்களைக் கேலி செய்கிறாரா என்பதற்கு சிந்தித்து முடிவு காணவேண்டியுள்ளது. தலை வகிடு எடுப்பதும் அது விலகாமல் அந்த நாளின் இறுதிவரை அழகாய் இருக்க முயலும் பெண் படும் எச்சரிக்கை விநோதங்களை இவ்வரிகள் விமர்சிக்கின்றன.

தலையில் பூ சூட்ட வேண்டாம் என மற்றொரு கவிதை மலருகின்றது.

"சுவரில் சாயாமல்
எதிலும் தலை அழுந்தாமல்
தூங்கப் போனாலும் மல்லாந்து படுக்காமல்
***எப்போதும் கவனம் அதிலேயே"* (ப. 44)**

என்ற கவனக் கண்காணிப்பால் பூக்களைத் தலையில் இக்கவிதையில் வரும் தலைவி சூடுவதேயில்லையாம். செடிகளில் மலர்ந்து கீழே விழுவதைக் கவனிப்பதே போதும் என்பது அத்தலைவியின் சமாதானமாகும்.

தலைவாரி, பூச்சூட்டிடும் கன்னிப்பெண்களின் கவனம் கூந்தலிலும், சூடும் பூவிலும், வகிடு எடுப்பதிலும் இருக்கும்போது இந்த நினைவுகளைத் தாண்டி எப்படி அதிகார இயல்பிற்கு, வெளியுலக ஆளுமைப்பண்பிற்கு பெண்கள் வர இயலும் என்ற கேள்விக்குப் பதிலே இல்லை.

மணப் பெண்ணுக்கான எல்லை

மணப் பெண்ணிற்கு மணநாளன்று அணியப்பெறும் முக்கிய அணிகலன்கள் அவளை இறுக்கிக் கிடந்தாலும், அவற்றை அணிவதில் பெருமையை அப்பெண் கொள்ளவேண்டியிருக்கிறது. அவையே பிற ஆண்களின் விகாரப் பார்வையினின்று காக்கும் கேடயங்களாக விளங்குகின்றன. இவற்றைப் பின்வரும் கவிதை

" உறுதியாகத்தான் இருந்தேன்
சடங்குகளை அணிவதில்லையென்று
அப்பா அம்மாக்கள்
அக்கம் பக்கம் என்பதோடு
சுற்றி மேயும் கண்களுக்கு
'அங்கீகாரம்' பெற்ற அடையாளம் காட்ட
'கொடி' போன்ற சங்கிலி அணிவிக்கப்பட்டது
....
காலுக்கு மோதிரம் போட்டாவது
பிடித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது
சடங்குகளை
பிணைக்கயிற்றை நொந்தென்ன
காலம் சுமந்த கனத்தோடு
அழுத்துகின்றன நுகத்தடிகள்" (ப. 15)

என்றவாறு வலியுறுத்துகின்றது. அணிகள் அலங்காரங்கள் என்பது மாறி மணமானதற்கு அடையாளங்களாகி அவையே ஆண்களின் பார்வைக்குக் காவலாகி நின்றிட, அணிகலன்களை விரும்பாத பெண்களுக்கும் அணிய வேண்டிய சூழலை உருவாக்கிவிட்ட முறைமை மேற்கவிதையால் தெரியவருகின்றது.

காதல் மணம் கொண்ட காதலர்களானாலும், அவர்களின் குடும்ப வாழ்க்கையும் இக்கால நெருக்கடியில் வெகுசாதாரணமான தம்பதிகளாக அவர்களை மாற்றிவிடுகின்றது.

"மடியில் புரண்டது
கட்டிக் கொண்டது
எல்லாம் தாண்டி
இன்று
எல்லாத் தொடுதலும்
'அதில்' போய்தான் நிற்கிறது
எனக்காகவும்
உனக்காகவும் அன்றி அதற்காக!" (ப. 41)

என்ற கவிதைவரிகள் ஆண், பெண் இணைவுக்கான மூலம் அன்பு அல்ல, வேறொன்றின் தேவை என்பதை இக்கவிதை சுட்டுகின்றது.

குடும்பப் பெண்ணுக்கான எல்லை

குடும்பம் என்ற கட்டமைப்பு, புகுந்த வீடு வந்த பெண்களின் சார்பால் நிலைகொள்ளுகின்றது. இருப்பினும் அவ்வமைப்பு அவர்களுக்கு முழு உரிமையை, விடுதலையை, அதிகாரத்தை அளிப்பதில்லை.

பார்த்துப் பார்த்து வாங்கினோம்
விதவிதமாய் சமைத்தோம்
பணிவாய் பரிமாறினோம்
கைகழுவிய தட்டைக் கழுவினோம்
வாய் துடைக்கக் கூட
முந்தானை கொடுத்தோம்
எல்லாம் செய்துவிட்டு
ஏனோ
பசித்திருக்கிறோம்
என்றோ ஒருநாள்
அருகருகே அமர்ந்து
அவசரமில்லாமல் சாப்பிட்டுவர
விருந்துக்கு வந்தால்
ஆண் பந்தி முந்தி என்று
அங்கேயும்
காத்திருக்கச் சொல்கிறீர்கள்." (ப.22)

என்ற கவிதை வீட்டிற்குள்ளும் , வெளியிலும் அதிகாரம் பெறமுடியா மரபு வேலிகளில் பெண்கள் சிக்கியிருப்பதை உணர்த்துகின்றது.

இத்தோடு காலையில் அயர்ந்து தூங்கும் குடும்பப்பெண்ணை எழுப்பிட, 'முத்தமிட்டு எழுப்பலாம், தலையை வருடி எழுப்பலாம், நெட்டி எடுத்து எழுப்பலாம்' என வகைவகையாய் எழுப்ப வழி இருந்தாலும் குடும்பப் பெண்ணை,

"இவ்வளவையும் விடுத்து
'ஏய்' என கால் கீண்டி
போகிறபோக்கில்
எழுப்பிப் போகிறாய்" (ப.48)

என அசட்டையாய் எழுப்பும் கணவன், அதனால் ஏற்பட்ட அலுப்புடன் வேலைகளைச் செய்யப் போகும் மனைவி இந்த எல்லைக் கோடுகள் பெண்களின் நீங்காத மரபுசார் எல்லைக் கோடுகளாகிவிடுகின்றன.

தாய்ப்பெண்ணுக்கான எல்லை

தாய்மை என்பது அருமையான அனுபவம். ஆனால் அவ்வனுபவத்திற்கான அருமை, பெருமை, உயர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாத உலகமாக இவ்வுலகம் விளங்குகிறது. அதிலும் வேலைக்குப் போகும் தாய்படும் சிரமம், குழந்தையைக் கவனிக்க முடியாமல் அலுவலகம் சென்று, அலுவலையும் சரியாகச் செய்யாமல் குழந்தையை எண்ணி ஏங்கும் பெண்ணின் உள்ளம் இருபக்கத் தாழ்வை ஏற்பதாக உள்ளது.

"தலைவாருகிறேன்
புடவை மாற்றுகிறேன்
வேகவேகமாக பைக்குள் பொருட்களை அடைக்கிறேன்
இவையெல்லாம்
குழந்தைக்குச் சொல்கின்றன
என்பிரிவை" (ப.49)

என்ற கவிதைவரிகள் பிள்ளை பெற்ற தாயின் அலுவலகப் பிரவாரம்பத்தை, அவசரத்தை அவலமாகச் சொல்லும்.

அலுவலகம் செல்வதால், குழந்தையை வேறுஒருவ்ரிடம் ஒப்படைத்துவிட்டுப்போகும் ஒரு தாயால், குழந்தைக்குத் தாய்ப்பால் சரிவரக் கொடுக்க முடியாத காரணத்தால் ஏற்படும் தவிப்பை,

"மணமிக்க
பூச்சூடிக் கொள்கிறேன்

கூடுதலாய்
முகப்பவுடரும்
புடவைகளுக்குக்கூட
வாசனை திரவியம்
பூசி வைத்துள்ளேன்.
வியர்வையை
கழுவிக்கழுவி
சுத்தமாய் வைத்திருப்பதாய்
நினைத்துக் கொள்கிறேன்
என்னை
அத்தனையும் மீறி
ஆடைகளுக்குள்ளிருந்து
தாயின் வாசம்
சொட்டு சொட்டாய்
கோப்புகளில் இறங்குகிறது.
அவசரமாய்
அலுவலக கழிப்பறையில் நுழைந்து
பீச்சி விடப்படும் பாலில் தெறிக்கிறது
பசியைத் தின்று அலறும்
குழந்தையின் அழுகுரல்'' **(ப.47) என்ற கவிதை சித்திரிக்கிறது.**

குழந்தையைப் பெற்றெடுக்கும், தாய்மைப்பண்பின் பெருமைகளை அருமைகளை உணரா ஆண் உலகத்தைப் பார்த்து, தாய்மையின் இன்னலை அறிந்துகொள்ளா ஆணைப்பார்த்து, "கருசுமந்து குழந்தைத்தவம் இருக்கும் பெண்களைச் சுமக்க/எந்த ஆணுக்கு உள்ளது கருப்பை "எனக் கேள்வி கேட்கிறது ஒரு கவிதை. இவ்வரிகளில் ஆண்களுக்குப் பிள்ளை பெற்றுத்தரும் உடல்கூறு இல்லை என்பதையும், அதனைப் பெற்றுள்ள பெண்களைத் தாங்கும் ஆதரவு/ மனக்கூறு கூட ஆண்களிடம் இல்லை என்பதையும் கவிஞை உணர்த்தி விடுகின்றார்.

அதே நேரத்தில் தாய்மை ஏற்படுத்திய உடல் விகாரங்களை இன்னொரு கவிதை

"உறவின் அடையாளத்தை
உறுப்புக்கள் தாங்கியுள்ளன.
மார்புக் காம்புகளும்
வயிற்றுச் சுருக்கங்களும்

சொல்லும்
என் பிள்ளை பிறப்பின்
அடையாளத்தை
பிறகெதற்கு
எதிர்பார்க்கிறீர்கள்
என் அடையாளத்தை
தாலிக் கயிற்றிலும்
கால் மெட்டியிலும்
வகிடு சிவப்பிலும். (ப. 55) என எடுத்துக்காட்டுகின்றது.

தாய் என்னும் நிலையில் தன் உடலை அங்கஹீனப் படுத்திக் கொண்டு, குழந்தையை வளர்க்கவும் முடியாமல் வளர்க்காமல் விட்டுவிடவும் முடியாமல், செய்யும் அலுவலகப் பணியைத் தொடரவும் முடியாமல், விட்டுவிடவும் முடியாமல் தவிக்கும் தாயுள்ளம் எப்போது விடுதலை பெற்று குழந்தைக்கு உற்ற தாயாக, அலுவலகத்திற்கு உற்ற அலுவலாளியாக, தன் உடலுக்கு உள்ள அழகை அவளுக்காகக் காத்துக்கொள்பவளாக மாற முடியும் என்ற தீராத கேள்விக்கு இக்கவிதைகள் உற்ற துணையாகின்றன.

வெண்ணிலாவின் மேற்கண்ட கவிச்சிந்தனைகளின் விழியாக ஒரு பெண் தான் எடுத்துவைக்கும் ஒவ்வொரு படிநிலையிலும் தனக்கு ஒத்துவராத ஒரு பாத்திரத்தை சமுதாய நலன் கருதியும், குடும்ப நலன் கருதியும் ஏற்கவேண்டியவளாக உள்ளாள் என்பது தெரியவருகிறது. இவற்றில் இருந்து விடுபட எண்ணுவதே, அவற்றைக் குறித்த தன் கவலைகளைப் படைப்புகளாக மாற்றுவதே இந்நூற்றாண்டில் பெண் தனக்கான அதிகாரத்தை எண்ணிப்பார்ப்பதற்கான ஊற்றுக்கண்ணாகின்றது.

12

பெண்ணிய புதுக்கவிதைகளின் பாடுபொருள்கள்

பெண்களுக்கான விடுதலை, முன்னேற்றம், வாய்ப்புகள், சாதனைகள், சோதனைகள் போன்றவற்றை முன்னிறுத்திப் பெண்கள் தங்களை முன்னெடுத்துச் செல்லும் உலகு தழுவிய இயக்கமாகப் பெண்ணியம் தற்போது வளர்ந்து வருகின்றது. அதன் வளர்ச்சியில் இலக்கியங்களுக்கு மிக முக்கியமான பங்கு உண்டு.

தமிழ்ப்புதுக்கவிதைகள் தற்போது புது வளம் பெற்றுத் திகழ்கின்றன. இதற்கான காரணம் அதிக அளவில் பெண் கவிஞர்கள் புதுக்கவிதைகளைத் தமிழில் படைக்க முன்வந்திருப்பதே ஆகும். தமிழில் புதுக்கவிதை எழுத முன்வரும் பெண்கள் புதிய புதிய கருப்பொருள்களை எடுத்தாளுகின்றனர். பெண்கள் தாம் வாழும் வாழ்க்கையில் ஏற்படும் துயரங்கள், தடைகள் முதலானவற்றையும் அவற்றை நீக்க வேண்டிய முறைமைகள் பற்றியும் புதுக்கவிதைகள் படைத்து வருகின்றனர்.

தற்போது பெண்கள் முன்னேற்றம் என்பது வெறும் பேச்சளவில் மட்டும் இருப்பதாகப் பெண் படைப்பாளர்கள் கருதுகின்றனர்.

கொல்லன் பட்டறையில்
தழல் நடுவில் ரோஜாவாய் உலகில்
பெண்களெனும் பூக்கள்

கசங்குவதும் கணக்கில்லை
கருகுவதும் கணக்கில்லை

சமுதாயச் சங்கிலிகள்
ஆண்வர்க்கம் பெண்வர்க்கம்
அனைவருக்கும் பொதுதானே

ஆனால் அடக்கப்படுவதும்
ஒடுக்கப்படுவதும்
பெண்மையின் உணர்வுகள்

காயங்களும் வடுக்களும்
அவர்களுக்கே மிக நிறைய

பெண்ணுக்குச் சுதந்திரம்
பெண்ணுக்கு விடுதலை
பேச்சளவில் பாதி
பேரிழப்புகளே மீதி.

என்ற நிர்மலாவின் கவிதை பெண்களான ரோஜாப்பூக்கள் இரும்புப் பட்டறையில் விழுந்து கருகும் சூழலை எடுத்துரைக்கிறது. இரும்புப்பட்டறையில் இரும்பைப் பழுக்கக் காய்ச்சுவார்கள். பின் தேவையான வடிவத்திற்கு ஏற்ப வளைப்பார்கள். நீட்டுவார்கள். இதுபோல ரோஜாப் பூக்கள் போன்ற பெண்கள் சமுதாயம் என்னும் பட்டறையில் காய்ச்சப்படுகிறார்கள், நீட்டப் படுகிறார்கள், வளைக்கப்படுகிறார்கள்.. என்ற நிகழ்வுப் பொருத்தத்தை இக்கவிதை எடுத்துரைக்கிறது.

பெண்களைச் சுற்றிலும், அழிக்கும் நெருப்பாய் சமூகம் இயங்கிக் கொண்டு வருகின்றது என்ற வேதனை இக்கவிதைக்குள் ஒளிந்து கிடக்கின்றது. பெண்ணுரிமை இன்னும் எட்டப்பட வில்லை என்ற தெளிவான முடிவையும் இக்கவிதை காட்டி நிற்கிறது.

பெண்களின் விடுதலை அவர்களிடமே இருக்கின்றது என்று மற்றொரு கவிதை தெரிவிக்கின்றது.

அன்று அடிமைச் சிறையில் இருந்தோம்
காந்தியும், நேருவும், பட்டேலும்
சந்திரபோஸும், பாரதியாரும்
வீர சுதந்திரம் வேண்டிப்பாட
கதவுகள் திறந்தன

தலைமுறைகள் கடந்தோட
இன்றும் நாங்கள் சிறையில்தான்
ஆனால் ஒரு சின்ன வித்தியாசம்
சாவி எங்களிடமே இருக்கிறது.

வைகைச் செல்வியின் இக்கவிதை இந்திய விடுதலையையும் பெண் விடுதலையையும் ஒப்பு நோக்குகின்றது. இந்தியா விடுதலை பெற்றுவிட்டாலும் இந்தியப் பெண்கள் இன்னும்

விடுதலை பெறவில்லை. அவர்கள் அடிமைச் சிறையில் அடைக்கப் பெற்றிருக்கிறார்கள். அடிமைச் சிறைக்கான சாவி அவர்களிடமே இருக்கிறது. அதனை உணர்ந்து தங்களின் சிறைகளைத் தகர்த்தெறிய அவர்கள் விழிப்படைய வேண்டும் என்று இக்கவிதை பெண்விடுதலைக்கான வழியை எடுத்துரைக்கிறது.

பெண்கள் பாடுபடுகிறார்கள். உழைக்கிறார்கள். சம்பாதிக்கிறார்கள். ஆனால் அவர்களின் உழைப்பும், சம்பாதிப்பும், பாடுகளும் பெண்களுக்குப் பயன் அளிப்பதில்லை. அவர்கள் சமூகம் தரும் வேதனைகளைச் சுமக்கிறார்கள். கடினங்களை ஏற்கிறார்கள். பிறர் தரும் வெறுப்புணர்வை ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களின் உண்மையான உணர்வுகளை அவர்கள் வெளிக்காட்ட முடிவதில்லை.

எற்றி உடைந்துபோன
பீங்கான் சிதறல்களைச்
சுத்தப் படுத்துகையில்
கேவலத்தின் நுனியில் நிற்கிறேன்

புறக்கணிப்புகளைத்
தொடுத்துக் கொள்கிறேன்
பூக்களைப் போல மென்மையாக

முகச்சுளிப்பின் கசப்பில்
உப்பும் புளியும் விரவி
உண்ணத் தகுந்ததாகப்
பதப்படுத்துகிறேன்

என் சொந்த கோபத்தை மட்டும்
செய்வதறியாது எறிகிறேன்
கழிவறைக் கோப்பைக்குள்.

என்ற உமாமகேஸ்வரியின் கவிதை ஒரு பெண் படைப்பாளியின் கவிதை என்ற அடையாளத்தை ஏற்று நிற்கிறது. வீட்டு உறுப்பினரின் கோபம் காரணமாக எற்றி உதைக்கப்படுகிறது கண்ணாடிப்பாத்திரம். கோபத்தின் காரணமாக வெளிப்பட்ட சொற்கள் தந்த வேதனை உடைபட்ட கண்ணாடிப் பாத்திரத்தின் சிதறல்களைவிட அதிகம்.

உடைத்துவிட்டுப் போன கண்ணாடிச் சிதறல்களை வேதனையோடு அவ்வீட்டின் தலைவி எடுத்துச் சுத்தம் செய்கிறாள். யாரோ உடைத்ததை இவள் ஏன் சுத்தம் செய்யவேண்டும். உடைத்தவர்க்கே இது குறித்துச் சிந்தனை இல்லாதபோது பார்த்துக் கொண்டிருக்கிற இவள் ஏன் சுத்தம் செய்ய வேண்டும்? அப்படிச் சுத்தப்படுத்துகிறபோது அவள் கேவலத்தின் நுனிக்கே சென்றுவிடுகிறாள். இந்தக் கேவலத்தையும் அவள் பொறுத்துக் கொள்கிறாள். முகச்சுளிப்புகளை ஏற்றுக்கொண்டு நிற்கிறாள். இதனை இக்கவிதை மிக அழகாக எடுத்துரைக்கிறது. முகச்சுளிப்புக் கசப்புகளுக்கு உப்பும் புளியும் இட்டுச் சமைக்கப் பதமாக ஆக்குவதுபோல வாழப் பதமாக மாற்றிக் கொள்கிறாள் இப்பெண். இது இக்கவிதைக்கான பெண் அடையாளமாகும். பெண் தான் படைக்கும் கவிதைகளில் தன்னை தன் அனுபவத்தை முன்வைப்பாள் என்ற நோக்கில் இந்த அடையாளம் தனித்த அடையாளமாகிவிடுகின்றது.

பெண்கள் உடல் அளவில் பெண்களாக இருந்தாலும் உள்ளத்தளவில் அவர்களின் பெண் அடையாளம் தொலைந்து போய்விட்டது. முழுக்க முழுக்க ஆண் வயப்பட்ட சிந்தனைகளே தற்காலப் பெண்களிடத்தில் இருக்கின்றது. ஆண் சூழலிலேயே அவர்கள் வளர்கிறார்கள் என்று கருதும் நிர்மலா சுரேஷ் இது குறித்து ஒரு கவிதையைப் படைத்துள்ளார்.

இங்கே மகள் இருக்கிறாள்
சகோதரி இருக்கிறாள்
தாய் இருக்கிறாள்
மருமகள் இருக்கிறாள்
பாட்டி பேத்தி
இருக்கிறார்கள்
எல்லோரும் சேர்ந்து தேடுகிறார்கள்
தங்களுக்குள்ளே இருந்த பெண்ணைக் காணவில்லை

இந்தக் கவிதை உண்மையான பெண்களைத் தேடிப் பயணம் மேற்கொள்கிறது. பெண்கள் படிக்கத் தனிக் கல்வி நிறுவனங்கள். பெண்கள் மட்டுமே பணிபுரியும் வங்கிகள், அலுவலகங்கள் என்பது பெரிய மாற்றம் என்பதை ஏற்கவேண்டும். என்றாலும் ஒவ்வொன்றிலும் ஏதாவது ஒருவகையில் அடக்குமுறை இடம் பெற்றுவிடுகின்றது. உதாரணத்திற்குப் பெண்கள் படிக்கும் கல்வியை எடுத்துக் கொண்டாலே அது தெரியவந்துவிடும்.

பெண்கள் படிக்கும் கல்வி முழுக்க முழுக்க ஆண் ஆசிரியர்களால் எழுதப்பட்ட பனுவல்களை உள்ளடக்கியது என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை. பெண்கள் தற்போது கற்கும் கல்வி முழுமையான பெண்கல்வி அல்ல என்பது மறுக்க முடியாத செய்தியாகும்.

பெண்களின் புதுக்கவிதைகளில் பெண்களுக்கான சமுதாயக் கூறுகள், பெண்களுக்கான மொழி பெண்களுக்கான உடல்கூறுகள் ஆகிய தனித்த தளங்களைக் காணமுடிகின்றது. இத்தளங்களில் பெண்கள் தம் கவிதைகளைப் படைத்துத் தம் கவிதைகளை ஆண் கவிதைகளில் இருந்து வேறுபடுத்தி நிற்கின்றனர்.

வலிகளை உச்சரிக்கத் தெரியாத
வழிகளைத் தேடி அலையாத
புடவை ஒதுக்கி நடக்கும்
பெண்களைத்தான் உனக்குப் பிடிக்கும்
ஆனால் உணர்வுகளின் குவியல் நான்

ஒளிதேசத்தில் வாழ விரும்பும்
விடுதலைப் பறவை

ஒரே பிறப்பில் அழவும் சிரிக்கவும் ரசிக்கவும்
பொழியவும் எரிக்கவும் மகிழவும்
அழியவும் ஜனிக்கவும் பூத்தவள்

கன்னத்தில் உருண்டு உதிரும்
கண்ணீர்த் துளிகளைச் சாட்சியாக்கி
உன்னிடத்தில் கருணை சம்பாதிப்பதில்
எனக்குப் பெருமையேதுமில்லை

என்ற கவிதையில் ஆண் சமுதாயம் விரும்பும்படி அடிமை வாழ்க்கை வாழ விரும்பாதவர்களாகப் பெண்கள் இருக்கின்றனர் என்பது தெரியவருகிறது. கண்ணீர் காட்டி கருணையைப் பெற விரும்பும் இரக்க நிலையைப் பெண்கள் விரும்பவில்லை. பெண்கள் விரும்புவது ஒளிமிக்க் விடுதலைப்பறவைக்குரியதான வாழ்க்கை என்பதை குட்டி ரேவதியின் இக்கவிதை உணர்த்துகின்றது.

கணவனின் செயல்கள் பொறுக்காமல் அவனை விட்டு ஒரு பெண் விலகி வந்துவிடுகிறாள். அவளிடம் பலரும் பலவாறு பேசுகின்றனர்.

ஏன் வந்துவிட்டாய்
அடித்தானா
குடித்தானா
இன்னொன்று வைத்திருந்தானா
அப்படி அவன் என்னதான் செய்தான்

அடிக்கவில்லை
குடிக்கவில்லை
இன்னொன்று வைக்கவில்லை
அவன் இப்படி ஒன்றும் செய்யவில்லை

என் ஊதியம் தீர்ந்தபின் குழந்தையின் பால்பவுடர் தீர்ந்தபோது

காலி ஒருவன் என்னை அசிங்கமாக வருணித்தபோது
மகனின் சுரம் கசாயத்திற்குக் கட்டுப்படாமல் போனபோது
வீட்டுச் சொந்தக் காரர் காலி செய்ய நோட்டீஸ் கொடுத்தபோது
நான் மார் வலியால் துடித்தபோது
இப்படிப் பல சமயங்களில் அவன் ஒன்றுமே செய்யவில்லை

இக்கவிதையில் தன் துயரமான சூழ்நிலைகளில் பங்கு கொள்ளாத கணவனுடன் வாழ்ந்தென்ன? வாழாவிட்டால் என்ன என்ற நிலையில் பெண் அவனை விடுத்து வந்த முடிவு மிகச் சரியான முடிவு என்பதாகக் காட்டப்பெற்றுள்ளது. இது வத்சலா என்ற பெண்கவிஞரின் கவிதையாகும்.

வேற்றூர் சென்றுவிட்டு
கணவருடன் திரும்புகையில்
கண்ணில் படுகிறது அம்மாவின் வீடு
அம்மாவைப் பார்க்கும் ஆசையில்
கெஞ்சியும்
மறுத்து நகர்கிறது வண்டி
வந்த ஆத்திரத்தில்
குதிக்க எத்தனிக்கையில்
வந்து தடுக்கிறது
காத்திருக்கும் மகளின் நினைவு.

என்ற கவிதையில் அம்மாவின் வீட்டுக்குக் கூட நினைத்த நேரத்தில் அருகில் இருந்தும் கூட செல்ல முடியாத நெருக்குதல்கள் பெண்களின் வாழ்வில் ஏற்படுகின்றன என்பதை எடுத்துரைக்கின்றது.

இவ்வாறு பெண்கள் தம் சமூகம் குறித்த பல இன்னல்களை வெளிக்காட்டும் களங்களாகப் பெண்ணிய புதுக்கவிதைகள் விளங்குகின்றன.

பெண்களின் உடல் என்பது ஆண்களின் உடலமைவில் இருந்து வேறுபட்டது. பெண்களின் உடல், அதனுள் தோன்றும் உணர்வுகள், மாற்றங்கள் முதலானவை பெண்களால் மட்டுமே அறியத்தக்கது. அந்த அளவிற்கு தனித்தன்மை வாய்ந்ததாகப் பெண்களின் உடல் அமைகிறது.

என் உடல் அலாதியானது

தொடுதலில் மட்டுமே
ருபம் பெறுகின்றது

மூச்சை உண்ட பைகளென
திரண்டு
சுழிந்து
வழிந்து
கிடப்பது

தழுவலில் மட்டுமே பிரக்ஞை பெறுகிறது
பரிவை உணரும் வரை
உயிரை உணர மறுக்கின்றது

என்ற லீனா மணிமேகலையின் கவிதை பெண் உடல் அனுபவத்தை அதன் உணர்வை எடுத்துரைக்கின்றது. இன்னும் பல பெண்கவிஞர்களின் கவிதைகளில் பெண்களில் உடல் உறுப்புகள் பல தெளிவாகவே குறிக்கப்பெறுகின்றன. மேலும் உவமைகள் வாயிலாகவும் அவை வெளிக்காட்டப் பெறுகின்றன. இவை இக்காலப் பெண்கவிஞர்களால் காட்டப் பெறும் தனித்த வேறுபாடு ஆகும். இந்த வேறுபாடு இவர்களின் கவிதைகளை ஆண்களின் கவிதைகளில் இருந்து வேறுபடுத்துகின்றன.

அடுத்து மொழி நிலையிலும் பெண்கவிதைகள் தனித்து நிற்க விரும்புகின்றன. அனைத்து மொழிகளும் ஆண்வயப்பட்டது எனப் பெண்ணிய அறிஞர்கள் கருதுகின்றனர். எனவே பெண்கள் தனக்கான ஒரு பொது மொழியை வளர்த்துக்கொள்ள விரும்புகின்றனர்.

இதுவரை எவரும் பேசியிராத
குறிகளாலும் சைகைகளாலும்
உணர்த்தமுடியாத
கர்ப்பத்தில் மிதக்கும் மொழி ஒன்று
எனக்கு வேண்டும்

அது என்கிழிந்த உள்ளாடைகளில்
அந்தரங்கத்தைத் தேடாத கண்ணியமானது
கடக்கும் போதே முதுகில் குத்தாத
ஓராயிரம் சொற்களைக் கொண்டது
அதன் அர்த்தங்கள் ஆகாய விரிவு கொண்டவை
அதன் கனிந்த சொற்கள்
நாக்கின் மெல்லிய தோலைப் புண்ணாக்காதவை
அப்பிரத்யேக மொழியின் திறவு கோல்கள்
கண்ணீரை விட்டொழித்துக் கம்பீரம் பிரசவிக்கும்.

என்ற சுகிர்தராணியின் கவிதையில் பெண்கள் தனக்கான மொழியைப் படைத்துக்கொள்ள விரும்பும் விருப்பம் தெரிய வருகின்றது. பெண்கள் தங்களுக்கான மொழியைக் கர்ப்பத்தில் மிதக்கும் மொழியாகப் படைத்துக் கொள்ளவேண்டும் என்று இக்கவிஞர் விரும்புகின்றார். அதாவது பெண்மொழியானது பெண் அடையாளத்துடன் திகழவேண்டும் என்பதே இதன் அடிப்படையாகும். மேலும் அம்மொழி ஆண்கள் இதுவரை படைத்தளித்த கவர்ச்சி மொழியாக இருக்காது. பெண்களைக் குறை கூறுவதாக இருக்கக் கூடாது. அது ஆகாயம் அளவிற்குப் பெரிய அளவில் விரிவு கொண்டதாக இருக்கவேண்டும். மேலும் அம்மொழிகள் கண்ணீரை விட்டொழித்துக் கம்பீரமான வலிமையைத் தந்து நிற்க வேண்டும் என்று பெண் மொழி குறித்த குறிப்புகளை இப்பெண் கவிஞர் முன்வைக்கின்றார்.

இவ்வாறு சமூகம், மொழி, உடல் ஆகிய முத்தளங்களில் இப்போதைய பெண்ணியக் கவிதைகள் வளர்ந்து வருகின்றன. பெண்ணிய இயக்கத்திற்கான அடையாளங்களும் வளர்ச்சிகளும் தொடங்கிவிட்டன என்பதை இக்கவிதைகள் உணர்த்துகின்றன. தமிழ் இலக்கிய உலகில் பெண் இலக்கியம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படத் தொடங்கிவிட்டது என்பதைப் பெண்ணியக் கவிதைகள் பறைசாற்றுகின்றன.

13

அழியும்தருவாயில் உண்மையான பெண்ணிலக்கியங்கள்

பெண்களின் உண்மையான இலக்கியம் அவர்களின் சுய வாழ்க்கைக் குறிப்புகளிலும், வாய்மொழி இலக்கியங்களிலும் மட்டுமே உள்ளன என்று பெண்ணியவாதிகள் உறுதிபட உரைக்கின்றனர்.

தமிழின் தனித்தன்மை அது வாய்மொழி இலக்கியங்களையும், எழுத்து வழி இலக்கியங்களையும் ஒருசேர வளர்த்து வருவதே ஆகும். எழுத்து வழி இலக்கியத் தாக்கத்தின் விளைவு வாய்மொழியிலும், வாய்மொழித் தாக்கத்தின் விளைவு எழுத்து வழி இலக்கியத்திலும் ஏற்பட்டு வருவது தமிழுக்குக் கிடைத்த கொடைகளுள் குறிக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் ஆகும்.

வருங்காலத்தில் இக்கொடுக்கல் வாங்கல் நீடிக்குமா என்பது ஐயத்தின் பாற்பட்டதாக உள்ளது. கிராமங்கள் நகரம் நோக்கிப் போய் விட்ட சூழலில் கிராமத்தின் சொந்த அடையாளங்களில் ஒன்றான வாய்மொழி இலக்கியங்கள் அழிவையே சந்திக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் வாய்மொழி இலக்கியங்களின் தலைமுறைப் பரவல் என்பது முற்றிலும் இல்லாத நிலை தற்போது ஏற்பட்டு விட்டது. பெண்கள் தங்கள் சொத்துக்களைக் காப்பதைப் போல அக்காலத்தில் தங்கள் தாய் தந்த வாய் மொழி இலக்கிய வளங்களைக் காத்துக் கொண்டிருந்தனர். ஆனால் தற்போது சொத்தையும் காக்க முடியாமல், இலக்கியப் பரவலையும் தர முடியாமல் சிக்கலில் பெண்கள் சிக்கித்தவித்துக் கொண்டு வருகின்றனர். இந்நிலை நீடித்தால் பெண்கள் தங்களின் வாய்மொழி இலக்கிய அடையாளங்களை விட்டுவிட வேண்டிய சூழல் ஏற்பட்டு விடும்.

தமிழ் வாய்மொழி இலக்கியங்களில் தாலாட்டு, ஒப்பாரி, கும்மிப்பாடல்கள் போன்ற வகைப் பாடல்கள் பெண்கள் மட்டுமே பாடக் கூடிய பெண்கள் மட்டுமே கலந்து கொள்ளக் கூடிய பாடல்களாகும். இவற்றைத் தூய்மையான பெண்ணிலக்கியம் என்று கருதுவதில் மாற்றுக் கருத்து இல்லை.

எவ்விதப் புனைவும் பொய்யும் இல்லாது இந்த இலக்கியங்களில் பெண்ணினத்தின் உண்மை நிலையை உரைக்கும் போக்கின என்பதில் ஐயமில்லை. இவற்றைப் பதிவு செய்து காப்பாற்ற வேண்டியது இன்றைய தேவை. கொஞ்சம் நஞ்சம் கிராமச் சூழல் ஒட்டியுள்ள இக்காலத்தில் இப்பாடல்களின் தொகுப்பைத் தேடித் தொகுக்க வேண்டிய கடமை பெண்இலக்கியச் சார்புடைய ஒவ்வொருக்கும் உண்டு.

இவ்வகைக் காப்பு இல்லாமல் அழிந்த பாடல்களும் உண்டு. அவற்றில் பெண்களின் பூப்புச் சடங்கின்போது பாடப்படும் பாடல்கள்,பெண்கள் சாந்தி முகூர்த்தத்தின்போது மணப்பெண்ணுக்குப் புரியும் வகையில் பாடும் அகச்சார்புடைய பாடல்கள் போன்றன இழந்துபோய்விட்ட பாடல் வகைகள் ஆகும்.

இந்நிலை ஒப்பாரி, தாலாட்டு, கும்மிப்பாடல்களுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் இனி வரும் சந்ததியினர் கவனம் கொள்ளவேண்டும்.

சமீபத்தில் ஓர் ஆய்விற்காகப் புதுக்கோட்டை மாவட்டத்தின் ஒரு சிற்றூரான அரங்குளம் மஞ்சுவயல் என்ற கிராமத்து வாய்மொழி இலக்கிய வளங்களைத் தொகுக்கும் பணி செயல்படுத்தப்பெற்றது. இப்பணியில் உழைத்த ஆய்வாளர் (ப.பிரமிளா) தொகுத்த சில ஒப்பாரிப்பாடல்கள் குறித்து இக்கட்டுரை சிந்திக்கிறது.

ஆதண்டக்காய் காய்க்கும் அலரிப் பூ பிஞ்சிறங்கும்
ஆணாய்ப் பிறந்திருந்தால் அப்பன் வீட்டு அரண்மனையில்
அம்பெடுப்பேன் வில்லெடுப்பேன்
மாரியம்மன் கோயிலாண்டை மண்ணாய்ப் பிறந்திருந்தால்
எனக்கு
மாசம் ஒரு பூசை வரும் என்ன பெத்த அம்மா
பெண்ணாய்ப் பிறந்த குறை புலம்பிக் கிடக்கிறனே

(ஆர். மீனாட்சி, வயது.70)

இறந்த தாய்க்கு மகள் பாடும் ஒப்பாரி இது. ஆண்பிள்ளைக்குப் பிறந்த வீட்டில் இருக்கும் உரிமை தனக்கு இல்லையே என்ற ஏக்கம் இப்பாடலில் நிரம்பிக்கிடக்கிறது. அழ வந்த மகள் ஐந்தாறு நாள் விருந்தாய் இருந்து அழுதுவிட்டுப் போய்விட வேண்டிய நிலையை இவ்வொப்பாரி எடுத்துரைக்கிறது.

இறந்தவள் அம்மா. வந்து பாடுபவள் மகள். இருவரும் பெண்ணினம் சார்ந்தவர்கள். இவர்களுக்குள் இருக்கும் ஒன்றுபட்ட பாலினத்தன்மை இப்பாடலுக்கு மேலும் வலு சேர்க்கின்றது.

தாயையோ, தந்தையையோ இழந்த துக்கத்தில் இருக்கிறாள் ஒரு பெண். அவளுக்குப் புகுந்த இடத்தில் அவ்வளவு வசதி வாய்ப்பு, அன்பு, அரவணைப்பு இல்லை. இறந்து கிடக்கும் தன் தந்தை, தாய் ஆகிய யாரோ ஒருவரிடத்தில் இதனைப் பின்வருமாறு அவள் சொல்லி அழுகிறாள்.

மாட்டுக் கயிறு அவுத்து
மாமரத்தில் ஊஞ்சலிட்டே நீங்க
மவளாருக்கு ஏத்ததொரு
மன்னவரத் தேடலையே
மனக்கவலை தீரலையே
மலையில கிடந்ததொரு
மலப் பாம்ப தேடுனியோஅந்த
மலப் பாம்பு சீறுறதும்
மவளாப் பொலம்புறதும் நீங்க போகும்
மண்டலங்கள் கேக்கலயோ

(கே.சுப்பம்மாள், வயது 43)

இப்பாடலில் மலைப்பாம்பு என்ற உவமையை இப்பெண் பயன்படுத்துகிறாள். எதனை உண்டாலும் அப்படியே விழுங்கிவிடும் இயல்புடைய மலைப்பாம்பிற்கு இவளின் கணவன் ஒப்புமை காட்டப்படுகிறான். அவளின் துயரம் மண்டலம் கேக்க மோனைத் தொடை பயன்பட்டுள்ளது.

விதவைக் கோலம் கொள்ளும் ஒரு பெண்ணின் அவலக்குரல் மற்றொரு பாடலில் தெரிகின்றது.

சீமை அழியுதுண்ணு நான் சிந்தையிலும் எண்ணலியே
சீமை அழியலயே என் சிறப்பழிஞ்ச மாய்மென்ன
கடுகு சிறுதாலி கல்பதிச்ச அட்டியலாம்;
கல்பதிச்ச அட்டியலை நான் கழட்டி வைக்க நாளாச்சே
பட்டுக் கழட்டி வச்சேன் நான் பாதம் வரை வெள்ளையிட்டேன்
சிவப்பு கழட்டிவச்சேன் என் தேகமெல்லாம் வெள்ளையிட்டேன்
ஆத்துல புல்லறுத்து அறுகம்புல்லு பந்தலிட்டு
அரும மக தாலி வாங்க ஒங்க அனைவருக்கும் சம்மதமோ

(செல்வி. வயது 75)

இப்பாடலில் தாலி வாங்க என்ற தொடர் அமங்கலத்தை மங்கலமாக்கும் மங்கலத் தொடராகும். விதவைப் பெண் தன் வெள்ளைக் கோலத்தினைத் தெரிவிக்கும் பல குறிப்புகள் இப்பாடலில் இடம் பெற்றுள்ளன. மேலும் தாலி இழக்கும் துயரையும் அப்பெண் பாடலில் தொட்டுக் காட்டியுள்ளார்.

இவ்வாறு பாடல் தோறும் பெண் தன்னைப் பற்றிச் சிந்திக்கிற அருமை இப்பாடல்களில் உண்டு. சார்புடைமை ஏற்றப் பெற்ற அச்சார்பு இன்மை வந்தபோது தவிக்கும் தவிப்பிற்கு ஆற்ற யார் உதவுவது. அழியாத் துயரமாக பெண்களின் வாழ்வு தொடருவதை இப்பாடல்கள் பதியவைத்துள்ளன.

இப்பாடல்களைப் பாடிய பெண்களின் வயது ஏறக்குறைய மூத்த வயது என்பது கவலைக்குரியது. இவ்வயதுப் பெண்கள் தலைமுறைப் பரவலாகத் தன் சொத்துக்களை மற்றவர்களிடம் விட்டுச் செல்ல வேண்டியது தேவை.

இத்தேவை நிறைவேறினால் உண்மையான பெண்ணிலக்கியம் நிலைபெறும்.

14

பெண்கள் நுழையமறந்த துறைகளும், மறுக்கும் துறைகளும்

துறைதோறும் பெண்கள் இடம் பெற வேண்டும் என்ற சிந்தனை தற்போது ஏறக்குறைய நிறைவேறி வருகிறது. இராணுவம், ஆட்சித்துறை, அரசியல் எனப் பல போராட்டம் மிக்க துறைகளிலும் கூடப் பெண்கள் தற்போது தங்கள் பங்கை நிறைவேற்றி வருகிறார்கள். என்றாலும் அவர்கள் நுழைய வேண்டிய துறைகள் பல இன்னமும் உள்ளன.

தமிழ் இலக்கிய வகைமைப் பாட்டில் பெண்கள் பங்குபெற வேண்டிய துறைகள் பல உள்ளன. சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், நாவல், சிறுகதை, புதுக்கவிதை ஆகிய வகைகளில் பெண்களின் பங்களிப்பை ஓரளவிற்குக் காண முடிகிறது. ஆனால் இலக்கணம், அகராதி, கலைக்களஞ்சியம், வரலாறு, இலக்கிய வரலாறு, தத்துவம், தன்வரலாறு, பிறர்வரலாறு, உரைசெய்தல் போன்ற பல இலக்கிய வகைமைகளில் அவர்களின் பங்கெடுப்பு இல்லை என்றே கூறிவிடலாம்.

குறிப்பாக இலக்கிய வரலாறுகள் பெரும்பாலும் ஆண்களாலேயே செய்யப்படுகின்றன. ஆண்படைப்பாளிகளை முன்னிறுத்துவனவாக ஆண்களின் இலக்கியவரலாறுகள் அமைகின்றன. பெண்களை முன்னிறுத்தும் பெண் படைக்கும் இலக்கிய வரலாறுகள் எழுதப்படவேண்டும். அப்படி எழுதப்படும் பெண் இலக்கிய வரலாறுகள் இதுவரை படைப்பைச் செய்துள்ள அனைத்துப் பெண்படைப் பாளிகளையும் விட்டுவிடாமல் வெளிப்படுத்தக் கூடியனவாக இருக்க வேண்டும்.

அடுத்து இலக்கணத் துறைகள்: புதிய இலக்கணம் படைக்கவோ, இலக்கணத்தை மறுக்கவோ இன்றுவரை பெண்கள் முயலவில்லை என்றே கொள்ள வேண்டியுள்ளது. சிறுகாக்கைப் பாடினியம், காக்கைப் பாடினியம் ஆகியன இருந்த இடம் தெரியாமல் மறைக்கப்பட்டுவிட்டன. அகராதித்

துறைகள், கலைக்களஞ்சியங்கள் ஆகியன பெண்களுக்கு ஏற்ற நிலையில் தக்க இடம் தரப்பெற்று உருவாக்கப் பெண்கள் முன்வரவேண்டும்.

தத்துவத் துறை : பெண்களுக்கான இறைத் தத்துவங்கள் எவையும் இல்லை. பெண்களால் அவை எழுதப்படவும் இல்லை. பெரும்பாலும் தத்துவங்களில் உயிர் என்ற நிலையில் ஆண் பெண் இருவருமே குறிக்கப்பெற்றாலும் தத்துவங்கள் தரும் செய்திகள் பெரும்பாலும் ஆண் மையம் மிக்கனவே. ஔவையாரால் எழுதப்பெற்ற விநாயகர் அகவல் போன்றவற்றில் வரும் தத்துவங்கள் குண்டலினி யோகம் குறித்தனவே. குண்டலினி யோகம் என்பது ஆண்கள் முக்தி பெறும் யோக முறையாகும். அம்முறைகொண்டு பெண்கள் முக்தி பெற இயலாது என்பது இங்கு எண்ணத் தக்கது.

வரலாறு : இத்துறையிலும் பெண் ஆசிரியர்கள் இல்லை என்பதே ஏற்கக் கூடிய கருத்தாகும். வரலாற்று நூல்கள், வரலாற்று நாவல்கள் பெண்களால் எழுதப்படுதல் என்பது மிகமிகக் குறைவே ஆகும்.

அதுபோல உரையாசிரியர்கள் என்ற நிலையில் பழம் பெரும் உரையாசிரியர்கள் அனைவரும் ஆண்கள் என்பது கருதத்தக்கது. திருக்குறளுக்குக் கூட பெண்கள் உரையெழுதவில்லை என்பது ஆச்சர்யப்படத்தக்கதாக உள்ளது. தேவகி முத்தையா எழுதிய அபிராமி அந்தாதி நூலுக்கான உரையே முதல் முதல் பெண் எழுதிய உரையாக விளங்குகிறது. (இதுவும் பெண் தன்மை வாய்ந்த உரையா என்பது ஆராயத்தக்கது)

அகராதித் துறைகளில் கலைக்களஞ்சியப் பணிகளில் ஈடுபடும் பெண்களும் மிகக் குறைவானவர்களே. இராதா செல்லப்பன் போன்ற குறிக்கத்தக்க மிகக் குறைவானவர்களே அகராதித்துறையில் ஈடுபட்டு வருகின்றனர். அதுபோல அறிவியல் துறைகளில் பெண்கள் பங்களிப்பும் மிகக் குறைவே (இதில் ஆண்களும் குறைவு என்பதும் ஏற்கத்தக்கது)

தன்வரலாறு, வாழ்க்கை வரலாறு ஆகிய துறைகளில் பெண்கள் நுழைய மறுக்கின்றனர். ஏனெனில் சுய வாழ்வை எழுதுகையில் அதில் பலரைப் பற்றிய விமர்சனங்கள் செய்ய வேண்டிவரும் என்பது கருதியே பெண்கள் இதில் இறங்குவதில்லை போலும். இருப்பினும் ஒரு சில பெண்கள் இத்துறையிலும் இறங்கி உள்ளனர்.

எழுத்தாளர் லட்சுமி, திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலியில் பணிபுரிந்த வீரம்மாள் (இது என் வாழ்க்கைக் கதை) ஆகியோர் இதனுள் குறிக்கத்தக்கவர்கள்.

இதுபோன்றே சிற்றிலக்கியங்கள் காப்பியங்கள் ஆகியவற்றிலும் பெண் படைப்பாளிகளைக் காணமுடிவதில்லை. காந்தி புராணம் எழுதிய அசலாம்பிகை அம்மையார் மட்டுமே காப்பியத்திற்கு எடுத்துக்காட்டப்படவேண்டியவராக உள்ளார்.

சிற்றிலக்கியப் பரப்பில் ஆண்டாள் (பாவைப்பாடல்), காரைக்காலம்மையார் (அந்தாதி) ஆகியோர் தவிர வேறு பெண்கள் இடம் பெறவில்லை என்பது குறிக்கத்தக்கது. அதுபோல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒரு பெண் கூட இடம் பெறவில்லை என்பதும் கருதத்தக்கது. பின்னாளில் ஔவையாரின் நீதி நூல்கள் எழுதியுள்ளமையால் நீதி நூல்கள் எழுதும் நிலையைப் பெண்கள் பெற்றிருந்தனர் என்பது மிகப் பெரிய வலிமையாகும்.

இவ்வாறு பெண்கள் புக வேண்டிய துறைகள் பல தமிழ் இலக்கியப் பரப்பில் உள்ளன. இவை தவிர பெண்கள் தமக்கென தனித்த துறையாக உருவாக்கிக் கொண்ட கும்மி, தாலாட்டு முதலானவற்றை மீண்டும் படைத்துக்கொள்ள முயன்றால் இதன் வழி பெண்ணுலகம் பெருத்த எழுச்சியைப் பெறும்.

பெண்கள் தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு சில படைப்புக் களங்களில் மட்டுமே இடம் பெற்றுள்ளனர். அவர்கள் இடம் பெற வேண்டிய பல துறைகள் தமிழ் இலக்கியப் பரப்பில் உள்ளன.

காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், சரித்திர நாவல்கள், தன் வரலாற்று நூல்கள், வாழ்க்கை வரலாற்று நூல்கள், தத்துவங்கள், இலக்கணப் பகுதிகள் முதலான பலவற்றில் பெண்கள் நுழைந்து வளப்படுத்திக் கொள்ளவேண்டும்.

பெண்கள் நுழைய மறுக்கும் பகுதியாக அமைவது சுய சரிதைப் பகுதியாகும். ஏனெனில் இதனுள் பல எதிர்ப்புகளை, விமர்சனங்களை அவர்கள் எதிர் கொள்ள வேண்டியிருக்கும் என்பதாகும்.

பெண்களுக்கே உரிய இலக்கிய வகைகளான கும்மி, தாலாட்டு போன்றவற்றை அவர்கள் தமக்கான இலக்கியங்களாகக் கொண்டு அவற்றை மேம்படுத்திப் பெண்ணுலகு செழிக்கச் செய்யவேண்டும்.

15

தமிழ்ப் பெண்ணியத்தின் எதிர்காலம்

ஓர் இயக்கத்தின் எதிர்கால நிலையை அந்த இயக்கத்தின் நிகழ்கால வெற்றி உணர்த்திவிடும். எதிர்காலக் கனியின் வளர்ச்சிக்கு நிகழ்கால விதை முக்கியமான காரணி. இவ்வகையில் தமிழ்ப் பெண்ணியம் என்பதன் நிகழ்காலப் போக்கு அதன் எதிர்கால மலர்ச்சியைக் காண வழிவகுக்கிறது.

தற்காலத்தில் பெண்ணியம் உலக அளவில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதில் ஐயமில்லை. உணவு சமைப்பவளாக, பிள்ளை பெற்றுப் போடும் இயந்திரமாக மட்டும் இருந்த பெண்களின் நிலை உலகு தழுவிய அளவில் பெரிதும் மாற்றத்திற்கு உள்ளாகி மேம்பட்டுள்ளது.

ஆட்சியாளர்களாக, நீதிபதிகளாக, மருத்துவர்களாக, ஆராய்ச்சியாளர்களாக, பேராசிரியர்களாக, இராணுவ அதிகாரிகளாக பெண்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், வங்கதேசம் முதலான ஆசிய நாடுகளில் ஆட்சியாளர்களாக விளங்கிய பெண்கள் ஐரோப்பிய நாடுகளில் பேருக்கு ஆட்சி அரசுப்பணிகளில் பங்காற்றும் பெண்களைவிட மேலான அதிகாரம், ஆட்சிப் பண்பு பெற்றவர்களாக இருந்து வருகின்றனர். உலக வல்லரசு நாடுகளில் பெண்கள் வாக்களிக்கவே பலகாலம் போராட வேண்டியவர்களாக இருந்தார்கள். ஆனால் தற்போது அந்த நிலை மூன்றாம் உலகநாடுகளில் கூட மாற்றம் பெற்றுவிட்டன என்பது ஒரு குறிப்பிடத்தக்க செய்தி.

இத்தகைய உலகச் சூழலில் தமிழகப் பெண்கள் அல்லது தமிழ்ப் பெண்ணியம் என்பதன் நிகழ்கால நிலை கல்வியாலும் தொழிலாலும் பொருளாலும் மேம்பட்ட எண்ணிக்கை உடையதாகவே உள்ளது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன.

பழைய தமிழகத்தின் பெண்களுக்கான பள்ளிக்கூடம் என்ற புதுமை தற்போது பெண்களுக்கான பல்கலைக்கழகம் என்பதாக

விரிவு பெற்றுள்ளது. பெண்களுக்கு மகப்பேறு பார்த்த ஆண்மருத்துவத் தலைமுறை கழிந்து பெண்கள் ஆண்களுக்கு ஆண்மையின்மைக் குறை களையும் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டு விட்டது. பெண்களுக்கான தையல்காரர்கள் மறைந்து பெண்களே ஆடை வடிவமைப்பாளர்களாக இடம் பெற்று விட்டனர். பெண்களுக்கு ஆண் ஓட்டுநர்கள் பயிற்சி தந்த காலம் மலையேறி பெண்களுக்குப் பெண்கள் கற்றுத் தரும் காலம் வந்தாகிவிட்டது. நேரம் காலம் பார்க்காமல் இரவு பகல் மாற்றி மாற்றி உழைக்கத் தமிழகப் பெண்கள் தயாராகி விட்டனர்.

"இதுவரை இக்கட்டுரையில் பார்த்த ஆண் / பெண் தொடர்பான அனைத்துக் கருத்தாக்கங்களையும் அனைத்து வகையிலும் எதிர்கொண்டு, பெண்ணியல் பார்வையில் மறு உருவாக்கம் செய்ய வேண்டிய மாபெரும் பணி பெண்ணியல் கல்வி முன் குவிந்து கிடக்கிறது. தமிழ்ச் சூழலில் இத்தகைய பணி இன்னும் தொடங்கப்படவே இல்லை எனலாம். தமிழ் இலக்கியம், மதம், குடும்பம், கல்வி, பண்பாடு, அரசியல் ஆகிய அனைத்தையும் இத்தகைய் அலசலுக்கு உட்படுத்த வேண்டும்" (1994) (க.பஞ்சாங்கம், பெண்ணெனும் படைப்பு, ப,93) என்ற கருத்து ஏறக்குறைய பத்தாண்டுகளில் மாற்றம் அடைந்து தமிழ்ப் பெண்ணியம் கொள்கை அளவிலும், செயல் அளவிலும், ஆய்வு அளவிலும் கிளைத்துவிட்டது என்பதைத் தற்போதைய சூழல் உறுதிப்படுத்துகிறது.

வாழ்வாலும், சூழலாலும், அணுகுமுறையாலும் மேம்பாடு அடைந்துள்ள தமிழ்ப் பெண்கள் எதிர்காலம் என்ற கால அளவில் கைப்பற்ற வேண்டிய வசதிகளும், வாய்ப்புகளும், உரிமைகளும் இன்னும் அதிகமாகவே உள்ளன. அதன் ஒரு தொடக்கப் புள்ளியாக இந்நிகழ்காலம் அமைந்துள்ளது.

பெண்களுக்கான வாழ்க்கை முறை

பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு அடிப்படைக் காரணங்கள் இரண்டு என்பர் (1998) (கோவிந்தசாமி , நட்ராஜ் (மொ), மார்க்சியம்-பெண்ணியம் உறவும் முரணும், ப, 130). அவை 1. பெண்களின் பலவீனம் 2. பெண்களின் மறு உற்பத்திப் பங்கு. இக்கருத்தில் முதல் கருத்து ஆண்களால் புனைவிக்கப்பட்ட கருத்து. இரண்டாம் கருத்து ஏற்கத்தக்கது. இரண்டாம் கருத்தைப்

பெண்களுக்கான வாழ்க்கை முறை என்றுகூட அமைத்துக் கொண்டால் இச்சிக்கலைத் தீர்க்க எளிதாக வழி கிடைத்து விடும்.

தற்காலத்தில் பெண்ணியவாதிகள் முன்வைக்கும் பெண்களுக் கான வாழ்க்கைமுறை என்பது மிகக் குழப்பம் தரும் ஒரு செய்தியாக உள்ளது. தமிழ்ப் பெண்ணியவாதிகள் பெண்களுக்கான விடுதலைமிக்க வாழ்க்கைமுறை என்பதாக எதனை முன்வைக்கிறார்கள் அல்லது எதனை முன்வைக்கப் போகிறார்கள் (போகிறோம்) என்பது குறித்த தெளிவான சிந்தனை இன்னும் பிறக்கவில்லை.

இச்சிக்கல் குறித்து உலகப் பெண்ணியத்தின் எதிர்கால நிலை என்ன? அதனோடு தமிழ்ப் பெண்ணியவாதிகள் ஒத்துப்போகப் போகிறார்களா (போகிறோமா) அல்லது மாறுபடப் போகிறார்களா? (போகிறோமா) என்னும் கேள்விகள் சிந்திக்கப் பட வேண்டிய கேள்விகள் ஆகும்.

உலகப் பெண்ணிய வாழ்க்கைமுறைமையை ஏற்பதால் இந்திய , தமிழ்நாட்டு அளவில் இந்திய , தமிழ்நாட்டுப் பெண்கள் சந்திக்க வேண்டிய சவால்கள், தனித்த தீவாகத் தங்களை அமைத்துக் கொள்வதால் ஏற்படப்போகும் நன்மை தீமைகள் இவைகளின் அடிப்படையில் இந்தக் குழப்பத்தை அணுகவேண்டிய கட்டாயம் தற்போது ஏற்பட்டுள்ளது. இது எதிர்கால விடியலும்கூட.

இதனை விரிவாகவே இன்றைய தமிழ்ப் பெண்ணியவாதிகளின் கண்ணோட்டத்தில் அறிய இயலும். " பாலியல் சுதந்திரம், திருமண பந்தத்திலிருந்து விடுதலை, ஓரினச் சேர்க்கை, திருமண நிறுவனத்தில் நுழையாமல் இணைந்து வாழ்தல் என்பவையெல்லாம் ஒரு சிலருக்கு வாழ்வு முறையாகலாம். அவர்களுக்கான தடைகளை நீக்கிக் கொள்ள அவர்கள் செய்யும் முடிவாகவும் இருக்கலாம். அப்படி அவர்கள் வாழ்வதில் எவ்விதத் தடையும் யாருக்கும் இருக்கப் போவதில்லை. அந்த நிலை நிச்சயம் உருவாகலாம். இன்னும் சொல்லப்போனால் அவர்களுக்கான மதிப்பு, மரியாதை, சுதந்திர உணர்வு, அனைத்தையும் சமூகம் புரிந்துகொள்ளும் மாற்றமும் ஏற்படலாம்."(2005) (முனைவர் தேவதத்தா, மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் பெண், ப 100) என்று உலகப்

பெண்ணிய வாதிகள் முன்வைக்கும் விடுதலை மிக்க பெண் வாழ்க்கைமுறையைச் சுட்டிக்காட்டி அதேநேரத்தில் தமிழ்ப் பெண்களில் சிலரும் இத்தகைய வாழ்வை வாழ்வதாகவும் தொட்டுக்காட்டி பெண்களுக்கான எதிர்கால வாழ்க்கைமுறை குறித்து ஒரு சில கருத்துக்களை ஒரு பெண்ணியவாதி முன்வைக்கிறார்.

ஆனால் அவரே தொடர்ந்துவரும் அடுத்த பத்தியில் " இது விலக்காக இருக்கும் நெறி. இதனைப் பொதுவான வாழ்க்கை நெறியாக ஆக்க காலம் பிடிக்கும். ஆணும் பெண்ணும் சமம் என்பதை, குழந்தைகள் நம் மூலமாகப் பிறக்கின்றனர் ஆனால் அவர்கள் நம் சொத்தல்ல என்பதைப் புரிந்துகொண்டால் ஆண், பெண்ணைச் சொத்தாகவும் உடைமையாகவும் கொண்டு அடிமைப்படுத்தியது போன்றே குழந்தைகளையும் அடிமைப்படுத்தும் நிலை உருவாகாமல் இருக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்யலாம். . . அவரவர் உயிர் வாழ்தலுக்கு சுவாசிப்பது, எப்படி இயல்பாகிறதோ அதைப்போன்றே சமூகத்தின் ஆரோக்கியமான உயிர்வாழ்தலுக்கு ஆண் பெண் சமத்துவம் இயல்பாக உருவாக வேண்டும்."(மேலது ப. 100 101) என்று சொல்லித் தான் சொல்ல வந்த முன் கருத்தில் இருந்து சற்றுத் தளர்வடைகிறார்.

இவ்வகைப்பட்ட குழப்பமான போக்கு தமிழ்ப் பெண்ணியத்தின் தற்கால சிக்கல் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. தமிழ்ப் பெண்ணியவாதிகள் குடும்பம் என்ற கட்டமைப்பை உடைக்கப் போகிறார்களா இல்லை அப்படியே வைத்துக்கொண்டு குடும்பத் தலைவரின் மனைவியாக வாழப்போகிறார்களா என்ற தெளிவைப் பெற இவர்கள் இன்னமும் இழுபட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

இந்த இழுபறி தவறு-சரி என்று கூறுவதற்கு முன் தந்தை பெரியார் கூறும் ஒரு கருத்தைக் காண்போம். "அன்றியும் பிள்ளை பெறும் தொல்லையால் தங்களுக்கும் பிறர் உதவி வேண்டியிருப்பதால் அங்கு ஆண் ஆதிக்கம் ஏற்பட இடமுண்டாகி விடுகிறது. எனவே உண்மையான பெண்கள் விடுதலைக்குப் பிள்ளை பெறும் தொல்லை அடியோடு ஒழிந்து போக வேண்டும்.... தவிர பெண்கள் பிள்ளை பெறுவதை நிறுத்தி விட்டால் உலகம் விருத்தியாகாது என்று தர்ம நியாயம் பேசச்

சிலர் வருவார்கள். உலகம் விருத்தியாகாவிட்டால் பெண்களுக்கு என்ன கஷ்டம் வரும்? மானிட வர்க்கம் பெருகாவிட்டால் பெண்களுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டு விடக்கூடும்? அல்லது இந்தத் தர்மநியாயம் (அதாவது மக்கள் பெருக்கமடையாவிட்டால்) பேசுபவர்களுக்குத்தான் என்ன கஷ்டம் உண்டாவிடும் என்பது நமக்குப் புரியவில்லை. இதுவரையில் பெருகிக் கொண்டு வந்த மானிட வர்க்கத்தால் ஏற்பட்ட நன்மைதான் என்ன என்பதும் நமக்குத் தெரியவில்லை."(1942) (பெரியார் , பெண் ஏன் அடிமையானாள், ப,100) என்ற பெரியாரின் கருத்து மிக முக்கியமாகக் கவனிக்கத் தக்கது.

தேவதத்தா கூறும் குடும்பப் பாதுகாப்புடன் கூடிய ஆண் பெண் சரிசம வாழ்க்கைமுறை தற்காலத் தமிழ்ப்பெண்களுக்கு ஏற்றதாகத் (சபிக்கப்பட்டதாகத்) தோன்றினாலும் அது சென்றடையக் கூடிய பாதை பெரியார் கூறிய தனித்த பாதைதான்., அந்தப் பாதையை அடைதற்கு நாட்கள், வாரங்கள், மாதங்கள், ஆண்டுகள், நூற்றாண்டுகள் ஆகலாம். இதன் பாதிப்பை இதன் இழப்பை இதன் உயர்வை, இதன் ஏற்றத்தை எதிர்காலப் பெண்ணியம் தக்கவகையில் எதிர்கொள்ளும் என்பதில் மட்டும் ஐயமில்லை.

பெரியார் கூறிய அளவிலான நிலைப்பாட்டைத் தமிழ்ப் பெண்ணியவாதிகள் செயலாக்குவதில், பரப்புவதில், கடைப்பிடிப்பதில் உள்ள கால இடைவெளிதான் இந்த எதிர்கால நிகழ்வின் வரவை விரைவுபடுத்தும் அல்லது தாமதப்படுத்தும்.

பெண்மொழி

பெண்களுக்கான மொழி என்பது அடுத்து நிகழ்காலத்தில் இனிது ஊன்றப் பெற்றிருக்கும் சத்தான விதை ஆகும். நிகழ்காலப் போக்கில் தமிழில் பெண்மொழிக்கான உள்ளடக்கம் உருவாக்கப்பட்டுவிட்டது. ஆனால் பெண் எழுத்து, பெண் வார்த்தை, பெண் தொடர் உருவாகவில்லை. அதாவது ஆண் சொற்களில் பெண்கள் தம் உள்ளத்தை எழுதி வருகின்றனர். ஆண்சொல் பெண்உள்ளம் என்ற நிலைக்கு ஒரு பெண்கவிதையைச் சோதனை செய்துபார்த்தால் உண்மை தெரியவரும்.

அடங்காப் பிடாரி யென
ஆசைதீரக் கத்தட்டும்
அதற்குமேல் என்னவுண்டோ

எல்லாமே சொல்லட்டும்
நான் நிஜமாகத்தானிருப்பேன் **(இளம்பிறை, மௌனக் கூடு)**
(மேற்கோள், முனைவர் தேவதத்தா, மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் – பெண், ப 74)

என்ற இந்த ஆறுவரிக் கவிதையில் முதல்வரியில் இடம்பெறும் 'அடங்காப்பிடாரி.' என்ற பட்டப்பெயர் ஏதோ ஒரு காரணத்திற்காக இக்கவிதையில் குறிப்பிடப்படும் பெண்ணுக்கு ஆணுலகத்தால் தரப்பட்ட பட்டப்பெயராக் விளங்குகிறது. எனவே அது பெண்மொழி அல்ல ஆண்சார் மொழி என்பது தெளிவு. அதனை விட்டுவிடலாம்.

அடுத்தவரியில் இடம்பெறும் 'ஆசைதீரக் கத்தட்டும்' என்ற அடியில் உள்ள கத்தட்டும் என்ற வினைச்சொல் பிறவினையாகும். பிற என்பதாலேயே அதுவும் ஆணைக் குறிக்கும் மொழியாகிவிடுகிறது. "அதற்குமேல் என்னவுண்டோ எல்லாமே சொல்லட்டும் " என்பதுவும் மேல் உள்ள அடி போன்றதே. அதனால் அதுவும் ஆணைக் குறிக்கும் மொழி என்பது தெளிவு. இவற்றையும் விட்டுவிடலாம்.

எஞ்சியுள்ள " நான் நிஜமாகத்தான் இருப்பேன் " என்ற வரியைச் சற்று ஆராய்வோம். 'நான்' என்பதும் 'நிஜமாகத்தானிருப்பேன்' என்பதும் தன்மை இடம் சார்ந்தவை. தன்மையிடத்தில் அஃறிணை உயிர்கள் பேசாது என்பதால் அவற்றிற்கு இலக்கண ஆசிரியர்கள் தன்மை முடிவுகளைத் தரவில்லை. உயர்திணைக்கு மட்டுமே 'என், ஏன்' (ஒருமை) என்ற விகுதிகளை இலக்கண ஆசிரியர்கள் தந்துள்ளனர். அஃறிணைகள் தன்னைப் பற்றித் தானே சொல்லும் இயல்பிலாதன. தற்காலத்தில் கற்பனைப் பாத்திரங்களாக வரும் அஃறிணைகள் பேசுகின்றன என்பது காலத்தின் வளர்ச்சி.

மற்றொரு இலக்கண நெறி ஆண்பால் இறுதிவிகுதி 'ன்' என்று கூறுகிறது. அவ்வகையில் 'என், 'ஏன்' ஆகியவற்றில் உள்ள. 'ன்' ஈற்றை ஆண்பால் விகுதி என்பதாகக் கணக்கில் கொண்டால் பெண்களும் அஃறிணை போல விகுதியற்றவர்களாகிவிடுவார்கள். இந்நோக்கில் பார்க்கும்போது 'நான்' என்ற சொல்லிலும் 'நிஜமாகத்தானிருப்பேன் ' என்ற சொல்லிலும் பெண்மொழிக் கூறு இல்லை என்பது தெளிவாகிவிடும்.

ஆனால் பாடலின் பொருண்மை பெண்ணுக்கானது. எனவேதான் பெண்மொழியின் பொருண்மை உருவாகிவிட்டது. அதன் உள்ளடக்கம் தமிழில் தயாராகிவிட்டது. எழுத்துக் குறியீடோ அல்லது சொல்லோ அல்லது தொடரோ உருவாகவில்லை என்ற முடிவிற்கு வரவேண்டியுள்ளது. இச்சூழலில் பெண் வார்த்தைகள் இல்லாமல் பெண்ணுக்கான எழுத்துக் குறியீடுகள் இல்லாமல் எவ்வாறு உண்மையான பெண்ணிலக்கியம் தோன்றிட முடியும்.

இந்தக் கேள்வியின் பின்னணியில் ஆண் மொழிகளை விட்டு வேறு ஒரு புதுமொழியை உருவாக்கப் பெண்ணுலகம் முயற்சி செய்தாலும் தமிழ்ப் பெண்ணியம் அல்லது தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பெண்கள் தமிழ் மொழியைத் தவிர்த்து வேறு ஒரு புதுமொழியில் எழுதத் தொடங்குவதை தமிழ்ப் பெண்ணியம் என்று சொல்ல முடியாது. இவ்வகையில் சிக்கல் எழுகிறது.

எனவே தம் மொழியான தமிழில் சில பெண்மொழி அடையாளங்களை அமைத்துக் கொள்ள தமிழ்ப் பெண்ணியவாதிகள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

தமிழோடு கூடிய பெண் எழுத்தில் பெண் சொல்லில் பெண் தொடரில் பெண் உள்ளம் விரிகிறபோது அதைப் பெண் எழுத்தில் பெண் சொல்லில் பெண் தொடரில் உண்மையான பெண் படித்து உணருகிறபோது உண்மைப் பெண்ணிலக்கியம் தோற்றம் பெற்றுவிடும். இந்தப் பெண்மொழிக்கு நூற்றாண்டு அளவு காத்திருக்கத் தேவையில்லை என்பது மட்டும் உறுதி. இந்தப் பாதையை நோக்கிப்போகும் ஒரு மகாராணியின் அலுவலகவழி தற்போது திறக்கப்பட்டுவிட்டது என்பது மட்டும் உறுதி. அந்தவகையில் தற்போது தமிழ்ப் பெண்மொழிப் பண்புகளைத் தமிழ்ப் பெண்ணியவாதிகள் பலர் முன்வைத்துள்ளனர். அவர்கள் கூறும் பெண்மொழித் தன்மைகள் பின்வருமாறு.

1. எந்த நிலையிலும் பெண்ணை ஒரு கவர்ச்சிப் பொருளாகச் சித்திரிப்பதற்கோ உடைமைப் பொருளாகவும் போகப் பொருளாகவும் சிறுமைப் படுத்துவதற்கோ துணியாததுடன், அவ்வாறான போக்குகளுக்கு எதிரான கண்டனத்தை எழுப்பவும் தயங்காததே உண்மையான பெண்ணிய எழுத்தின் இயல்பு(2001) (எம். ஏ. சுசீலா, பெண் இலக்கியம், வாசிப்பு,ப. 47)

2. எதிர்கால மொழி பெண்மொழிக்குச் சிறப்பிடம் நல்கும் என்று எண்ணுதல் பெருமைதான். பெண் உடலை எழுதும் நிலையில் இன்றைய பெண் எழுத்துக்களின் வெளிப்பாடு காலம் காலமாக ஒடுக்கப்பட்டிருக்கும் பெண் மனங்களின் கொந்தளிப்பு என்பதையும் உணர முடியும்.(2005) (முனைவர் செ. சாரதாம்பாள், பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும்)

3. தன் இருப்பை தன் சுயத்தை மீட்டெடுத்த பெண் இப்போது தனக்கான தடைச் சுவர்களைத் துணிச்சலோடு தாண்டி முன்னேறிச் செல்கிறாள் நதியாக. நதி எக்காலத்தும் பின்னோக்கிச் செல்வதில்லை. இனி அவள் பொங்கிப் பாய்வதில் அவளை அமுத்தி வைத்த அத்தனை கருத்தாக்கங்களையும் சுனாமி அலையாய் அடியோடு அழித்து தனக்கான ஒரு புதிய வெளியைக் காணும்போது பெண்ணுக்கான இயல்பான மொழி உருவாகும். (2005) (முனைவர் தேவதத்தா, மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் பெண், ப 95)

4. பாலியல் உறவுகளை அவள் பேசுகிறபோதும் அவை அசிங்கமாகவோ ஆபாசமாகவோ இல்லாமல் புனிதம் என்ற புனைவும் கடந்து நிற்கும்போது உண்டாகும் மொழி பெண்மொழி (மேலது ப, 9596)

5. அவள் உடலையும் உடலைச் சார்ந்த வலிகளைப் பற்றியும் சுதந்திரமாக வெளிப்படுத்தும்போது அவளுக்கான மொழி வீரியத்தோடு பிறக்கிறது (மேலது)

இவை பெண்மொழிக்கான சில வரையறைகள். இவை மொழியின் பொருண்மை அல்லது பாடுபொருள் குறித்த வரையறைகளே. பெண் எழுத்து என்பதற்கான தனிக் குறியீடு எதுவும் இல்லாத நிலையில் பெண் எழுத்தை வெறும் பொருண்மை கொண்டு கணக்கிடுவது சரியானது ஆகாது. அளபெடைக்குத் தனித்த வரிவடிவத்தைத் தந்த இலக்கண ஆசிரியர்கள் போல தனித்த குறியீட்டு பெண் எழுத்து தோன்றவேண்டும். அதற்கான முயற்சிகளை எதிர்காலத்தில் தமிழ்ப் பெண்ணியவாதிகள் தொடங்கவேண்டும். எவ்வாறு அதனைத் தொடங்கலாம். சில கற்பனைகள்

1. தலைப்பெழுத்தைப் போட்டுப் பெயரை எழுதுவதுபோல பெண் என்பதில் உள்ள ஒற்றைக் கொம்பை எல்லாச் சொற்களிலும் பயன்படுத்தி புதிய தமிழ்ப் பெண் மொழியை

ஆக்கலாமா? (எ.டு. (ெ)பண் (ெ)என்பவள் (ெ)ஆணின் (ெ) எதிர்பால் (ெ) இனம் (ெ)மட்டுமல்ல ....)

இதன் சிறப்பு இவ்வகை எழுத்து பெண்களின் உடலமைப்பில் உள்ள கொங்கைக் குறியீட்டு அமைப்பில் அமைந்துள்ளது. இன்னும் இதனைச் சற்று மாற்றி இரட்டைக் கொம்பு வடிவைக் (ே) கவிழ்த்து படுக்கை வாட்டில் அமைத்தால் மேலும் சிறப்பாக இருக்கும்.

2. ஆண் அதிகாரத்திற்கு எதிரான தலைகீழ் மாற்றம் பெண்களுக்குத் தேவை என்பதால் இடமிருந்து வலம் என்ற தமிழ் எழுத்துப் பழக்க முறையை மாற்றி வலமிருந்து இடம் என்ற எழுத்துமுறையைப் பெண்களுக்கான எழுத்துமுறையாக தமிழில் ஆக்கலமா? (எ.டு) ..,லல்மடுட்ம ம்னஇ ல்ாப ர்திஎ ன்ணிஆ ள்வபன்எ ண்பெ (பெண் என்பவள் ஆணின் எதிர் பால் இனம் மட்டுமல்ல)

3. பழக்கத்தில் உள்ள தமிழ்ச் சொற்களில் ஆண்வயப்பட்ட சொற்களை நீக்கிவிட்டுப் புதிய பொருள் கொண்ட சொற்களைப் பெற புதுவகைப் பெண் மொழித் தமிழ் அகராதிகளை உருவாக்கியும் இதனை நடைமுறையாக்கலாம்.

'What is women?' என்பது இரண்டாம் பாலினம் என்ற (சைமன் டி பாவியர் எழுதியது) புத்தகத்தில் கேட்கப்பட்ட முக்கியமான கேள்வி. இதற்குத் தமிழில் பதிலாகத் திருவள்ளுவர் தரும் தற்காத்து... என்ற குறளின் விளக்கத்தை வைக்க இயலுமா? அது நிறைவாக இருக்காது. எனவே பெண் என்பதற்குப் புதிய பொருள் சொல்லவேண்டிய கட்டாயம் தமிழ்ப் பெண்ணியவாதிகளுக்கு உள்ளது. அவ்வகையில் புதிய அகராதிகளை ஏற்படுத்த வேண்டும். இதற்கு எந்த ஆண்மைய நிறுவனமும் பணஉதவி செய்யாது. இதனை உருவாக்கப் பெண்களின் முயற்சி எண்ணிடலங்காத அளவில் தேவை.

4, பெண்களின் வாய் வழி இலக்கியமான தாலாட்டு ஒப்பாரி ஆகியவற்றில் உண்மைப் பெண்ணிலக்கியம் புதைந்து கிடக்கிறது. அவற்றில் பயன்படுத்தப்படும் பெண் மொழிகளைக் கொண்டு புதிய தமிழ்ப் பெண் மொழியை உருவாக்கிக் கொள்ளலாம்.

இதற்கு ஒரு காட்டு மட்டும் தரப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டத் தாலாட்டுப் பாடல்களை ஆராய்ந்த போ.

சத்தியமூர்த்தி என்பவர் தன் முனைவர் பட்ட ஆய்வேட்டில் பல தாலாட்டுப் பாடல்களைப் பதியவைத்துள்ளார். அதில் பின்வரும் ஒரு பாடல் (49)அமைந்துள்ளது.

"ரேரேரே ஆய்
எங் கண்ணே
ராரிராரி ராராரோ
சீரான கண்ணுக்குட்டி
எங் கண்ணே
சீக்கிரமாய்க் கண்ணுறங்கு"

என்ற தாலாட்டில் 'ரா' என்ற எழுத்து பயன்படுத்தப் பட்டுள்ளது. இலக்கண முறைப்படி 'ரா' என்ற எழுத்து சொல்லுக்கு முதலில் வராது. ஆனால் தாலாட்டுப் பாடல்களில் அந்த எழுத்தே முன்னிலை படுத்தப்படும். ராராட்டு என்றே தாலாட்டு இன்னமும் வழங்கப்படுகிறது. இதிலிருந்து தொடங்கினால் பெண் மொழி உதயமாகும்.

இவ்வகையில் சிந்தித்தால் பல புதிய முயற்சிகள் பெண்மொழி குறித்துக் கிடைக்கும். தற்போது பெண்மொழியில் ஏற்பட்டுள்ள தேக்கநிலை குறையும்.

இக்கட்டுரையின் வழி எதிர்காலப் பெண்ணியத்திற்கான இரு கருத்துக்கள் மட்டும் சுட்டிக்காட்டப்பட்டன. இவை தவிர இன்னமும் வளர வேண்டிய கிளைக்க வேண்டிய துறைகள், கேள்விகள், ஆய்வுகள் பல உள்ளன. அவற்றில் மிகத் தேவையான இந்த இரண்டு மட்டும் இக்கட்டுரையில் விவாதிக்கப் பட்டுள்ளன. மற்றவற்றைச் சிந்திக்கும் காலமும் நேரமும் இடமும் வளர்ந்து கொண்டே உள்ளது என்பது தெளிவு.

முடிவுகள்

எதிர்காலத் தமிழ்ப் பெண்ணியம் பல சவால்களையும், பல கேள்விகளையும் சந்திக்க வேண்டிய சூழலில் உள்ளது. அவற்றில் மிக முக்கியமான இரண்டு கூறுகள் உள்ளன. அவற்றில் முதலானது தமிழ்ப் பெண்களுக்கான வாழ்க்கைமுறை. தமிழ்ப் பெண்ணியவாதிகள் தமிழகப் பெண்களுக்கு முன்வைக்கும் வாழ்க்கை முறை யாது என்பதில் தொடங்கும் இச்சிக்கல் தற்போது தீவிரம் அடையாவிட்டாலும் எதிர்காலத்தில் குடும்பக் கட்டமைப்பை உடைத்து மகப்பேற்றைத் தவிர்த்து

வாழும் இயல்புடையதாக இருக்கும் என்பதாக நிறைவு பெறுகிறது.

அடுத்ததாக பெண்ணுக்கான மொழி என்ன என்பதைப் பற்றிய சிந்தனை எதிர்காலத்தில் நிறைவு பெறவேண்டிய ஒன்றாக உள்ளது. தமிழ்ப் பெண்ணிய மொழி என்பது உள்ளடக்க அளவில் உருவாகத் தொடங்கி விட்டாலும் அது மொழி என்ற அளவில் தமிழ் மொழி தழுவிய தனித்த எழுத்துக் குறியீடாக உருவாகவில்லை என்பது தெளிவு. ஆண் சொல் பெண்உள்ளம் என்ற நிலை மாறி பெண் சொல் பெண்உள்ளம் என்பதாக எதிர்காலத்தில் அமையவேண்டும். இதற்குத் தக்க வழி முறைகளைப் பெண்ணியவாதிகள் கண்டறிந்து செயல்பட வேண்டும்.

16

திருவருட்பயன்-பெண்ணிய வாசிப்பு

தமிழரின் தத்துவக்கொடைகளுள் முதன்மை வாய்ந்தது சைவசித்தாந்தம் ஆகும். இலக்கியம் தோன்றியபின் இலக்கணம் வகுத்த மரபைப்போல தோத்திர நூல்களான திருமுறைகளுக்குப்பின், சாத்திர நூல்களான சித்தாந்த நூல்கள் தோற்றம் பெற்றன. திருமுறைகளில் முதன்மை பெறும் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரைப்போல மெய்கண்டார், அருள்நந்தி சிவம், மறைஞான சம்பந்தசிவம், உமாபதி சிவம் ஆகிய நால்வர் புறச்சந்தான ஆச்சாரியர்கள் எனப் போற்றப் பெறுகின்றனர். இவர்கள் குருபரம்பரையினர் ஆவர். மெய்க்குருவின் துணையுடன், பதியைப் பசு அடையும் நிலையே முக்தி என்பதால் குருபரம்பரையினர் தத்துவ உலகில் இன்றியமையாதவராகின்றனர்.

உமாபதி சிவம்-சித்தாந்த சாத்திரங்களில் செம்பாதிக்கு மேல் ஆக்கியவர் ஆவர். இவரது திருவருட்பயன் குறள் வெண்பாக்களால் ஆனது; பத்து அதிகாரங்களைக் கொண்டது. ஒரு அதிகாரத்திற்கு பத்துக் குறட்பாக்கள் வீதம் நூறு குறட்பாக்கள் இந்நூலுள் உள்ளன. திருக்குறளின் அமைப்பையும், சொற்செறிவினையும் இந்நூல் பெற்றுள்ளது. இந்நூல் பதி, பசு பாசம் ஆகியவற்றின் இயல்பைத் தெளிவாகத் தருகின்றது.

பசு என்பது உயிர்-இதன் இயல்பை இந்நூல்,
சத்து அசத்தைச் சாராது அசத்து அறியாது அங்கண்இவை
உய்த்தல் சதசத்தாம் உயிர் (17)

என்று தத்துவமாக விளக்குகிறது. சத்து என்பது நிலையான பொருள். இறைவனே நிலையான பொருள். அசத்து என்பது உயிர் தவிர்ந்த உலகப் பொருள்கள். அவை நிலையில்லாதவை. சத்தான இறைவனோடும், அசத்தான உலகப்பொருள்களோடும் உயிர் தொடர்புடையது ஆதலின் அதனை சதசத்து என்று தத்துவ உலகில் அழைப்பர்.

உயிருள் பிரிப்பில்லை
பேதமில்லை வகையில்லை
எனவே எல்லா உயிரும் ஒன்றெனவே
நிலையெனவே கொள்ளுகின்றது சித்தாந்தம்.
அவன் அவள் அது எனும் அவை மூவினனமையின்
தோற்றிய திதியே ஒடுங்கிய மலத்து உளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர் **(நூற்பா1 சிவஞானபோதம்)**

அவன் அவள் அது என்ற முப்பகுப்புடையது உலகம் என்ற மேற்காணும் சிவஞானபோத நூற்பாவின்படி, உலகப் பொருள்களில் சதசத்தான அவனும் அவளும், அசத்தான அதுவும் சேர்ந்தது உலகம் அமைந்துள்ளது. சதசத்தான ஆணும், பெண்ணும் உடலளவில் பிரிந்திருப்பினும் அவை உயிரால் ஒன்றே என்பது சித்தாந்த அடிப்படைக்கருத்தாகும்.

உயிரால் ஒன்றுபடும் ஆண், பெண் இருபாலரும் சித்தாந்த வழியில் நன்றாய் முக்திபெற முடியும் என்பது சிந்தாந்தத் தெளிவு. இவ்வழியில் ஆணுக்கு ஈடான சரிசமநிலையை, ஏற்றத்தாழ்வற்ற நிலையைப் பெண்ணும் பெற இயலும் என்ற தத்துவத் தெளிவு பெண்ணியவாதத்தால் பாராட்டப்பெறக் கூடியதே.

இருப்பினும் திருவருட்பயனில் இடம்பெறும் சிலகருத்துகள் பெண்களுக்கு எதிரானதாக இருப்பதைக் கற்கையில் உணர முடிகின்றது. அவற்றைப் பெண்ணியப் பார்வையில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. தெய்வப்பனுவலாகவும், விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதாகவும் திருவருட்பயனைக் கருதுவோர்க்கு இக்கட்டுரை எவ்வித மறுப்பையும், இடையூற்றையும் ஏற்படுத்தாது என்பதை இங்குத் தெளிவுபடுத்திக் கொள்வது நல்லது.

பெண்ணிய வாசிப்பின்போது மிகவும் விமர்சனத்திற்கு உள்ளாகும் ஒரு குறட்பா பின்வருவதாகும்.

பலரைப் புணர்ந்தும் இருள் பாவைக்கு உண்டு என்றும்
கணவற்கும் தோன்றாத கற்பு [25]

என்ற குறட்பா இருள் மலநிலையை உணர்த்தவந்ததாகும். இருள் மலம் எனப்படுவது ஆணவமலமாகும். இதுவே மூலமலம் ஆகும். இவ்வாணவம் உயிரில் படிந்து ஆண்டவனை அடைய விடாது தடுக்கின்றது. இது என்றைக்கு உயிர் தோன்றியதோ அன்றைக்கே உடன் தோன்றியதாகும். அதனால் இதனை

சகசமலம் என்பர் தத்துவ உலகினர். உயிர்கள் பல,; ஆணவமலம் ஒன்றே. உயிர்கள் பல; ஆண்டவன் ஒருவனே என்ற இவ்விளக்கங்கள் ஆணவமலத்தைத் தெளிவுபடுத்தும்.

மேற்குறட்பா பலவழிகளில் பொருள் உணரத்தக்கது. அதன் நேர்ப்பொருள் பின்வருமாறு;

இல்லறத்தில் உள்ள பெண் ஒருத்தி, தன் கணவன் இல்லாத பொழுதுகளில் பிற ஆடவருடன் கூடி இன்பம் பெறும் இயல்பினள். அவள் தன் கணவன் வந்த காலத்து அவனுக்கே அன்புடையவள் போல, கற்பு காப்பாள். அத்தகைய இயல்புடையது இருள்மலம். இதில் பயின்று வரும் உவமையைப் பின்வருமாறு விரிக்கலாம்.

இருள்பாவை
தெரிந்தபொருள் ஆடவர் பலருடன் கூடும் பாவை
தெரியாத பொருள் பல உயிருடன் உள்ள இருள்
(ஆணவமலம்)

பொதுத்தன்மை-பலருடன் கூடுதல்.

இதன் மூலம் பின்வரும் கேள்விகள் எழுகின்றன.

1) கற்புடைய பெண் யார்? அவளின் இயல்புகள் என்ன?

2) போலிக் கற்புடைய பெண்யார்? அவளின் இயல்புகள் என்ன?

3) கற்புடைய பெண் போலக் கணவனிடம் நடந்துகொள்வது என்பது பெண்ணின் இயல்பா?

4) பலரைக் கூடுதல் பெண்ணுக்கு இயல்பானதா?

5) மணமின்றிப் பலரைக்கூடும் பொருட்பெண், கற்புடைய பெண் இவர்களுக்குள் வேறுபாடு இல்லையா?

6) ஆணவத்திற்கு உவமையாகப் பெண் கூறப்படுவதால் அவளே ஆணவத்தின் வடிவமா?

7) ஆன்மா ஆண்மயமானதா?

8) கணவன் என்பவன் கடவுளுடன் உவமை வாயிலாக ஒப்ப எண்ணப்படுகிறானா?

9) பெண் என்பவள் கடவுளுக்கு உண்மையான ஆன்மாவாக அமைய இயலாதா?

போன்ற பல கேள்விகளுக்கு மேற்கண்டகுறள் இடமளிக்கிறது.

இருளின் இயல்பைக் கூறவந்த திருவருட்பயனின் ஆசிரியர், உவமை ஒன்றைக் கூறியதன் வாயிலாக சைவ சித்தாந்தத் தத்துவத்தை ஆண்அதிகாரப்பட்டதாகக் கண்டுள்ளார் என்பது மேற்செய்திகள் மூலம் தெளிவாகின்றது. இது நிற்க.

திருமுறைகளிலும், திவ்யபிரபந்தங்களிலும் பெண் படைப்பாளர்களைக் காணும் பொழுது சந்தானாச்சாரியர்களுள் பெண்பாலர் இடம்பெறாததும் இங்குக் கவனிக்கத்தக்கது. மேலும் குருவின் இயல்பைக் கூறும் அருளுருநிலையிலும் ஆண் பால் தன்மைகளே சுட்டப்பெற்றிருப்பது பெண்பாலர் ஞானாசிரியாக மாறஇயலது என்ற கருத்தைத் தருவதாக உளது.

கோ(41) அவனை (46), பெய்ப்பாவகன் (47), பேர் அறிவான்(49) இவன் (50) ஞானாசிரியரின் தன்மைக்கு உணர்த்தப்பெற்ற இவ்வாண்பால் பெயர்கள் ஞானாசிரியராக ஆண்பாலரே வரஇயலும் என்பதைக் கூறாமல் கூறுகின்றன. மேலும் அணைந்தோர் தன்மை என்ற நிறைவு இயலிலும் ஆண்பால் பெயர்களே பயனாகியுள்ளன. அணைந்தோர் தன்மை என்பது அடியார் தன்மையைக் குறிப்பதாகும்.

எனவே ஞானாசிரியனாகவும் அமையமுடியாமல், மலமற்ற உயிராகவும் அமைய முடியாமல், அணைந்தோருள் ஒருவராகவும் நிற்கமுடியாமல் பெண் தவிர்க்கப் பெற்றுள்ளமை மேற்கண்டதன் மூலம் உறுதியாகின்றது.

ஆண்பெண் இன்பம்

ஆண் இணைவாலே பெண் இன்பம் பெற இயலும் என்ற மரபு அடிப்படையிலான கருத்து மற்றொரு குறளில் உவமையாக்கப் பெற்றுள்ளது.

இருவர் மடந்தையருக்கு என் பயன் இன்பு உண்டாம்
ஒருவன் ஒருத்தி உறின் (72)

என்ற இக்குறளில் ஒருவனும் ஒருத்தியும் காணும் இன்பமே இன்பம்; இருபெண்கள் இணைவால் இன்பம் பெற இயலாது; இதுபோல உயிர் என்னும் பெண் ஆண்டவன் என்னும் ஆணுடன் கலந்தால் மட்டுமே இன்பம் பெற இயலும் என்ற பொருள் விளக்கப்படுகிறது.

இங்கு ஆண் ஆண்டவனாகவும் பெண் உயிராகவும் ஏற்ற இறக்கத்துடன் காட்டப்பெற்று பெண் இரண்டாம் நிலையில் வைக்கப்பெற்றுள்ளாள். மேலும் ஆன்மாவும் ஆன்மாவும் இணைந்து

இன்பம் பெற இயலாது என்பது தத்துவ அடிப்படையில் சரியானாலும், பெண்ணும் பெண்ணும் இணைந்தால் இன்பம் காண இயலாது என்பது தற்கால நிலையில் சரியாகாது. பெண்ணும் பெண்ணும் இணைந்து இன்பம் பெறலாம்,; அதுவே பெண்ணிற்கு முழு உணர்வையும், மதிப்பையும் அளிப்பது என்பது தற்காலப் பெண்ணியலார் கருத்து. இவ்வடிப்படையில் காணுகையில் பெண்ணை ஆன்மாவாகவும்; ஆணை ஆண்டவனாகவும் உவமையுள் கலந்திருப்பது தேவையற்றதாகின்றது.

எனவே ஆண்படைப்பாளர்கள் இலக்கியம், இலக்கணம், தத்துவம் என எது செய்யப்புகினும் தமக்குச் சார்பாகவே படைப்புக்களை ஆக்கிக்கொண்டுள்ளனர்; பெண்களுக்கு எதிராகவே இருந்துள்ளனர் என்பது இதன்மூலம் மேலும் வலுப்பெறுகின்றது.

17

பாரதிகாலப் பெண்ணியம்

இந்திய விடுதலை என்னும் காலகட்டம் ஒரு குறிப்பிடத்தகுந்த காலகட்டம் ஆகும். ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகள் அந்நியர் ஆட்சி நடைபெற்றுவந்த நிலையில் அதனை முற்றிலும் மறுத்து இந்தியர்களே இந்தியர்களை ஆளும் சூழலில் இந்தக் காலகட்டம் குறிப்பிடத் தகுந்ததாகின்றது. புதிய இந்தியாவின் விடியல் என்பதாக இந்த விடுதலை அமைந்தது.

புதிய இந்தியாவை நிர்மாணிப்பதில் பலர் பங்கு கொண்டனர். குறிப்பாக இதழாசிரியர்கள், அரசியல் தலைவர்கள், இலக்கியவாதிகள் என்ற பல தரப்பினர் விடுதலையை எண்ணித் தம் செயல்களை ஆற்றினர். புதிய இந்தியாவை அவரவர்கள் அவரவர்கள் கோணத்தில் வடிவமைக்க முயன்றனர்.

பாரதியின் வாழ்நாள் காலம் என்பது விடுதலைக்கு முந்தைய நிலையிலேயே முடிவு பெற்று விடுகிறது. பாரதி இக்காலகட்டத்தில் இதழ் ஆசிரியராக, சமுதாயக் கவிஞராக, அரசியல்வாதியாக விளங்கினார். வரப்போகிற விடுதலைக்கு முன்னறிவிப்புகளை பாரதியார் தம் எழுத்துகளின் மூலம் வெளியிட்டார். வரப்போகிற வலிமையான இந்தியாவை வரவேற்றார். சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பே சுதந்திரப் பள்ளு பாடினார். பாரதி நோக்கில் ஓர் ஒப்பில்லாத சமுதாயமாக விடுதலை பெற்ற இந்திய சமுதாயம் விளங்கியது. எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையை இந்தியா உலகிற்கு அளிக்கும் என்ற உன்னதத் தன்மையைப் பாரதியார் தம் விடுதலைக் கனவாகக் கண்டார்.

அவரது கவிதைகளில் உணர்ச்சிகள் மேலோங்கி இருந்தன. இதழ்ப்பணிகளில் உண்மைகளை மக்களுக்குச் சொல்லும் ஆர்வம் இருந்தது. அரசியலில் அவர் தீவிரவாதிகள் பக்கம் இருந்தார்.

1882 முதல் 1921 வரை பாரதியின் காலம் நிகழ்ந்துள்ளது. இக்காலகட்டத்தில் தமிழகத்தில் பெண்கள் முன்னேற்றம்

முகிழ்க்கத் தொடங்கியது. வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கும் விந்தை மனிதர் தலைகவிழத்தொடங்கினர். அடிமை நிலையில் இருந்த பெண்கள் வெளிவரத் தொடங்கினர்." இந்து ஸ்திரீ ஏறக்குறைய அடிமை நிலையில் இருக்கிறாள். நம்முடைய வீடுகளில் அறைக்குள் அடைத்து வைப்பது கிடையாது. அறைக்குள்ளே இருந்தால்தான் என்ன குடி கெட்டுப் போச்சுது? அடிமையைத் தண்ணீர் கொண்டுவரத் தெருவில் விட்டால்தான் என்ன? அதுவும் கூடாதென்று கதவைப் பூட்டிக் கைதியாக வைத்திருந்தால்தான் என்ன?. . . நம்முடைய ஸ்திரீகள் அடிமைகள். அதில் சந்தேகம் இல்லை." (பெ. தூரன்,பாரதி தமிழ் வசனத் திரட்டு, ப. 79.)

கொடியர் நம்மை அடிமைகள் என்றே
கொண்டு தாமுதல் என்றனர் அன்றே
அடியொடந்த வழக்கத்தைக் கொன்றே
அறிவு யாவும் பயிற்சியில் வென்றே
கடமை செய்வீர். நம் தேசத்து வீரக்
காரிகைக் கணத்தீர் துணிவுற்றே

(பாரதியார் கவிதைகள்,ப. 415.)

என்ற பாரதியின் கருத்துகள் இந்தியாவில் விடுதலைக்குச் சற்று முந்தைய காலப் பெண்களின் அடிமை நிலையைத் தெற்றென விளக்குவதாகும்.

பெண்களை ஒரு மனித உயிரினமாகக் கூடப் பாரதியாரின் காலத்தில் கருதச் சமூகம் இடம் தரவில்லை என்பது இன்னும் கொடுமையான செய்தியாகும். ஸ்தீரிகளுக்கு ஜீவன் உண்டு. மனம் உண்டு. புத்தியுண்டு. ஐந்து புலன்கள் உண்டு. அவர்கள் செத்த யந்திரங்கள் அல்லர். உயிருள்ள செடி கொடிகளைப் போலவுமல்லர். சாதாரணமாக ஆண் மாதிரியாகவே தான். புறவுறுப்புகளில் மாறுதல். ஆத்மா ஒரே மாதிரி.(பெ. தூரன்,பாரதி தமிழ் வசனத் திரட்டு,ப. 83.) என்ற பகுதி பெண்களை ஒரு சக மனித உயிரியாக ஏற்கக்கோரும் பகுதியாகும்.

ஆணுக்குச் சமமான உரிமைகளைப் பெண் பெறவிரும்பும் காலகட்டமாகப் பாரதியின் காலகட்டம் இருந்துள்ளது.

கற்பு நிலை என்று சொல்லவந்தார் இரு
கட்சிக்கும் அதனைப் பொதுவில் வைப்போம்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்தி

காட்சி கெடுத்திடலாமோ
பெண்கள் அறிவை வளர்த்தால்-வையம்
பேதைமை அற்றிடும் காணீர்
காதல் ஒருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாதரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி

இந்தப் பகுதிகள் சரிசம நிலை குறித்தமைவன. பெண்களின் கற்புக்கு ஈடாக ஆண்களும் கற்பு நிலையில் சமத் தகுதி பெறவேண்டும் என்பது பெண்ணைக் காட்டி ஆணுக்குச் சொல்லும் சம நிலை பாரதி காலத்தில் வலியுறுத்தப் பெற்றுள்ளது.

அறிவு, இல்லறம் ஆகியவற்றில் ஆண் பெற்றுள்ள மதிப்பு மிக்க நிலைக்கு ஈடான சமநிலையைப் பெண் பெறவேண்டும் என்பது அக்காலத்தில் இருந்த கருத்து ஆகும். அறிவு, மனம், இல்லறம் ஆகியவற்றில் சமநிலை பெறவிரும்பும் பெண் உடலளவில்

ஆணுக்கு அடங்கியே நிற்கவேண்டிய காலகட்டமாக பாரதியின் காலகட்டம் இருந்துள்ளது என்பது இவற்றில் இருந்து பெறப்படுகிற மற்றொரு செய்தியாகும்.

பாரதி கற்பு குறித்துத் தன் உரைநடைப் பகுதிகளில் அதிகமாகச் சிந்தித்துள்ளார். ஸ்திரீகள் பதிவிரதைகளாக இருக்க வேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள். அதிலே கடினம் என்ன வென்றால் ஆண் பிள்ளைகள் யோக்கியர்கள் இல்லை. ஆண் மக்களில் ஒவ்வொருவனும் தன் மனைவி பதிவிரதையாக இருக்க வேண்டு மென்பதில் எத்தனை ஆவலோடு இருக்கிறானோ அத்தனை ஆவல் இதர ஸ்திரீகளின் பதிவிரதத்திலே காட்டுவதில்லை.

ஆண் பிள்ளைகள் தவறினால் ஸ்திரீகள் எப்படிப் பதி விரதைகளாக இருக்க முடியும்? கற்பனைக் கணக்குப் போட்டுப் பார்ப்போம். ஒரு பட்டணத்தில் லட்சம் ஜனங்கள். ஐம்பதினாயிரம் பேர் ஆண்கள், ஐம்பதினாயிரம் பேர் பெண்கள். அதில் நாற்பத்தையாயிரம் ஆண்கள் பர ஸ்திரீகளை இச்சிப்பதாக வைத்துக்கொள்வோம். அதிலிருந்து குறைந்த பட்சம் நாற்பத்தையாயிரம் ஸ்திரீகள் பரபுருஷர்களின் இச்சைக்கிடமாகவேண்டும். இந்தக் கட்டத்தில் இருபதினாயிரம்

புருஷர்கள் தம் இச்சையை ஓரளவு நிறைவேற்றுவதாக வைத்துக்கொள்வோம். எனவே குறைந்த பட்சம் இருபதினாயிரம் ஸ்திரீகள் விபச்சாரிகளாக இருக்கவேண்டியது அவசியமாகிறது(பெ. தூரன்பாரதி தமிழ் வசனத் திரட்டு,ப.94.) என்ற கணக்கு ஆண் விபச்சாரத்தினால் ஏற்படும் பெண்களின் நலமின்மையைச் சுட்டிக்காட்டுவதாகும். அக்காலப் பெண்கள் கேட்ட விடுதலை அல்லது பாரதி விரும்பிய பெண் விடுதலை என்பது ஒழுக்கம் மிக்க விடுதலை என்பதில் ஐயமில்லை. அந்த விடுதலைக்குள் சுதந்திரமான இயக்கம் பெண்களுக்கு ஏற்படவேண்டும் என்ற எண்ணம் அக்காலத்தில் நிலவியது.

அடிமைத் தேசங்களில் கூட ஆண் மக்களில் பெரும்பாலோர் அதாவது ரகஸிய போலீஸ் உபத்திரவத்திற்கு இடம் வைத்துக் கொண்டவர் தவிர மற்றவர்கள் தம் இஷ்டப் படி எந்த ஊருக்கு வேண்டுமானாலும் போகலாம். எங்கும் சஞ்சரிக்கலாம்.தனியாக சஞ்சாரம் பண்ணக் கூடாது என்ற நியதி கிடையாது. ஆனால் பெண் தனியே சஞ்சரிக்க வழியில்லாத தேசங்களும் உள்ளன. அவற்றில் நமது தேசத்தில் பெரும்பகுதி உட்பட்டிருப்பதைப் பற்றி மிகவும் விசனப் படுகிறேன். (மேலது. 94)

பெண்ணின் விடுதலை மிக்க இயக்கத்தேவைபற்றிய விழைவு இதனுள் சுட்டப் பெற்றுள்ளது.

இவற்றில் இருந்து சில முடிவுகளுக்கு வரமுடிகின்றது. பாரதியின் காலகட்டத்தில் அடிமை நிலையில் பெண் இருந்துள்ளாள். அவள் வேண்டிய நேரத்தில் வேண்டிய இடத்திற்குச் செல்ல இயலாதவாளாக வீட்டுக்குள்ளே கட்டுப்பட்டிருந்தாள். அவளுக்குக் கற்பு என்பது மிகப் பெரிய எல்லைக் கோடாக இருந்துள்ளது. அதனை அவள் எக்காலத்திலும் மீற இயலாது. மீறக் கூடாது. ஆனால் ஆண்கள் மீறலாம். தன் பெண்களை மட்டும் மீறவிடாமல் காத்துக்கொள்ளலாம். அறிவிலும், இல்லற நடைமுறைகளிலும் அவள் இரண்டாம் நிலையில் இருந்துள்ளாள் என்பன போன்ற செய்திகள் பாரதிகாலத்துப் பெண்களின் நிலையாக இருந்துள்ளது.

இத்தகைய கட்டுப்பாட்டு நிலையைப் பாரதி கடுமையாக எதிர்த்துக் குரல் கொடுத்துள்ளார். அவரின் குரல் ஆழமாக பதிவைப் பெற்றுள்ளது. கவிதைகளிலும் கட்டுரைகளிலும் விடுதலை மிக்க புதுமைப் பெண்ணை அவர் வரவேற்றுள்ளார்.

இவ்வரவேற்பு முன்னேற்றமற்ற நிலையில் இருந்து முன்னேற்ற மிக்க நிலைக்குப் பெண்களை அழைத்துச் செல்வதாக இருந்தது.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி வையம் தழைக்குமாம்
பூணு நலத் தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய் சிவசக்தியாம்
நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டீரோ

இந்த வரவேற்புப் பாடல் பெண்கள் கைக்கொண்டு நடக்க வேண்டிய கொள்கைகளை எடுத்துரைக்கின்றது.

பெண்களுக்கு விடுதலை கொடுப்பதில் இன்னும் முக்கியமான ஆரம்பப் படிகள் எவையென்றல்

1. பெண்களை ருதுவாகும் முன்பு விவாகம் செய்துகொடுக்கக் கூடாது.
2. அவர்களுக்கு இஷ்டமில்லாத புருஷனை விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தல் கூடாது.
3. விவாகம் செய்துகொண்ட பிறகு அவள் புருஷனை விட்டு நீங்க இடம் கொடுக்கவேண்டும். அதன் பொருட்டு அவளை அவமானப்படுத்தக் கூடாது.
4. பிதுரார்ஜியத்தில் பெண் குழந்தைகளுக்குச் சமபாகம் கொடுக்க வேண்டும்.
5. புருஷன் இறந்தபின்பு ஸ்திரீ மறுபடி விவாகம் செய்து கொள்வதைத் தடுக்கக் கூடாது.
6. விவாகமே இல்லாமல் தனியாக இருந்து வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றால் கௌரவமாக ஜீவிக்க விரும்பும் ஸ்தீரிகள் யதேச்சையான தொழில் செய்து ஜீவிக்க இடம் கொடுக்க வேண்டும்.
7. பெண்கள் கணவனைத் தவிர வேறு புருஷர்களுடன் பேசக் கூடாதென்றும் பழகக் கூடாதென்றும் பயத்தாலும் பொறாமையாலும் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனையை ஒழித்துவிடவேண்டும்.

8. பெண்களுக்கு ஆண்களைப் போலவே உயர்தரக் கல்வியின் எல்லாக் கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும்.

9. தகுதியுடன் அவர்கள் அரசாட்சியில் எவ்வித உத்யோகம் பெறவிரும்பினாலும் அதைச் சட்டம் தடுக்கக் கூடாது.

10. . . . சீக்கிரத்தில் தமிழருக்கு சுயராஜ்யம் கிடைத்தால் அப்போது பெண்களுக்கும் ராஜாங்க உரிமைகளிலே அவசியம் பங்கு கொடுக்க வேண்டும்.(பெ.தூரன்,பாரதி தமிழ் வசனத் திரட்டுபக் 9596)

என்ற பாரதியின் அடிப்படைப் பெண் விடுதலைக் கூறுகளில் பல இன்னமும் எட்டப்படவில்லை அல்லது நடைமுறைக்கு வரவில்லை என்பது மிகப் பெரிய சோகமே.

விடுதலைக்கு முந்தைய இந்தியப் பெண்களின் நிலை, நாடு விடுதலை பெற்றாலும் சமூக விடுதலையை நோக்கிப் பயணிக்கும் பெண்களின் நிலை ஆகியவற்றின் தக்க சான்றுகளாகப் பாரதியின் படைப்புகள் விளங்குகின்றன. பாரதி கால்கட்டம் பெண்விடுதலையின் முக்கியமான தொடக்கக் காலகட்டம் என்பதில் ஐயமில்லை.

பாரதியின் பெண் குறித்த சிந்தனைகள் அவரது படைப்பு மாந்தர்களிடத்திலும் எதிரொலித்துள்ளது. சந்திரிகையின் கதையில் இடம் பெற்றுள்ள பின்வரும் பகுதி அதற்கு ஒரு சான்றாகும்.

விசாலாட்சி, விசாலாட்சி, நான் இரண்டு நிமிடங்களுக்கு மேல் உயிருடன் இருக்கமாட்டேன். என் பிராணன் போகுமுன்னர் உன்னிடம் சில வார்த்தைகள் சொல்லிவிட்டுப் போகிறேன். அதை உன் பிராணன் உள்ளவரை மறந்து போகாதே. முதலாவது நீ விவாகம் செய்துகொள். விதவா விவாகம் செய்யத்தக்கது. ஆண்களும் பெண்களும் ஒருங்கே யமனுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் ஆண்களுக்குப் பெண்கள் அடிமைகளாய் அஞ்சி ஜீவனுள்ளவரை வருந்தி வருந்தி மடிய வேண்டிய அவசியம் இல்லை. ஆதலால் நீ ஆண் மக்கள் எழுதி வைத்திருக்கும் நீசத்தனமான சுய நல சாத்திரத்தைக் கிழித்துக் கரியடுப்பிலே போட்டுவிட்டு தைரியத்துடன் சென்னைப் பட்டணத்துக்குப் போய் அணுகு. கைம்பெண் விவாகத்துக்கு உதவி செய்யும் சபையாரைக் கண்டுபிடித்து

அவர்கள் மூலமாக நல்ல மாப்பிள்ளையைத் தேடி வாழ்க்கைப் படு. இரண்டாவது, நீயுள்ளவரை என் குழந்தையைக் காப்பாற்று. அதற்குச் சந்திரிகை என்று பெயர் வை.(பெ.தூரன்,பாரதி தமிழ் வசனத் திரட்டுபக் 18418 5)என்றாள்.

இப்பகுதியில் பெண்களுக்கான விதவா விவாகம் பற்றிய செய்திகளும் அதனைச் செய்துகொள்ள அக்காலத்தில் இருந்த வாய்ப்புகளும் காட்டப் பெற்றுள்ளன.

இவ்வாறு பாரதியின் காலகட்டம் பெண் விடுதலை முகிழ்த்த கால கட்டமாக விளங்குகிறது. இந்தத் தொடக்கம் இன்னும் பல தூரம் செல்லவேண்டியுள்ளது. ஆனால் தொடக்கத்தைக் கடக்கவே இன்னும் நூற்றாண்டுகள் ஆகலாம் என்ற நிலையில்

தமிழகப் பெண்ணியம் நிற்கிறது என்பது சிந்தனைக்குரிய ஒன்றாகும்.

பாரதிகாலப் பெண்ணியம் என்பது பாரதி வாழ்ந்த காலத்தில் பெண்களுக்கு இருந்த அரசியல், சமூக நிலை குறித்து அமைவதாகும்.

அக்காலகட்டத்தில் பெண்கள் அடிமை நிலையில் இருந்தனர்.

அடிமை நிலையில் இருந்து அவர்கள் மாறக் கல்வியில் ஏற்றம், அறிவினில் ஏற்றம், கற்பினில் திடம், இல்லறத்தில் சமஉரிமை ஆகியன தரப்பெற வேண்டும் என்ற எண்ணம் அக்காலகட்டத்தில் நிலவியது.

" பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்ற பாரதி வரிகள் மெய்ப்பட்டுவிட்டன என்ற போதிலும் பாரதி கண்ட பெண் விடுதலைக் கருத்துகள் முழுமைப்பட நிறைவேறவில்லை என்பது சோகமான உண்மை.

18

சக்ரவர்த்தினி இதழ்க்கட்டுரைகளின் வாயிலாகப் பாரதியின் பெண்ணியச் சிந்தனைகள்

சக்ரவர்த்தினி என்ற திங்களிதழ் பெண்களின் முன்னேற்றம் கருதி 1905 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. இவ்விதழுக்குப் பாரதியார் இதழ்ஆசிரியராகப் பொறுப்பேற்றார். 1904-இல் சுதேசமித்திரனில் துணை ஆசிரியராகப்பணியாற்றி வந்த பாரதியார் கூடுதலாக இப்பொறுப்பினையும் ஏற்றார்.

'சக்கரவர்த்திக்கு' இணையான பெண்பால் பெயராகச் 'சக்ரவர்த்தினி' புதுவதாக அமைகின்றது. பெண்கள் அரசிகளாக இருந்திருக்கிறார்கள், சக்ரவர்த்தினிகளாக அமைந்து பலநாடுகளை ஆளும்வன்மை பெற்ற பெண்கள் இல்லை என்பதனை மனத்துள் கொண்டும், பெண்களை அரசியல் அறிவுபெறச் செய்யும் நோக்கத்துடனும் இவ்விதழ் தொடங்கப்பெற்றது.

ஏறக்குறைய பதின்மூன்று இதழ்களுக்குப் பாரதியார் ஆசிரியர் பொறுப்பு வகித்துள்ளார். அதன்பின் வந்த இதழ்களுக்கு பாரதியார் ஆசிரியராகவும் இல்லை, கட்டுரைகள் எழுதித் தரவுமில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது. இப்பதின்மூன்று இதழ்களில் வெளிவந்த சில கட்டுரைகள் மட்டுமே தற்போது கிடைத்துள்ளன. கிடைக்கப்பெற்ற பதினொரு கட்டுரைப் பகுதிகளையும், பாரதியார் வரைந்த சில குறிப்புகளையும் இணைத்து சீனி. விசுவநாதன் அவர்களும், டி. வி. எஸ். மணி அவர்களும் 'சக்ரவர்த்தினி' கட்டுரைகளாக வானவில் பிரசுரம் வழி (செப்79) வெளியிட்டுள்ளனர். இக்கட்டுரைகள், பாரதியார் கொண்டிருந்த பெண் விடுதலை குறித்த அளவீடுகளை எடுத்துரைப்பனவாக உள்ளன. அவை குறித்து இக்கட்டுரை விளக்குகின்றது.

கட்டுரைகளின் நோக்கமும், மாற்றமும்

பெண்ணிதழாக முதன்மைப்படுத்தப் பெற்ற சக்கரவர்த்தினியில் பெண்கள் முன்னேற்றக் கருத்துக்களை முன்வைத்துப் பாரதியார் கட்டுரைகளை வரைந்தார். எனினும்

முழுக்க முழுக்க பெண் சிந்தனைகளை வெளியிடுவனவாக இக்கட்டுரைகள் அமையவில்லை. தேசத்தலைவர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வுகள், உபதேசங்கள் முதலானவற்றோடு பெண்களுக்குச் சில செய்திகளையும் சொல்வதாக இவ்விதழில் கட்டுரைகள் துவக்கத்தில் அமைந்தன. இதனுள் வந்த கட்டுரைகளைப் பின்வருமாறு பகுக்கலாம். நாட்டுத்தலைவர்கள் குறித்த அறிமுகக்கட்டுரைகள் ஐந்து, பெண்களின் முன்னேற்றம் குறிப்பனவாக நான்கு கட்டுரைகளும் ஒரு சிறுகதையும், உலக அரசியல் நிலை (ஸ்பெயின் குண்டுவெடிப்பு) பேசுவதாக ஒரு கட்டுரை இவையே பாரதியாரின் படைப்பு வகைகளாகும்.

இவ்விதழில் இந்திய நாட்டுத் தலைவர்கள் குறித்த கட்டுரைகள் அதிகமாக எழுதப்பட்டதன் காரணத்தைப் பாரதியார் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார். "பாரததேசத்தின் புண்ணியபுத்திரர்களாகிய மஹான்களின் சரித்திரத்தை அடிக்கடி பெண்களுக்கு எடுத்துக்கூறி, அவர்கள் மனதிலே தத்தம் பிள்ளைகளும், கணவர்களும், சகோதரர்களும் இப்போது வீழ்ந்து கிடக்கும் தாழ்மையிலிருந்து மேற்கூறப்பட்ட மஹா புருஷர்களைப் போலாக வேண்டுமென்ற பேராசையுண்டாகும்படி செய்து, தேசத்தின் பெருமை, மாதர்களின் அறிவையும் ஆவல்களையும் பொறுத்திருக்கின்றதானபடியால், இதன் மூலமாகத் தேச நிலைமையினையே உயர்த்த வேண்டுமென்று அளவில்லாத ஆசை கொண்டிருக்கும் என்னிடம் (ப.69)" என்ற பாரதியாரின் விளக்கம் நாட்டுத்தலைவர்களின் வரலாற்றைப் பெண்கள் அறிந்து கொள்ள வேண்டியதன் தேவையை எடுத்துரைப்பதாக உள்ளது.

இருப்பினும் இம்மாதிரியான ஆண்களின் வீர, தீர செயல்களைத்தரும் இவ்விதழின் போக்கு குறித்து "பத்திரிகையின் வெளிப்புறத்திலே தடித்த எழுத்துகளில் "பெண்களின் அபிவிருத்தியின் பொருட்டாக" என்று எழுதிவிட்டீர்: உள்ளே விவேகாநந்தர், சந்நியாசம் வாங்கிக் கொண்ட விஷயம், புத்தர் ராஜாங்கத்தை விட்டுவிட்டுப் பிச்சைக்குப் புறப்பட்ட விஷயம் இதையெல்லாம் எழுதிக் கொண்டிருந்தால் இதனால் பெண்களுக்கென்ன அபிவிருத்தி ஏற்படும்?(ப. 68)" என்று ஒரு பெண்மணி நேரடியாகப் பாரதியாரிடம் வினா எழுப்பியதும், இதனை மனதில்கொண்டு தீவிர பெண் முன்னேற்றம் குறித்த கட்டுரைகளை, படைப்புக்களைப் பாரதியார் இதற்குப்

பின்னதாக வெளியிட ஆரம்பிக்கின்றார். இதன்பிறகு வெளிவந்த கட்டுரை (மே 1906 இக்குப் பின்) களில் தீவிர பெண் முன்னேற்றக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

இது குறித்துப் பாரதியார் "மேற்படி மாது சொன்னது சரி நான் செய்தது பிழை" என்பதாக எனக்குப்புலப்பட்டது. . . மாதர்களுக்குப் பயன்படுகின்ற நோக்கமிருக்குமாயின் , இந்த நிமிஷமே மாதர்களுக்கு அர்த்தமாகக் கூடிய விஷயங்களை அவர்களுக்கு அர்த்தமாகக் கூடிய நடையிலே எழுத ஆரம்பிக்க வேண்டுமென்று நிச்சயித்து விட்டேன்(ப.70)" என்று எண்ணி மாற்றத்திற்கு உள்ளாகின்றார்.

தன் நடையையும் பெண்கள் வாசிக்கும் நிலைக்கு ஏற்ப, ஒரு நிகழ்ச்சி குறித்து எழுதுவதற்குமுன் விரிவான வருணனைகள் முன்னுரைகள் எழுத வேண்டிய நிலைக்குப் பாரதியார் மாறுகின்றார். குண்டுவெடிப்பு குறித்து எழுத வேண்டிய இடத்தில் அது குறித்த தகவல்களைப் பாரதியார் வழங்குகின்றார்.

"வெடிகுண்டு என்பது உருக்கால் செய்யப்பட்டு உள்ளே பலமான வெடிமருந்தும், சிறுசிறு இரும்புத் துண்டுகளும் உடையதாக இருக்கும். அது ஒரு சாமானில் மோதினவுடனே வெடித்துப்போய் அருகிலே நூற்றுக்கணக்கான ஜனங்கள் இருந்தபோதிலும் ஒரு க்ஷணத்திலே கொன்றுவிடும்(ப.72)" என்று வெடிகுண்டினைப் பெண்களுக்கு அறிமுகம் செய்து அதன் பின் நடந்த நிகழ்வுகளை விவரிக்கும் பாணியாக அவரது நடை பெண்களுக்காக மாற்றம் பெறுகிறது.

இந்நடை குறித்து "எனது மனம் ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றி எழுதத் தொடங்கும்போது ஒரு விதமான பிறழ்ச்சி யடைந்து விடுகிறது. வெகு சாதாரண விஷயங்களைப் பற்றி பிரஸ்தாபித்த போதிலும், உங்களுக்குப் பெரியபெரிய பீடிகைகள் எழுத வேண்டியிருக்கிறது(ப.70)" என்று கருத்துரைக்கிறார் பாரதியார். இதன்மூலமாக சக்கரவர்த்தினி பெண்களுக்கு உரியதான கருத்துக்களைத் தரும் பெண்ணிதழாக மாற்றம் பெறுகின்றது. இம்மாற்றத்திற்கு உள்ளான நிலையைப் பாரதியார் தெரிவித்திருப்பது அவரின் பரந்த மனத்தினைக் காட்டுவதாக உள்ளது.

வாசகர்கள்

சக்கரவர்த்தினிக்கான வாசகர்கள் ஆண்களே என்பது பாரதியாரின் கருத்தாக இருந்திருக்கின்றது. இது "பெண்களுக்குப் பெரும்பாலும் படிப்பே தெரியாது. இந்தப் பத்திரிகையை ஆண்மக்கள் படித்து அதன்மூலமாகப் பெண்களை அபிவிருத்தி செய்விக்க வேண்டும் என்பதே எனது நோக்கம்(ப.70)" என்பதன் மூலம் தெரியவருகிறது.

ஆனால் பெண்களும் இவ்விதழைப் படித்துப் பாரதியாரிடம் கருத்துரைக்க முன்வந்தபோது வர்சகத் தளத்தை மாற்றி அமைத்துக் கொள்கிறார் பாரதியார். "ஆண்மக்கள் எத்தனையோ வருஷங்களாக எத்தனையோ அருமையான நூல்களைப் படித்து வருகிறார்கள். அதிலெல்லாம் நடக்காத விஷயம் நமது பத்திரிகையிலா நடந்து விடப்போகிறது? (ப.70)" என்று வாசமற்ற எண்ணத்தை வரவேற்றுக் கொண்டு பாரதியார் பெண்களுக்குரிய வாசகத்தளத்தை நோக்கி இவ்விதழைக்கொண்டு போக முனைந்துள்ளார். 'பாரதகுமாரிகள்', 'பவுத்த மார்க்கத்திலே பெண்கள் நிலை' என்று பொத்தாம் பொதுவில் எழுதி வந்த கட்டுரைகளை விலக்கி 'மாதர்களின் சுதந்திரங்கள்', 'காதல்' எனக் குறிப்பிடத்தகுந்த பெண்முன்னேற்றக் கருத்துக்கள் அடங்கிய கட்டுரைகளைப் பெண்களின் வாசகத்தளம் கருதி, அவர் எழுதினார். வாசகத்தள மாற்றம், நோக்கங்களில் ஏற்பட்ட மாற்றம் முதலானவற்றை இப்பதின்மூன்று இதழ்களுக்கு உள்ளேயே காண முடிகின்றது என்பது கருதற்குரியது.

"புதுப்பெண்ணிய மறுப்பு"

பாரதியார் இந்திய நாட்டிற்கு ஒப்பிய மரபுசார் பெண் விடுதலையையே ஏற்று முன்மொழிபவராக இக்கட்டுரைகள் வாயிலாக அறியப்பெறுகின்றார். மேலைநாட்டுப் பெண்ணிய எழுச்சி குறித்து அவர் அறிந்திருந்தபோதும் அவற்றை அவர் குறை கண்டுள்ளார். "இங்கிலாந்தில் பார்லிமெண்ட் சபையிலே மெம்பர்களாயிருப்பதற்கும், மெம்பர்கள் தெரிந்தெடுப்பதற்கும் சுதந்திரங்கிடைக்க வேண்டும் என்று இப்போது அத்தேச ஸ்திரீகளிலே ஒரு பகுதியார் பெருங்குழப்பமேற்படுத்திக் கொண்டு வருகிறார்கள். இந்த மாதர்களிலே பெரும்பாலார் விவாகமற்றவர்கள். இவர்கள் செய்யும் புரளிகள் சகிக்க முடியவில்லை. பார்லிமெண்ட் சபையிலே போய் கூச்சலிடுகிறார்கள். பிரதமமந்திரி வீட்டையும் மற்ற முக்கிய மந்திரி வீடுகளையும் போய்ச் சூழ்ந்துகொண்டு

தொந்தரை செய்கிறார்கள். பொதுச்சபைகள் கூடி இங்கிலீஷ் ராஜ தந்திரிகளைக் கண்டமட்டும் திட்டுகிறார்கள். இவர்களின் நிலைமை இப்படியிருக்க, அமெரிக்கா முதலிய தேசங்களில் ஸ்திரீகள் கேட்கும் சுதந்திரங்களுக்கு எல்லையே கிடையாது. தேசபரிபாலனத்திற்கு வேண்டிய முக்கிய உத்தியோகங்களெல்லாம் தமக்கேன் கொடுபடவொண்ணாதென்றும், தாம் ஏன் யுத்தம் செய்யப் போகக் கூடாதென்றும் சில மாதர்கள் அத்தேசங்களிலே முறையிடத் தொடங்கியிருக்கிறார்கள்."..." அந்த மாதர்கள் அழகில்லாமையாலும் வேறு பல காரணங்களாலும் தக்கபடி விவாகப்பேறு முதலியவை அடையாதவர்களாகி, யாரோ சில புருஷர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டு 'சுதந்திரம், சுதந்திரம்' என்று கூறுகிறார்களே யல்லாமல் அவர்கள் மனதுடன் அவ்வாறு சொல்லவில்லை. வீட்டிலிருந்து தனது குழந்தைகள் முன்னுக்கு வரவேண்டுமென்ற ஆவலுடன் , அந்தக் குழந்தைகளுக்குக் கல்வி பயிற்றி, ஆண்மை கற்பித்துக் கிரகத் தலைவியாக மகிழ்ந்திருக்கும் ஸ்திரீ பார்லிமெண்ட் மெம்பர் வேலையின் பொருட்டு ஜாஸ்தியாக சிரமப்பட மாட்டாளல்லவா! (பக்.8283)" என்ற பாரதியாரின் கருத்துப்பதிவு, புதுப்பெண்ணியவாதத்தை ஏற்க எடுத்துரைப்பதாக உள்ளது. எனவே பாரதியார் உலகுதழுவிய பெண்களின் நிலை பற்றி அறிந்திருந்தார் ஆயினும் இந்தியாவிற்கு மரபு சார் பெண்ணியமே ஏற்கத்தக்கதாக இருக்கும் என்ற கருத்துடையவர் என்பது தெளிவாகின்றது.

பெண்கள் ஞான வெளிக்குத் தகுதியுடையவர்கள்

பெண்கள் உடலாலும், மனதாலும் மென்மை உடையவர்கள் என்ற மரபுக் கருத்தினைப் பாரதியார் மறுக்கிறார். "ஞானவொளியை நோக்கி, அதனைப்பின்பற்ற மாதர்கள் துணிந்து விடுவாராயின் அவர்களும் மார்க்கப்பிரவேசம் செய்துவிடலாமென்று 'தருமத்தின் முடிவு'(ப. 50)" என்ற அவரின் கருத்தின் மூலம் பெண்கள் மென்மையானவர்கள் அல்லர், மனதை வெல்லும் திறம் பெற்றவர்கள், அவர்களை முக்திவழிக்குத் தகுதியானவர்கள் அல்ல என ஒதுக்க வேண்டாம் என்ற சிந்தனை பெறப்படுகின்றது. பாரதியார் பெண்களின் உடல், உள்ள உரத்தை பௌத்த மதக்கருத்துக்களை அடியொற்றி பவுத்த மார்க்கத்திலே மாதர்களின் நிலை என்ற கட்டுரையில் எடுத்துரைக்கின்றார். 'பெண்களுக்கு ஞானத்தை வைத்தான் புவிபேணி வளர்த்திடும் ஈசன்' என்ற அவரின் கவிதை வரிகளும் பெண்களின் ஞானநிலையைக் காட்டும் பகுதியாகும்.

பெண்களின் கற்பு நிலை

இந்தியப் பெண்களின் தனித்த பண்பாகக் கருதத்தக்கது கற்பாகும். இக்கற்பு குறித்துப் பாரதியார் பின்வருமாறு கருத்துரைக்கின்றார். "உடற்பிரேமையைக் காட்டிலும் அறிவுப்பிரேமை விசேஷமான தென்றும், அறிவுப்பிரேமையைக் காட்டிலும் "உயிர்க்காதல்" அல்லது "ஆத்மப்ரேமை" சிறந்ததென்றும் இனிதே விளங்கும். இந்த ஆத்மப் பிரேமையைத்தான் கற்புடைமை என்று சொல்கிறார்கள் (ப.86)" இதன்மூலம் கற்பென்பதை உடல், அறிவு, ஆத்மா சார்ந்த ஒன்றாகக் காண்பது பாரதியாரின் உள்ளத்தெளிவைக் காட்டுகின்றது.

இம்மூன்றும் பெண்களுக்கு மட்டுமில்லாது ஆண்களுக்கும் தேவை என்று கருதுகின்றார் பாரதியார். 'வண்டியிழுக்கும் மாடுகளிலே ஒரு மாடு காலொடிந்து கண் தெரியாமலிருக்கும் பட்சத்தில் மற்றொரு மாடு எவ்வளவு நன்றாக இருந்தும் என்ன பிரயோசனம்? ஆண்கள் ஒரு விதமான கட்டுப்பாடு இல்லாமலிருக்கும் நாட்டிலே பெண்கள் நன்னெறியிலே நிற்பது சாத்தியமில்லை(ப.87)' என்பதை நோக்குங்கால் 'கற்பெனச் சொல்ல வந்தால் அதனை இருகட்சிக்கும் பொதுவில் வைப்போம்' என்ற கவியடிகளின் வெளிப்படும் ஒத்த உணர்வு புலப்படும்.

கற்பு குறித்தும் கலவி குறித்தும் மாறுபட்ட கருத்துக்கள் கூறும் பெண்ணியக் கொள்கைகளின் இக்கால நிலைக்கும் பாரதியாரின் அக்கால நிலைக்கும் பெருத்த வேறுபாடு இருப்பது உணரத்தக்கதே! இந்திய சூழலில் வாழும் பெண்களுக்கு(ம், ஆண்களுக்கும்), இந்திய மரபில் வாழும் ஆண்கள் கூறும் அறிவுரைகளாகவே பாரதியாரின் கருத்துக்கள் உள்ளன.

பாரதியாரின் தாய்

பாரதியார் தாயின் உரிமை என்பது, நல்ல பிள்ளைகளைப் பெற்று, உலகம் நலம் பெற அவர்களை வளர்ப்பது மட்டுமே என வலியுறுத்துகின்றார். "ஆதலால் ஸ்திரீயின் முக்கிய கடமை தாம் தேசமக்களுக்குத் தாய்மார் என்பதை நன்றாக அறிந்து, தமது புத்திரர்களும், பெண்களும் ஒழுக்கம், அறிவு , கல்வி, செல்வம் என்பவற்றிலே சிறந்து விளங்குமாறு தாம் செய்தற்குரிய தகுதியடைவதன் கண்ணே அரிய ஆவல் கொண்டவர்களாகி, அவ்விஷயத்தில் தம்மால் கூடிய வரை முயற்சி புரிய வேண்டும்.

மகான்கள் பிறந்து வாழ்ந்த நாட்டிலே மண்ணுண்ணிப் பூச்சிகள் நடமாடுவதைக் கண்டு ஒவ்வொரு ஸ்திரீயும் மனம் புழுங்க வேண்டும். தத்தம் மக்களுக்கு அறிவு, உயர்குணம், சரீரதிடமை, மனோதைரியம், ஆண்மை முதலியவற்றைக் கற்பித்துக்கொண்டேயிருக்க வேண்டும். (ப.7879)" என்ற இவரின் கருத்து அறிவு உயர்குணம், சரீரதிடம் மனோதைரியம் முதலிய குணங்கள் உடைய பெண்ணாகத் தாய் விளங்க வேண்டும் என்பதைக் கூறாமல் கூறுகின்றது. இங்கு தாய், ஆண்/பெண் குழந்தைகளை. ஒரே கண்ணோட்டத்தில் வளர்க்க வேண்டும் எனக் கூறியிருப்பது கருதத்தக்கது.

இவ்வளவு குணங்களையும் பெற்ற தாயாக பாரதியாரால் பாரதத்தாய் உருவகிக்கப்படுகிறாள். "சைவர்கள் உமாதேவியிடம் எத்தனை பக்தி வைத்திருக்கிறார்களோ, அத்தனை பக்தியையும், அன்பையும் எமது தாய்ப்பெருந்தேசமாகிய பாரத கண்டத் திருமாதின்மீது செலுத்துகின்ற நாம் இப்பாரத மாது நிரந்தர கன்னியென்பதாகவும், இவளுக்கும் நரை, திரை முதலியன இல்லையென்பதாகவும் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கின்றோம்(ப.40)" என்ற இவரின் கருத்து அதனை மெய்ப்பிக்கின்றது.

மனைவி உரிமை

'மனைவியானவள் கணவனுக்குத் துணையாக அமைபவள், கணவனே மூலம்' என்ற மரபிற்கு உயர்ச்சி தருபவராகப் பாரதியார் விளங்குகின்றார். "மனைவியான ஸ்திரீ தனது நாயகனுக்கு விரோதமாக நடந்துகொள்ள வேண்டுமென்பது அவசியமில்லை. கணவனுடன் ஒற்றுமைகொண்டுவாழ மனமற்ற ஸ்திரீ விவாகத்திற்கே தகுதியுடையவளில்லை."காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே யின்பம் " அல்லவா? ஆனால் மனைவி தான் கணவனுக்குத் துணைவி என்பதை மறந்து அவனுக்கு அடிமை என்றாவது, அவன் தாய் தகப்பன் முதலியோருக்குத் தொண்டச்சியென்றாவது நினைத்து விடக்கூடாது. தனது அறிவினாலும், நடையினாலும், தன்னை அன்னியர் மதிப்பின்றி நடத்தாதவாறு செய்துகொள்ள வேண்டும். தானே தனக்கு மரியாதை தேடிக் கொள்ளாதவர்களுக்கு வேறு யார்தான் மரியாதை செய்ய முற்படுவார்கள்? படிப்பும் , ஒழுக்கமும், நாகரிகமும் இல்லாத பேர் மிருகங்களுக்கே சமானமென்பதை நமது மாதர்கள் மறக்க வொண்ணாது (ப.79)"

என்ற பகுதியில் மனைவியின் சுயமரியாதை பாதுகாக்கப் பட்டுள்ளமை குறிக்கத்தக்கது. தொண்டனுக்கு எதிர்நிலைப் பெண்பால் பெயராகத் தொண்டச்சி குறிக்கப் பெற்றுள்ளமை எண்ணத்தக்கது.

பாரதியின் குடும்பம்

"கிரக சேஷமாபிவிருத்தியின் பொருட்டு ஒன்று சேர்ந்திருக்கும் கணவனும் மனைவியும் தம்மால் கூடியவரை ஒருவருக்கொருவர் ஹிதம் தேடுதல் அவர்களின் கடமையாகும். இன்சொல், வெடுவெடுப்பில்லாமை, சிறிய துன்பங்களால் மனக்குழப்பமடைந்து விடாதிருக்கும் திறமை, மற்ற உயிர்களுக்கு இயன்ற வரை கஷ்ட மேற்படுத்தாமலிருக்க வேண்டுமென்ற ஆசை யென்பவை இருக்குமானால் எத்தனையோ ஹிதம் உண்டாகக்கூடும் (ப.88)" என்ற கருத்தின்படி குடும்பவாழ்வு அமையவேண்டும் எனப் பாரதியார் விரும்புகின்றார்.

மேற்சொன்னவை மூலம் துறவறம், இல்லறம் இரண்டு நிலைக்குமே மகளிர் ஏற்புடையவர்கள் என்பதும், இருப்பினும் ஆண்களைச் சார்ந்து வாழ்தலே பொருத்தம் என்பதும் தெரியவருகிறது. துறவறம் ஏற்கும் பெண் ஆண்தலைமைக்கு ஏற்ப நடப்பதும், இல்லறம் ஏற்கும் தாயானால் மக்களைச் சார்ந்தும், மனைவியானால் கணவனைச் சார்ந்தும் சுயமதிப்புடன் வாழவேண்டும் என்ற மரபில் புதுமை பூக்கச் செய்யும் கருத்தினராக பாரதியார் உள்ளார் என்பது தெளிவு.

அரசியல் விடுதலையில் பெண்கள்

பெண்களின் குடும்ப விடுதலையை, மதிப்பை வெளிப்படுத்திய பாரதியார் அரசியல் விடுதலைக்குத் தற்போது பெண்கள் உரியவர்கள் அல்லர் என்ற கருத்துடையவராக 'சக்ரவர்த்தினி 'கட்டுரைகள் வாயிலாக அறியப்படுகின்றார். .

"ராஜாங்க சுதந்திரங்கள் ஸ்திரீகளுக்கு வெகு முக்கியமானவை அல்ல. அநாகரிக மனிதர்கள் அவர்களை இழிவாக நடத்தாமல் பாதுகாத்துக் கொள்வது அவர்களுக்கு இப்போது முக்கியமாக வேண்டியது(ப.83)" என்பது பார்ரதியின் கருத்தாகும். இருப்பினும் அவர்கள் இதிலும் விடுதலை பெற வேண்டுமானால் பெண்களுக்கு கல்வி அவசியம் என்ற கருத்து அவர் ஏற்றுக் கொண்ட கருத்தாகும்.

பெண் முன்னேற வழிகள்

பெண்கள் முன்னேறக் கல்வியே தேவை எனப் பாரதியார் வலியுறுத்துகின்றார். "இந்த விஷயம் நிறைவேறவேண்டுமானால் அதற்கு மூன்று விதமான உபாயங்களிருக்கின்றன. முதலாவது உபாயம் கல்வி. இரண்டாவது உபாயம் கல்வி. மூன்றாவது உபாயமும் கல்வியே. அதாவது கல்வியைத் தவிர வேறெல்லாவிதமான உபாயமும் சிறிதேனும் பயன்படாதென்பது கருத்து(ப.83)" என்பதை நோக்கும்பொழுதும்,

"சென்ற 50 வருஷங்களாக இந்நாட்டிலே பலர் ஜனா சாரங்களையும் சமயநிலைகளையும் ராஜாங்க மாதிரிகளையும் திருத்திவிட வேண்டுமென்று பகீரதப் பிரயத்தனம் செய்து பார்க்கிறார்கள். இவர்களது முயற்சிகளிற் பெரும்பாலும் அரைக்காசுக்குப் பயன்படவில்லை. இம்மாதிரி இன்னும் இவர்கள் 500 வருஷம் முயன்ற போதிலும் திவலை அளவுகூடப் பயன்படப் போகிறதில்லை. தேசத்தின் "சக்தி ரூபங்"களாகிய மாதர்களை அறிவின்மை யென்னும் பேரிருளில் ஆழ்த்தி வைத்து விட்டுத் "தேசாபிவிருத்தி , தேசாபிவிருத்தி " என்று கூக்குரலிடுவோரின் பேதைமையை என்னென்றுரைப்போம்? (ப.43)" என்பதை நோக்கும் பொழுதும்,

"ஆதாரசக்தி" களாகிய மாதர்களின் ஹிருதயமும், அவர்களது ஆன்மாவும் இருளடைந்துபோக விட்டுவிடுவதைக் காட்டிலும் பாதகச் செயல் வேறில்லை. ஞான கிரணங்கள் அவர்களது ஆன்மாவில் தாக்குமாறு செய்தாலின்றி நமக்கு வேறு விமோசனம் கிடையாது(ப.44)" என்பதை நோக்கும் பொழுதும்,

பாரதியார் உணர்த்திய பெண்கல்வியின் அவசியம் புரிபடுகின்றது. மேலும் பெண்கள் முன்னேற ஸரளாதேவி என்ற பெண்மணியே பேசுவதாக சில பகுதிகளைப் பாரதியார் தருகின்றார். பெண் முன்னேற்றம் குறித்து ஆண்கள் பேசுவதைக் காட்டிலும் பெண்பேசுவதே சிறப்பு என்று கருதிய பாரதியார் கட்டுரைகளின் இடையில் பெண்கள் பேசும் உத்தியைக் கையாண்டுள்ளார்.

"அன்னதைகள் (அதாவது உணவு கொடுப்போர்) மாதர்களே என்பதை நாம் மறக்கவே கூடாதென்பதை அப்பெண்மணி நமக்குப் போதனைபுரிகின்றார். உணவு கொடுப்பதென்றால் வயிற்றுக்கு மட்டிலுமில்லை. வள்ளுவரால் "செவியுணவு" என்று

கூறப்படும் ஞானவுணவிருக்கின்றதே, அதனை அளிப்போரும் மாதர்களே யாவர்! பாரதகுமாரிகளே இந்நாட்டிற்கு ஞானவுணவும், தோள்வலியும், மனத்திடனும் கொடுத்து இதனைக் கைதூக்கி விடுவது உமது பெருங்கடமையாகும். நீங்கள் என்று வரை அலங்காரப் பொம்மைகளாக நிற்பீர்களோ, அதுவரை யெமக்கெல்லாம் ஓர் கதியும் கிடையாது. (ப.44)"

இப்பகுதிகள் பெண் முன்னேற்றத்திற்குப் பாரதியார் தந்த வெளிச்சங்களாகும். இக்காலகட்டத்தில் பாரதியார் விரும்பிய வண்ணம் பெண்கள் கல்வியறிவும், தொழிலாற்றும் பாங்கும் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது.

பாரதியார் நடத்திய சக்ரவர்த்தினி இதழ்களை நோக்கும் பொழுது அவை ஆணால் பெண்களுக்கு நடத்தப்பெற்றன, அவற்றில் பெண்முன்னேற்றக் கருத்துக்கள் ஆண்களைப் பாதிக்காத வண்ணம் கூறப்பெற்றுள்ளன, அவற்றைப் பெறுவது அக்காலத்தில் பெரியபாடாக இருந்தது என்பன போன்ற கருத்துக்கள் தெரியவருகின்றன. பாரதியார் நடத்திய இப்பெண்ணிதழ் மாதிரிகளாகவே இப்போதைய பெண்இதழ்களும் ஓரளவிற்குப் பெண்விடுதலை பேசும் இதழ்களாக உள்ளன என்பது மறுக்கமுடியாத உண்மை.

19

பெண்ணிய மாயையும் தொடரும் ஆணாதிக்கமும்

பெண்களைத் தனித்த உயிரியாக, உரிமையுடையதாக சொல்லாலும் செயல்களாலும் பாதிப்புகளுக்கு உள்ளாகாத தற்காப்புடையதாக, தன் வாழ்வைத் தானே நிர்ணயிக்கிற சுய சிந்தனை உடையதாக மாற்ற/ இருக்க/ இயங்க வழிகோலும் கருத்துக்களுக்கு இடமளிக்கும் இயம் பெண்ணியம்.

குளிர்சாதனப் பெட்டி = பெண்

ஒரு கடையில் உணவுப்பொருள்களைப் பாதுகாப்பதற்காக புதிய குளிர் சாதனப் பெட்டி ஒன்றைக் கடைக்காரர் வாங்குகிறார். அது பார்க்கச் சிவப்பாக அழகாக இருக்கிறது. தேவையானபோது அது கடைக்காரரைக் குளிர்பானங்களைத் தந்து குளிர்விக்கிறது. அவற்றை மற்றவர்களுக்கும் அளித்து மகிழ்கிறது. தேவ்வயான பொருள்கள், தேவையற்ற பொருள்கள், அழுகின பொருள்கள், அழுகாத பொருள்கள் எல்லாவற்றையும் சுமந்துகொண்டு அது கடைக்காரரின் நன்மைக்கே இயங்கி வருகிறது.

இதற்கும் தற்காலப் பெண்களுக்கும் எத்தனை ஒற்றுமைகள் இருக்கின்றன. நிறம், குளிர்வித்தல், சுமத்தல் இவை அனைத்தும் இரண்டுக்கும் உள்ள ஒற்றுமைகள். கடைக்காரரின் நன்மைக்கே இயங்குதலும், கணவனின் நன்மைக்கே இயங்குதலும் மிகச் சிறந்த ஒற்றுமை. என்றாவது ஒருநாள் கடைக்காரர் குளிர்சாதனப் பெட்டியின் மீது கரிசனம் கொண்டிருப்பாரா? அல்லது அதனைக் கேட்டு ஒரு பொருளை வைக்க, எடுக்க முயன்றிருப்பாரா? இருக்க முடியாது. அது தேவையில்லை. தான் வாங்கிய பொருள் தனக்கே அது முற்றிலும் உழைக்க வேண்டும் என்று அவர் எண்ணுவது இயல்பு.

இதைவிடக் கொடுமை. குளிர்சாதனப் பெட்டி தன் வேலையில் குறைவுபட்டுவிட்டால் உடனடியாகக் கடைக்காரரால் இந்தப் பெட்டி தூக்கியெறியப்படும். அதன்பின் புதிதாக ஒன்று வரும். அதுவும் கடைக்காரருக்கே உழைக்கும். கூடுதலாக ஒரு மின்சமப்பெட்டியையும் வாங்கி வைத்து விடுவார். அந்தக் குளிர்சாதனப் பெட்டி இன்னும் கூடுதலாக உழைக்கும்.

இந்த அடிப்படையில் எண்ணிப் பார்த்தால் தற்காலப் பெண்களின் சூழலும் இந்தக் குளிர் சாதனப் பெட்டியின் இயல்பும் மிகப் பொருந்தி நிற்பது புரியும். பெண் உயிரினமாகக் கூடக் கருதப்படாமல் ஏதோ ஒரு பொருளின் இயல்பில் வாழும் சுயமற்ற போக்கு மாறவேண்டும் என்றே பெண்ணியம் விரும்புகிறது. பெண் ஒரு பொருள் அல்ல. அவளுக்கு விருப்பு வெறுப்புகள் உள்ளன. அவளின் பொருளை, உடலை அவள் விருப்பப்படி அதற்கான பல முன்னெடுப்புகளை பெண்ணியவாதிகள் முன்வைக்கின்றபோதும் பெண்ணிய எழுச்சிகள் இன்னும் சரிவர வந்து சேர்ந்தபாடில்லை.

பெண் அனுபவிப்பின் தளமல்ல

அமெரிக்கா முதல் அந்தமான் வரை, காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பெண்ணைச் சொல்லாலும், செயலாலும் இழிவுபடுத்தும் போக்கு குறையவே இல்லை.

அமெரிக்க அரசியல் மையத்தில் ஒரு பெண்ணுக்கு நேர்ந்த கொடுமைக்குப் பல சோதனைகள் நடத்த வேண்டியிருக்கிறது. காஷ்மீர்ப் பெரியவர்களுக்கு விளையாட்டுப் பொம்மைகளாக அனுப்பப்பட்ட பெண்கள் இறந்ததும் அதை எதிர்த்துக் கேள்வி கேட்டால் அரசியல் அரங்கம் ஆட்டம் கொள்கிறது. அனுப்பப்பட்ட பெண்கள் ஓரினச்சேர்க்கையர் என்பதும், அவர்களை அனுப்பியது ஒரு பெண் தலைமையிலான கூட்டம் என்பதும் கூடுதல் வருத்தத்தைத் தரும் செய்திகள். கள்ளக்காதலுக்குத் தடையாக இருந்த மகனை அம்மாவே நறுக்கிய கதை மனத்தை உலுக்குகிறது. கள்ளக்காதலி வீட்டுக்கு வர அவளை உண்மை மனைவியும் கணவனும் இணைந்து கொல்கிறார்கள். காதலன் முன்பே அவனுடன் இருசக்கர வாகனத்தில் பின்னால் வந்த பெண் பிற ஆண்களால் விருப்பமின்றித் தன்னை இழக்கிறாள். மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு ஆண் பெண்களைச் சாகடித்துக் கொன்று அதன்பின் அவர்களைப் பயன்படுத்தியிருக்கிறான். தன்னைக் குடித்துத் துன்புறுத்திய கணவனை அரிவாளால் வெட்டிய மனைவி, நறுக்கி வீட்டுத் திண்ணையாக்கிய மனைவி . . . இப்படி விரியும் நாளிதழ்ச் செய்திகள் எதை உணர்த்துகின்றன.

இந்நிகழ்வுகள் அனைத்திலும் பெண்ணும் இடம் பெற்றிருக்கிறாள். ஆண்களும் இடம் பெற்றிருக்கிறார்கள்.

பெண்ணை அழகின் இருப்பிடமாக, அனுபவிப்பின் தளமாகக் காண்கிற, கொள்கிற ஆணின் புத்தியாலேதான் மேற்கண்ட நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. இந்த ஆணின் புத்திக்குப் பெண்ணும் துணைபோகிறபோது அவளும் ஆண்தன்மையைப் பெற்றவளாகவே மாறிவிடுகிறாள்.

ஆண்சூழலில் வாழுபவள் பெண் அல்ல

ஓர் ஆண் தன்னோடு பழகிய ஆண்களைப் பார்க்கிறபோது, பழகாத ஆண்களைப் பார்க்கிறபோது கவர்ச்சிகரமான சிந்தனை ஏற்படுவதில்லை. ஆனால் அவனே எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் கவர்ச்சி கொள்கிறான். அவளை அடைந்து விட முயல்கிறான். அவளை அடைய வாய்ப்புக் கிடைத்தால் அதைப் பயன்படுத்திக் கொள்கிறான்.

ஒரு பெண் தன்னோடு பழகிய பெண்களை, பழகாத பெண்களைப் பார்க்கிறபோது கவர்ச்சிக்கு ஆட்படுவது இல்லை. ஆண்களை அவர்கள் பார்க்கிற பார்வையில் ஓரளவிற்குக் கவர்ச்சிக்கு ஆட்பட்டாலும் அது அவர்களை அடையவேண்டும் என்ற உணர்வெழுச்சியை ஏற்படுத்துவதில்லை.

ஆண்களிடத்தில் உள்ள பயன்படுத்துதல் என்ற ஒன்றே பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கும், பெண்களுக்கு எதிரான செயல்பாடுகளுக்கும், ஆணாதிக்கத்திற்கும் காரணமாக அமைந்துவிடுகின்றது.

பெண்ணுக்கு எதிரான நிகழ்வுகளை வெளிப்படுத்தும் தகவல் தளங்களும் செய்திகளை வெளியிடுகையில் ஆண்சார்புத் தன்மையுடனேயே வெளியிடுகின்றன. " கள்ளக்காதலால் மகளையே கொன்ற தாய்" என்ற ஒரு தலைப்பு செய்தித்தாளில் வந்த தலைப்பு ஆகும். இந்தச் செய்தியை எழுதியவர் ஓர் ஆண் என்பது அதன் தலைப்பிலேயே தெரிந்துவிடுகிறது. கள்ளக்காதலுக்குக் காரணமான, உடந்தையான ஆணே கள்ளக்காதலியின் மகளைக் கொல்லக் காரணமாக இருந்தாலும் அவன் இத்தலைப்பிற்குள் மறைந்து கொள்கிற ஒரு பக்கச்சார்பைப் புரிந்து கொண்டால் இதனுள் இருக்கும் ஆணாதிக்கம் புரிய வரும்.

எனவே இக்கால நிலையில் குழப்பான சூழலில் பெண்கள் இருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. ஆண் சூழலுக்குள் தன்னை இழந்து நிற்கிறார்கள் என்பது உண்மை.

இவர்களை மீட்டுத் தன்னை உணர்ந்துகொள்ளச் செய்ய வேண்டிய பெண்ணியம் , பெண்ணியவாதிகள் செய்தது என்ன? செய்ய வேண்டியது என்ன? என்பதை ஒரு மீளாய்விற்கு உட்படுத்த வேண்டும்.

பெண்கள் பள்ளிக்கூடம், பெண்கள் கல்லூரிகள், பெண்கள் பல்கலைக்கழகங்கள் போன்றன தொடங்கப் பெற்று விட்டன. இவற்றில் பெண்களே வேலைபார்க்கிறார்கள். படிக்கிறார்கள். தோட்டக்காரர்கள் முதல் துணைவேந்தர் வரை பெண்கள்தான். என்றாலும் அவர்கள் படிக்கிற படிப்பு பெண்ணுக்குச் சாதகமானதா என்ற கேள்வியை எழுப்பிப்பார்க்கவேண்டும். பாடதிட்டம், அதற்குள் இடம் பெறும் பாடங்கள், அதனை எழுதிய ஆசிரியர்கள் ஆகியனவற்றை ஆராய்ந்து பார்த்தால் பத்து விழுக்காடு கூடப் பெண்கள் தொடர்புடையதாக இருக்க வாய்ப்பிருக்காது. ஆணின் பாடங்களைப் படித்து வரும் பெண்கள் எப்படி உண்மையான பெண்களாக இருக்க இயலும்.

பெண்களே எழுதும் புத்தங்கள், தொகுக்கும் புத்தகங்கள் வந்துவிட்டன. எனினும் பெண்கள் தொகுக்கும் புத்தகங்களில் பெண்களுக்கு உரிய சாதகமான கருத்துக்கள் இடம் பெற்றுள்ளனவா என்பது கேள்விக்குறிதான். குறிப்பாகச் சொல்லவேண்டுமானல் தற்போது சாகித்திய அகாதமி வெளியிட்டுள்ள பெண் மையக் கதைகள் தொகுப்பில் ஆண்களோடு பெண்களின் கதைகளும் இடம் பெற்றுள்ளன. இதனைத் தொகுத்தவர் பெண். இவர் எப்படி ஆண் கதைகளைப் பெண்களுக்குச் சாதகமானதாக ஏற்று அவற்றைத் தொகுக்க இயலும். ஆண்கள் எவ்வளவு விழிப்பாக எழுதினாலும் அதற்குள்ளும் ஆணாதிக்க் கருத்து வந்து புகுந்து கொள்ளும் என்பது தான் உண்மை.

புறச்சூழலை மாற்றி அமைக்க முடிந்தால் மட்டுமே, அல்லது புறச்சூழல் மாறினால் மட்டுமே பெண் உண்மையான பெண்ணாக வலம் வர இயலும்.

பெண்ணியத் தோற்றமும் மாயையும்

பெண்ணியம், பெண்ணியவாதிகள் என்பதற்கான பொருள் தமிழ்ச்சூழலில் வேறுமாதிரியாகத் திரிக்கப் பெற்றுள்ளது. இத்திரிப்பிற்குக் காரணம் ஆண் விமர்சகர்கள். பெண்ணியம் என்பதை ஒரு பெண் மற்றொரு பெண்ணுடன் கொள்ளும் காம

உணர்வு என்பதே பல ஆண்விமர்சகர்களின் கருத்து. மணமுறிவு பெற்றவர்கள், மணமாகாதவர்கள் இவர்களெல்லாம் பெண்ணியவாதிகள் என்பதும் மேற்சொன்னது போன்றதொரு தவறான பார்வையாகும்.

உண்மையான பெண்ணியவாதிகள் என்பதான எண்ணத்தை எட்டவே இன்னும் பல நூற்றாண்டுகள் ஆக வேண்டி இருக்கும். ஆண்களின் தோழியாக வாழும் பெண்கள், ஆண்களின் பராமரிப்பில் இருக்கும் பெண்கள் இவர்களெல்லாம் பெண்ணியவாதிகள் என்ற தவறான எண்ணமும் தமிழ்ச்சூழலில் விளங்கி வருகிறது.

இவற்றில் இருந்து உண்மையான பெண்ணியத்தை, பெண்ணியவாதிகளை இனம் கண்டறியவேண்டிய தேவை தற்போது ஏற்பட்டிருக்கிறது. அப்படித் தேடிப்பார்த்தால் உண்மையான பெண்ணியம் என்பதும், உண்மையான பெண்ணியவாதி என்பதும் கிடைக்காமல் கூடப் போகலாம்.

சக பெண்களை முன்னேற்றும் பெண் பெண்ணியவாதி ஆவாள். அவள் எலைன் ஷோவால்டர் சொல்வது போன்று சகோதரித்துவ குணம் பெற்றவளாக இருப்பாள். தனக்கு எதிராக நடந்த இழப்புகளை, அவமரியாதைகளைத் தன் சகோதரி அனுபவிக்காமல் காப்பவளே உண்மையான பெண்ணியவாதி.

மேலை நாடுகளில் உங்கள் எதிரியோடு உறங்குகிறீர்கள் என்று கூறிப் படுக்கையறையை விட்டு வெளியேறிய பெண்களின் போராட்டம் தரும் கருத்து என்ன? என்றைக்கும் ஆண் ஆணாகவே இருப்பான். அவன் பெண்ணைப் பற்றிச் சிந்திக்க வேண்டாம். அவன் உறவின்றி நாமே நமக்கான வாழ்வைத் தொடங்குவோம் என்பதுதான்.

குடும்பத்தில் பிறந்த பெண் குடும்பத்தவளாக வாழ்கிறபோது பல அனுசரிப்புகளுக்கு உள்ளாக வேண்டியவளாக இருக்கிறாள். அப்படி வாழ்வது சரியென வாழும் பெண்களின் வாழ்வில் பெண்ணியம் நுழைந்து அவர்களைக் கெடுத்துவிடப் போவதில்லை. ஆனால் குடும்பத்தில் சம உரிமையை நிலைநாட்டப் பெண்ணியம் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறது. மின்னல் பூக்கள் என்ற நாவலில் இறந்த பெற்றோருக்கு ஆண் இறப்புக் கடன் செய்வது போலப் பெண்ணும் செய்யலாம்

என்பதை திலகவதி முன்வைக்கிறார். அவரே சொப்பன பூமி நாவலில் அச்சகத்தொழிலில் உள்ள ஆண், பெண் மதிப்பு வேறுபாட்டைக் களைய முன்வருகிறார். குடும்பச் சூழலை முன்வைத்து பெண்களை முன்னேற்றும் தற்காலப் போக்கு ஒருபுறம் தற்போது தமிழ்ப் பெண்ணியத்திற்குத் தேவையாகின்றது.

மணம் வேண்டாத, ஆண்துணை வேண்டாத, தன்னையே நம்பி, தன்உழைப்பினைத் தனக்கே உரிமையாக்கிடத் துடிக்கும் தனித்த பெண்நிலைக்கும் இக்காலத்தில் விதை இட வேண்டி இருக்கிறது. இவ்வாறு தனித்துப்போனால் உலகம் இயங்காது. உற்பத்தி பெருகாது என்ற மரபுக் குரல்கள் வாடகைக் கருப்பைத் தாய்களாலும், வாடகை ஆண்விந்தணுக்களாலும் மறைந்து போய்விட்டன. தேவைப்பட்டால் யார் யாரெனத் தெரியாமல் புதிய உற்பத்திக் கோட்பாடுகளை மருத்துவம் உருவாக்கி வருவது இந்தக் கேள்விக்கு முற்றுப் புள்ளியை வைத்துவிடும்.

இதுவும் அல்லாமல், அதுவும் அல்லாமல் இரண்டுங்கெட்டான் ஆகி விட்ட பெண்ணியத்தைப் பெண்ணிய மாயை என்றே குறிக்க இயலும். ஆடைகளில் விடுதலையைத் தேடி ஆண்களின் ஜீன்ஸ்களில் நல்லதைத் தேடுதல் உண்மையான பெண்ணியமாகாது. காமத்தில் விடுதலைதேடி ஆண்குழுவோடு தன்னை இணைத்துக் கொள்ளும் குழு விளையாடல்கள் உண்மையான பெண்ணியமாகாது. இதிலிருந்து முற்றிலும் மாறுபட்ட சுயமான பெண்களைத் தமிழ்ப் பெண்ணியம் வெளிப்படுத்த வேண்டும்.

ஆணாதிக்கம்

எழுதுதலும், வெளியிடுதலும் ஆணாதிக்கக் கரங்களில் தற்போது உள்ளன. ஆனந்தவிகடன் வெளியிடும் புதிய புத்தகங்களில் பெண்களின் புத்தகங்கள் எத்தனை என்பதை எண்ணினால் இது தெற்றெனத் தெரியும். காலச்சுவடு, தான் கண்டறிந்துள்ள பெண் எழுத்தாளர்களைத் தவிர வேறு பெண் எழுத்தாளர்களே உலகில் இல்லை என உண்மைபேசும். தன் கைக்காசு செலவழித்து ஆண்வெளியீட்டகத்தில் கவிதைத் தொகுதிகள் போட்டுச் சில பெண்கள் கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுக் கொள்ள முடிகிறது.

இணைய தளங்களில் உண்மையான பெயர்களில், உண்மையான புகைப்படங்களுடன் பெண்கள் உலாவரஇயலாது. வந்தால் பின்னூட்டங்களில் பல இடைஞ்சல்கள் வரும். அம்பை

எழுதிய முகமூடிகளுக்குப் பின்னால் முகங்கள் பெண்கள் தம் சொந்தப் பெயரில் எழுதாமைக்கான பல காரணங்களை முன்வைக்கிறது. இதே சூழல்தான் தற்போது இணையத்தில் உள்ள பெண்களுக்கும். இணையத்தில் வெளியான ஒரு பெண்ணின் புகைப்படத்தையும், ஒரு குழந்தையும் புகைப்படத்தையும் அவர்கள் அனுமதி இன்றிப் போட்டு விட்டு தற்போது தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுக் கழகம் அதை வெளியிட்டவர் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லிக் கண்டிப்பினைக் காட்டியிருக்கிறது.

இந்தச் சூழலில் வெளியீட்டுத் தளங்கள் ஆண்கள் கட்டுப்பாட்டில் உள்ளன என்பதில் ஒரு சிறிதும் மாறுபாடு இல்லை. எழுத்தாளர் ஜெயமோகன் அவர்கள் தமிழ்ப் பெண்ணியம் என்ற ஒரு கட்டுரையை எழுதியுள்ளார்.

அவரின் ஒவ்வொரு வரிக்குள்ளும் எள்ளல் நிறைந்திருக்கிறது. பெண் எழுத்தாளர்களைக் கேலிபேசும் மேதாவிக்குணம் நிறைந்திருக்கிறது.

அவர் பிரிக்கும் பல்வேறு காலகட்டங்களின் பெயர்களில் உள்ள கேலித்தன்மையை உங்களுக்குச் சுட்ட விரும்புகிறேன். அவர் தமிழ்ப்பெண்ணியத்தைப் பின்வரும் உட்பகுப்புகளாகப் பிரித்துக் கொள்கிறார்.

1. கொண்டைக்காலம் (1950 ஆம் ஆண்டுக்கு முன்னால்)
2. பின்சடைக்காலம் (1950 முதல் 1965 வ்ரை)
3. மாறு சடைக்காலம் (1965 முதல் 1975வரை)
4. முன்சடைக்காலம் (1975 முதல் 1985 வரை)
5. சுரிதார் காலம் (1985 முதல் 1995 வரை)

ஜீன்ஸ்காலம் (1995 ஆம் ஆண்டு தொடங்கி).

இந்தக் கால வரிசையைப் பார்க்கும் எவருக்குள்ளும் எள்ளல் தோன்றும் என்பதில் ஐயமில்லை. பெண்களின் இயக்கத்தினை, அரசியலை, விழிப்புணர்வை இதைவிடக் கொச்சைப்படுத்த முடியாது. இன்னும் அந்தக் கட்டுரையின் சில பகுதிகள் ஆணிய எழுத்து அகங்காரத்தின் விளைவுகள். அவற்றைத் தந்து அவற்றில் உள்ள ஆணியச் சொல்லாடல்களை விளக்கவேண்டியது இக்கட்டுரையின் கடமை.

ஜீன்ஸ் காலகட்டத்தைப்பற்றிய விவரணை பின்வருமாறு.

இந்த விவரணையில் அம்பையின் பிரபலமான பெண்ணியக் கதை ஒன்று சீரழிக்கப் பெற்றிருக்கிறது. அது மட்டும் இல்லாமல் பெண்களின் உள்ளாடைகள் குறித்த கேலிகளும் வருத்தமளிப்பன. இதுதவிர நல்லவன் இல்லையோநீ என்ற கவிதைத் தொடரில் யோநீ என்பதன் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டுள்ள இழி நிலை கவனிக்கத்தக்கது. பெண்கள் தங்களை, தம் உடலைப் பற்றி எழுதுவது என்பது அவர்களுக்கான இலக்கியமாகக் கொள்ளப்படுகிறது. அதை ஆண்கள் படிக்கவேண்டும் என அவர்கள் விரும்பவில்லை. பெண்களின் தனித்துவப் படைப்புக்களை ஆண்கள் படிப்பதே குற்றம் என்ற நோக்கில் புனையப்படுகிற பெண் எழுத்துச் சுதந்திரத்தினை இத்தனை கேவலப்படுத்தியிருக்கவேண்டாம்.

இதுபோல நச்சு தேய்ந்த விமர்சனங்கள் பெண்ணியத்தை வளர்ப்பன அல்ல. அதனைத் தேய்த்து அழிப்பன.

காலம் நிற்பதையும், தோற்பதையும் கணக்கீடு செய்து கொண்டு வரலாறாக ஆக்குகிறது. இந்நிலையில் விழிப்புற்ற பெண்கள் நூறாண்டுகள் கழித்து அடையப் போகிற வெற்றிக்காக இன்றைக்கு எழுதுகிறார்கள். ஏக்கம் கொள்கிறார்கள். அவர்கள் மீது ஆணாதிக்கச் சகதியை, சங்கதிகளைப் பூசாமல் இருப்பது நல்லது.

20

பெண் படைப்பும் + ஆணாதிக்க விமர்சனமும்

பெண் படைப்பாளிகள் தங்கள் படைப்புகளைப் படைக்க, எழுத, வெளியிட என எல்லா நிலைகளிலும் மனதளவிலும், உடலளவிலும், செயலளவிலும், பொருளளவிலும் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்நிலை முற்காலம் முதலே இருந்து வந்துள்ளது.

ஔவையாரின் வாழ்வில் காட்டப்பெறும் 'சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?' என்ற கதையை எடுத்துக்காட்டிற்கு இங்கு அணுகுவோம். இக்கதை ஔவையாருக்கும், முருகனுக்கும் இடையில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் செவிவழிக்கதையாகும். ஔவையார் தமிழறிந்த மூதாட்டி; இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் அறிந்தவள். அவள் ஒருமுறை பசியைப்போக்க காட்டில் உணவு தேடுகிறாள். அங்கு நாவல்மரத்தின்மீது அமர்ந்திருக்கும் சிறுவன் (முருகப்பெருமான்) ஔவையாரிடம் 'பசிக்கிறதா பாட்டி?' எனக்கேட்க, அவளும் 'ஆமாம்' என்கிறாள். சிறுவன் 'உனக்குச் சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?' எனக் கேட்க இவள் திகைக்கிறாள். 'நீ வயதான பாட்டி! உனக்கு நான் சுடாத பழமே தருகிறேன்' எனக் கூறிச் சிறுவன் பழங்களை மரக்கிளைகளில் இருந்து உலுப்புகிறான். பழங்கள் கீழே விழுகின்றன. நன்கு கனிந்த பழங்கள் மண்ணில் புதைந்து, மண்ணாகின்றன. ஒவையார் பழங்களில் ஒட்டியிருக்கும் மண்ணை வாயினால் ஊதுகிறாள். சிறுவன் கை கொட்டிச் சிரிக்கிறான். 'பாட்டி! பழம் சுடுகிறதா?' என்கிறான். ஔவையார் அவனின் (முருகப்பெருமானின்) திருவிளையாடலை உணர்கிறாள்.

இக்கதையில் ஔவையார் என்னும் பெண்படைப்பாளியை, கல்வியில் சிறந்தவளை ஒரு மாடுமேய்க்கும் சிறுவன் தன் சொல்மடக்கால் மடக்கிவிடுகிறான். இக்கதை முருகப்பெருமானின் மிகச் சிறந்த திருவிளையாடலாக இருக்கலாம். ஆனால் இக்கதையுள் ஒரு பெண்படைப்பாளி ஆணாதிக்க வர்க்க விமர்சனத்தால் தாக்கப்பெறும் நிலை புதைந்துகிடக்கிறது.

ஔவையாரைப் பெண்படைப்பாளிகளின் குறியீடாகவும், சிறுவனை ஆண்விமர்சன உலகின் குறியீடாகவும் கொண்டால் பெண்படைப்பாளிகளுக்கு விமர்சனத்தால் ஏற்படும் தொல்லை புரியும்.

இதுபோன்று பலகதைகள் உண்டு. அவற்றுள்ளும் இவ்வதிகாரப் போட்டியைஉணரமுடியும்முற்காலம்முதலேபெண்படைப்பாளிகளின் படைப்புக்கள் சரியாக மதிப்பிடப்படப்பெறவில்லை என்ற குறையுண்டு. இக்குறைகளுக்குத் தற்காலத்திலும் சில காட்டுகள் உண்டு.

1936 ஆம் ஆண்டு மூவலூர் ராமாமிர்தத்தம்மாள் என்பவரால் 'தாஸிகள் மோசவலை அல்லது மதிபெற்ற மைனர்' என்ற நாவல் படைக்கப்பெற்று, சிவகிரி ஜமீன் செ. வெள்ளைத்துரைச்சி நாச்சியார் என்பவரால் வெளியிடப்பெற்றது. இந்நாவலை எழுதிய நாவலாசிரியருக்குப் பல தொல்லைகள் படைப்பை எழுதியபோதும், வெளியிட்டபோதும் ஏற்பட்டன என்பது அவரது நூல் பதிப்புரை வாயிலாகத் தெரியவருகிறது.

தற்போது இந்நாவல் மீண்டும் நாகப்பட்டினம் சிவசக்தி பதிப்பகம் வாயிலாக, இக்கால நாவலாசிரியர் சோலை சுந்தரப்பெருமாள் வழிகாட்டுதல்படி மறுபதிப்பு செய்யப் பெற்றுள்ளது.

இதற்கு நூல் விமர்சனம் ஒன்றை ஜெயமோகன் திண்ணை என்னும் வலைதள இதழில் ஜனவரி 10. 2004-இல் எழுதியுள்ளார். இவ்விமர்சனத்தில் முருகன் ஔவைக்கு எதிராக ஆடிய அதே திருவிளையாடலை ஜெயமோகன் மூவலூர் ராமாமிர்தத்தம்மாள் என்னும் பெண்படைப்பாளிக்கு எதிராகச் செய்துள்ளார். அதனை விவாதிப்பது இக்கட்டுரை.

தாசிகள் மோசவலை அல்லது மதிபெற்ற மைனர் நாவல் ஓர் அறிமுகம்.

மேல்தட்டு சாதி அமைப்பைச் சார்ந்த அய்யர், அய்யங்கார், நாயக்கர் குலங்கள் சார்ந்த பெண்களே ஆரம்பகாலத்தில் நாவல் படைப்பில் ஈடுபட்டனர். அவர்களைத் தாண்டி 1936-இல் கீழ்த்தட்டு சாதி அமைப்பைச் சார்ந்த, தாசி குலத்து ராமாமிர்தத்தம்மாள் இந்நாவலை எழுதியுள்ளார்.

தாசி குலம் சார்ந்த பெண்கள் அத்தொழிலை விட்டு விலகவேண்டும் என்ற சமூக விழிப்புணர்வை இயக்கமாகச் செய்த நாவல் இது.(பிரிட்டானியத்தையும், பார்ப்பனியத்தையும் கூட எளிதில் எதிர்க்கலாம். இந்த தேவதாசி முறையை எதிர்ப்பது சாமானிய வேலை அன்று)

விவேகவதி என்ற கதாபாத்திரம் மூவலூர் ராமாமிர்தத்தம்மாள் வாழ்க்கையோடு மிகவும் தொடர்புடையது. இப்பாத்திரத்தின் செயல்பாடுகள் மூவலூர் ராமாமிர்தத்தம்மாளின் செயல்பாடுகளே ஆகும் .

சுயமரியாதைப் பேச்சுக்கள் அடங்கிய இந்நாவல் திராவிட இயக்க இலக்கியக்களத்தில், நாவல் பிரிவில் முதலிடம் பெறுவதாகும்.

நாவல் விமர்சனம்

இந்நாவலை ஒருமுறை விமர்சித்த பிரபஞ்சன் 'என்னைப் பொறுத்தவரையில் அது (இந்நாவல் படைப்பு) ஒரு புண்ணாக்கு' என்று கருத்துரைத்துள்ளார்.

இதனைத் தற்போது நூலறிமுகம் செய்துள்ள ஜெயமோகன் இந்நாவல் குறித்துப் பின்வரும் குறைகளைச் சுட்டிக்காட்டுகிறார். இவரது மதிப்பீட்டில் குறைகளுக்குப் பின்னால் நிறைகளும் இடம்பெற்றுள்ளன.

1. 1935 (1936 என்பது தான் முதல் பதிப்பில் சுட்டப்பெற்றுள்ள பதிப்பாண்டு) இல் வெளிவந்த இந்நாவல் இலக்கியம் சார்ந்த இயல்புகள் எதுவும் இல்லாத தட்டையான பிரச்சார ஆக்கம்.
2. எளிமையான வாசகனுக்குரிய சாதாரண கதையோட்டம் கூட இதில் இல்லை.
3. ராமாமிர்தத்தம்மாளின் மனதில் இருந்த முன்மாதிரி வடிவம், அன்று பரவலாக வாசிக்கப்பட்ட அக்கப்போர்த்தன்மை கொண்ட நாவல்களே என்ற எண்ணம் ஏற்படுகிறது.
4. கதையில் நம்பமுடியாத வடுவூர் துரைசாமி பாணி மாறுவேடங்கள், நாடகம் போட்டுத்திருத்துதல் ஆகியவையும் மர்மங்களும் நினைத்தபோது வருகின்றன.

5. ஆசிரியரின் நோக்கில்கூட இன்றைய வாசகர்கள் பலசிக்கல்களைக் காணலாம். உதாரணமாக இசையைக் கேளிக்கைக்கும், ஒழுக்கமின்மைக்கும் கொண்டுசெல்லும் தேவையற்ற ஓர் ஆடம்பரமாகவே அவர் எண்ணுகிறார். இசைக் கச்சேரிகள் வைப்பது, கேட்பது ஆகியவற்றை இழிவாகக் கூறுகிறார்.

6. இந்நாவலில் அனைவருமே பிரசங்கக்குரலில் பேசுகிறார்கள்.

7. கதைமாந்தரின் பெயர்களே குணநலன்களைக் காட்டும்படியாக உள்ளன.

8. மைனர்களும், வீணர்களும் நல்ல கதாபாத்திரங்களின் சுயமரியாதைப் பிரசங்கத்தைக் கேட்டதுமே திருந்தி சுயமரியாதை இயக்கத்தில் இணைந்து விடுகின்றனர்.

மேற்காணும் எட்டு குறைகள் இருப்பதாக ஜெயமோகன் கருதுகின்றார்.

நாவலின் பதிப்புரையில் ராமாமிர்தத்தம்மாள் "இதுவே எனது முதல் முயற்சி. கதைப்போக்கு முதலியவற்றில் குற்றங்குறைகள் இருக்கலாம். குற்றம் பொறுத்து குணத்தைப் பாராட்டல் கற்றறிந்த மேலோர்கடன் "எனக் குறிப்பிடுவதைக் காணும்பொழுது, ஜெயமோகன் காட்டும் குறைகள் குறைகளே அல்ல என்பது புலனாகும்.

இந்நாவல் தட்டையான பிரச்சார ஆக்கம் என்று ஜெயமோகன் கருதுகிறார். பிரச்சாரம் இல்லாத நாவல் இலக்கியம் எதுவும் இன்றைக்கு வரை தமிழில் இல்லை என்பது குறிப்பிடத்தகுந்தது. எல்லா இலக்கியங்களுமே ஏதேனும் ஒரு கருத்தைப் பிரச்சாரம் செய்யவே எழுந்தவை. அத்தனையே பாவிகம் என்று இலக்கணநூலார் காட்டுகின்றனர். இவ்வம்மாளின் பாவிகம் பின்வருமாறு; 'தேவதாஸி முறை ஒழிந்து அச்சமூகம் முன்னேற்றம் அடையவேண்டும். அவர்களால் கூடாஒழுக்கத்தில் ஈடுபட்டுத் தங்கள் வாழ்க்கையில் மண்ணை அள்ளிப்போட்டுக் கொள்ளுவதோடு மனைவி மக்களையும் திண்டாடச் செய்யும் வாலிபர்களின் வாழ்க்கை சிறந்து விளங்கவேண்டும் என்பதே இந்நாவலின் குறிக்கோள் ஆகும்.' என்பதாகும். எனவே பிரச்சாரம் செய்யப்படவே இந்நாவல் எழுந்தது என்பது இதன்சிறப்பே ஆகும்.

எளிமையான வாசகன், இன்றைய வாசகர் (வாசகன் என்பது ஆண்பால் வாசகர்களை மட்டும் குறிப்பிடும் சொல்லாட்சியாகும்.

வாசகி யாரும் இந்நாவலை வாசிக்கமாட்டார்கள்; வாசிக்கக் கூடாது என்பது இதன் மறைபொருள்) என்ற ஜெயமோகனின் சொல்லாட்சிகள் குழப்பம் தருவன. 1935-40 ஆண்டுகளுக்கு இடையில் தமிழ் வாசகஉலகம் எளிமையான(ஜெயமோகனின் சொல்லாட்சிப்படி) வாசக நிலைக்கும் குறைவானதாகவே இருந்தது என்பதில் ஐயமில்லை. நாவல் உலகில் கல்கியின் வருகைக்குப் பின்னரே வாசகத்தளம் இலக்கியத்தரத்துடன் விளங்கத் தொடங்கியது என்பதை மறுப்பதற்கில்லை. கல்கிக்கு முன்னதான வாசகரையும், இற்றைக்கால வாசகரையும் ஒரே தட்டில் வைத்துப்பார்ப்பது அவ்வளவு சரியானதாக இருக்காது. இருப்பினும் கல்கிக்கு முன்னதான வாசகத்தளத்தை ஓரளவு அறிவுடையதாக்க அக்காலப் படைப்பாளர்கள் முயன்றனர் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். குறிப்பாக பெண்படைப்பாளிகள் இம்முயற்சியில் மிகு வெற்றிபெற்றனர் என்பது அக்காலத்தை ஆராய்ந்த நாவல் ஆராய்ச்சியாளர்களின் கருத்து(காண்க; விடுதலைக்கு முந்தைய பெண்களின் நாவல்கள் ஆய்வு நூல்).

ராமாமிர்தத்தம்மையார் மனதில் இருந்த முன்மாதிரி அக்காலத்திருந்த அக்கப்போர் நாவல்களே. அக்கப்போர் என்ற சொல்லை நீக்கிவிட்டால்(ஏனெனில் அவை இல்லாமல் தமிழ் நாவல் நூறாண்டு வளர்ந்திருக்க இயலாது)இதில் சந்தேகமில்லை. ஆனால் இதிலுள்ள நியாயத்தை உணரவேண்டும். ஓட்டப்பந்தயம் ஒன்று நடைபெறுகிறதெனில், அதில் ஓடுவோர் அனைவருக்கும் ஒரே வெற்றி எல்லைதான்; ஒரே கட்டுப்பாடுதான்; மாற்றி வைக்கப்பெற்றால் அது இயல்பானதாயிருக்காது. அவ்வாறிருக்கையில் ராமாமிர்தத்தம்மாள் அக்கால நாவல்களை முன்மாதிரியாகக் கொண்டதில் தவறில்லை. தற்கால நாவலாசிரியர்களுக்கு ஜெயகாந்தன் முதலானோர் முன்மாதிரியாக ஆவதுபோலத்தான் மேற்சொன்ன முன்மாதிரியும்.

அடுத்த குறையையும் இதனுடன் இணைத்தே கண்டுவிட இயலும். மர்மநிகழ்ச்சிகள், நாடகங்கள், வடுவூர் துரைசாமி அய்யங்கார் தன்மை கொண்ட நாவல் அமைப்பு இவை கொண்டு இந்நாவல் விளங்குகிறது என்ற இக்குறை முன்னர் சொன்ன ஓட்டப்பந்தயத்தின் வெற்றி இலக்கும், கட்டுப்பாட்டு அமைப்பும் ஆகும். இதில் தவறினால் அக்காலத்தில் நாவல் வந்திருக்காது. இக்காலத்தில் அதனை திறனாய முடியாது.

அடுத்து இசை குறித்த ஆசிரியையின் கருத்தை குறை காணுகிறார் ஜெயமோகன்.

தேவதாஸி ஒழிப்பு மாநாடு நடைபெறுவதாக நாவலில் காட்சி ஒன்று இடம்பெறுகிறது. அதில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. தீர்மானங்களில் ஐந்தாவது தீர்மானம் பின்வருமாறு.”. கலியாணம் திருவிழா விருந்து முதலிய வைபவங்களில் காம உணர்ச்சியை எழுப்புவதற்குக் காரணமான சி(ரு)ங்கார பதங்களோடு கூடிய பரத நாட்டியம் முதலியவற்றிற்கு ஆதரவு அளிக்கக்கூடாது.” என்பதாகும். இதில் காமஉணர்ச்சியை எழுப்பும் என்ற சொற்றொடர் கவனிப்பிற்குரியது. இதன் பின்னணியில் பரத நாட்டியக்கலை முதன் முதலாக தாசிகள்வசம் இருந்தமை, பின்பு அக்குலம்அதனைவிடுத்தமை மேல்தட்டுப் பிரிவினர் அதனைத் தம்வயப்படுத்திக்கொண்டமை முதலான செய்திகள் உள்ளன. எனவே இசை குறித்த ஆசிரியையின் கருத்து சமூக சிந்தனை கொண்டது என்பது உணரத்தக்கது.

நாவலில் அனைவரும் பிரசங்கக்குரலில் பேசுகின்றனர் என்பது அடுத்த குறை. மாநாடு, மேடைப்பேச்சு இதனை அடியொற்றிச் செல்லும் நாவலில் பிரசங்கக் குரல் ஒலிப்பது பிழையில்லை. மேலும் மேடையில் பேசும் பாத்திரங்கள் பெரும்பாலும் பெண்கள் என்பதை அறியவேண்டும். பெண்கள் மேடையேறிக் கருத்துரைப்பது என்பது அக்காலத்தில் புதுமையானது. மேலும் திராவிடக் கழகத்தின் தீவிரப்பேச்சாளராக விளங்கிய இவ்வம்மையார் படைத்த நாவலில் பிரசங்கதொனி இருக்கத் தானே செய்யும். இப்பிரசங்கநடை தமிழ் நாவல் உலகிற்கு ஒரு புதிய பங்களிப்பு என்பதை உணர்ந்தால் இந்நாவலின் வெற்றி புரியும்.

கதைமாந்தர் பெயர்களே குணநலன்களைக் காட்டும்படியாக உள்ளன என்பது ஜெயமோகன் காட்டும் மற்றுமொரு குறை. மு. வ. வின் நாவல்களில் வரும் கதைப்பாத்திரங்களும் இவரின் இக்கணிப்புப்படி தவறெனவே கொள்ளப்பெறும். இதன்மூலம் ஆண்படைப்பாளி செய்தால் தவறில்லை; பெண்படைப்பாளி செய்தால் சுட்டிக்காட்டப்பெறும் என்று மு. வ. நாவல்கள் குறித்தும், ஜெயமோகன் கட்டுரை குறித்தும் ஒரு முடிவிற்கு வந்துவிட முடிகின்றது.

பெரியாரின் மேடைப்பேச்சைக் கேட்ட தமிழகம், அவர் வழியில் திரும்பியது என்றால் நாவல் கதைமாந்தர்கள் சுயமரியாதைப் பேச்சில் ஈடுபட்டதில் தவறில்லை.

என்வே இவ்விமர்சனங்கள் குறைகாணவேண்டும் என்ற எண்ணத்திலும், 'பெண்தானே! பெரிதாக என்ன படைத்திருப்பாள்' என்ற எண்ணத்திலும் செய்யப்பட்டவை என்பது தெளிவு.

ஜெயமோகனின் குறைகளுக்கு அதற்கு இக்கட்டுரை அளித்த பதில்கள் அனைத்துமே, முன்பு சுட்டப்பட்ட பிரபஞ்சனின் ஒற்றைவரி விமர்சனத்திற்கும் கொடுக்கப்பட்டவையே.

மேலும் இக்கட்டுரையை ஜெயமோகன் தொடங்கும்போது 'கும்பகோணத்தில் பிறந்த மூவலூர் ராமாமிர்தத்தம்மாள்' என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வம்மையார் திருவாரூரில் பிறந்தவர்; வறுமை கருதி மூவலூர் தாசிக்கு அளிக்கப்பட்டவள் என்பதே உண்மையான செய்தி. இதனைப் பின்வரும் சாற்றுக்கவி அடிகள் "சீர்சால் சோழ மண்டலந் தனக்கோர்/ அணியாய்த் திகழும் அழகிய நகராம்/ மணிகெழு மாடத் திருவாரூரில்/ வேசையர் குலத்தில் மாசிலா மணியாய்த்/ தேசுடன் பிறந்த சேற்றுத்தாமரை!" என்று உணர்த்துகின்றன.

மேலும் தற்போது வெளியிடப்பெற்றுள்ள பதிப்பில் இந்நாவலின் தலைப்பு மதிபெற்ற மைனர் என்று குறைக்கப்பெற்றுள்ளது. இதுவும் கண்டிக்கத்தக்கது. மேலும் இப்புதிய பதிப்பில் ஆசிரியையின் பதிப்புரை, வெள்ளைதுரைச்சி நாச்சியாரின் முன்னுரை, சோமசுந்தர பாரதியாரின் மதிப்புரை, பண்டிதை ரா. ரங்கநாயகி அம்மாளின் சாற்றுக்கவி, திருமதி குருசாமி குஞ்சிதத்தின் புகழுரை ஆகியனவும் இடம் பெற்றுள்ளனவா இல்லையா என்பது தெரியவில்லை. இவை இடம்பெற்றிருந்தால் மட்டுமே நாவல் முழுமை பெறும்.

பெண்படைப்பைத் திறனாய்வதிலும், பதிப்பிப்பதிலும் ஆண் அதிகாரத்தன்மை புகுந்து உண்மையை மறைக்க முற்பட்டுவிடுகின்றன. பெண்களின் படைப்பை ஆணதிகாரத்தன்மை பெற்றோர் திறனாய்கையில் பின்வரும் மூன்று குறைகள் நிகழலாம் என்று பெண்ணியவாதிகள் கருதுகின்றனர். அவை பின்வருமாறு.

1. ஆண்கள் பெண்பாலரின் படைப்புக்களைப், பால் சிறப்பு தந்து பார்க்காது பொது நோக்காகத் திறனாயும் குறை.

2. அதிகமான பெண் படைப்பாளிகளைத் திறனாய்விற்கே உட்படுத்தாது மறைக்கும் குறை.

3. ஆண்பால் அனுபவங்கள் கொண்டே உலகுதழுவிய முடிவுகளை பெண்கள் குறித்த முடிவுகளைத் தரும் குறை.

மேற்காட்டியதன்படி ஜெயமோகன், பிரபஞ்சன் ஆகியோரிடம் மேற்காட்டிய குறைகளில் எண்1, 3 ஆகியன இருப்பது தெளிவு. எனவே பெண்படைப்பைப் பெண் அனுபவம் கொண்டு ஆய்தல் மேலும் சிறப்பான முடிவுகளைத் தரும் என்பதில் ஐயமில்லை.

ஜெயமோகன் குறைகளுக்கு முன்னுரிமை தந்து அவற்றை முதலில் .கர்ட்டிப் பின், நிறைகளைச் சுட்டுகிறார். முன்னர் காட்டிய குறைகளில் சில இங்கே நிறையாகக் காட்டப் பெற்றிருப்பது வியக்கத்தக்கதாக உள்ளது.

இதில் நாம் ஏறத்தாழ முற்றிலும் மறந்துபோன ஒரு காலகட்டத்தின் எளிய சித்திரம் உள்ளது.

தாசி வாழ்க்கையில் உள்ள இழிவுகள் அனைத்தையுமே தார்மீகக்கோபத்துடன் ஆசிரியை சொல்லிச் செல்கிறார்.

சமூக சேவகியின் சீற்றம் மிக்க குரலை நாவல் நெடுகிலும் கேட்கமுடிகிறது.

இந்நாவலின் சிறப்பாகச் சொல்லவேண்டியது இதில் தாசிகள் உலகின் தந்திரங்கள் சொல்லப்பட்டிருக்கும் விதத்தில் நுட்பமான உளவியல் அவதானிப்பு உள்ளது என்பதுதான்

இத்தகைய நுட்பங்கள் இன்றும் ஒரு வாசகனுக்கு மிக முக்கியமானவையே.

இவையெல்லாம் மூவலூர் ராமாமிர்தத்தம்மாள் நாவல் குறித்து ஜெயமோகனால் நிறைகளாகச் சுட்டப்படுகின்றன. மேற்காட்டியதில் இறுதியாய் இடம்பெற்றுள்ள பகுதி 'இன்றும் வாசகனுக்கு இந்நாவல் முக்கியமானது' என்பதைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். வாசகனுக்குத் தேவையானது ஒன்றும் இல்லை என்று குறைகாட்டிய ஜெயமோகன் அதையே நிறையாகக் காட்டிக் கருத்துரைப்பது வியப்பாக உள்ளது.

சீற்றம் மிக்க குரல் எனக்கூறும் ஜெயமோகன், அதனை பிரசங்கக்குரல் என முன்னர் குறைகூறியிருப்பது இங்கு ஒப்புநோக்க வேண்டிய ஒன்றாகும்.


குறைகளும், நிறைகளும் ஒன்றுக்குள் ஒன்றாய்க் கலந்திருக்கும் இந்நூல் அறிமுகம் இன்றைய வாசகனைக் குழப்புகிறது. மேலும் பெண்படைப்பினை (குறைகளை முன்வைத்ததன் மூலம்) குறைத்து மதிப்பிடுவதாகவே உள்ளது.

இருப்பினும் ஒரு பெண்படைப்புக்கான அடையாளம் இந்நாவலில் பல இடங்களில் உண்டு. குறிப்பாகப் பொட்டு கட்டும் வழக்கத்தை இந்நாவல் நடைமுறை நிகழ்வாக ஆக்கித்தந்துள்ளது. தாண்டியம் என்னும் பொட்டுக்கட்டும்போது நடைபெறும் சடங்கை முழுதும் இந்நாவல் விவரிக்கிறது. தாசிகள் என்ற பெண் சிக்கலைக் கருப்பொருளாகக் கொண்ட இந்நாவல் தமிழகப் பெண்ணுலகிற்குத் தனித்த படைப்புத்தன்மையை ஏற்படுத்தித் தந்துள்ளது. பெண்ணிய இலக்கியமாக இதனைப் பெண்ணிய வாதிகள் காணவேண்டும்.

○ ○ ○

துணை நூற்பட்டியல்

- இளங்குமரன். இரா, (ப.ஆ) காக்கைப் பாடினியம் மூலம்-விளக்கச் சிற்றுரை சைவசிந்தாந்த நூற்பதிப்புக்கழகம் 1974.
- கிருஷாங்கினி (தொ.ஆ), பறத்தல் அதன் சுதந்திரம், காவ்யா, சென்னை, 2001
- கோவிந்தசாமி , நட்ராஜ் (மொ), மார்க்சியம்-பெண்ணியம் உறவும் முரணும்,விடியல் பதிப்பகம். கோயம்புத்தூர், 1998
- சாரதாம்பாள், செ. பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண்எழுத்தும், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை. 2005
- சுசீலா எம். ஏ., பெண் இலக்கியம், வாசிப்பு சுப்பிரமணியம் ச.வே. (ப. ஆ) (சிறுகாக்கைப்பாடினியம்) தமிழ் இலக்கண நூல்கள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் 2007
- தூரன்.பெ. பாரதி தமிழ் வசனத் திரட்டு, நேஷனல் புக் டிரஸ்ட் புதுதில்லி, 1978 நீலாமபிகை அம்பிகை"முப்பெண்மணிகளின் வரலாறு(1928), பட்டினத்தார் போற்றிய மூவர்(1934),
- பழனியப்பன் மு., விடுதலைக்கு முந்தைய பெண்களின் நாவல்கள், பார்க்கர் பதிப்பகம், சென்னை, 2003.
- பழனியப்பன் மு., பெண்ணிய வாசிப்பு,காவ்யா பதிப்பகம், சென்னை, 2003.
- பாரதியார், பாரதியார் கவிதைகள், தென்றல் நிலையம், சிதம்பரம், 2006
- பெரியார் , பெண் ஏன் அடிமையானாள் ராமாமிர்தத்தம்மாள் மூவலூர் ஆ., தாஸிகள் மோசவலை அல்லது மதிபெற்ற மைனர்,பியர்ல் பிரஸ்,சென்னை, 1936.
- விசுவநாதன் சீனி., மணி டி. வி. எஸ்,.'சக்ரவர்த்தினி' கட்டுரைகள் வானவில் பிரசுரம் சென்னை, (செப்79)
- வெண்ணிலா, நீரில் அலையும் முகம்'(வெளியீடு: தமிழினி பதிப்பகம், 342. டி.டி.கே.சாலை.,சென்னை 14.) (1991)



நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்
41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர். சென்னை - 600 098.
2625 1968, 2625 8410, 2635 9906

ISBN: 978-81-234-1787-x
9788123417 87
Code No.:A2171 Rs.60.00